# அலைமொழி

## 4

கலாசாரப் பேரவை

தீவகம் வடக்கு பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාදේශීය ලේකම් කාර්යාලය DIVISIONAL SECRETARIAT
பிரதேச செயலகம்
දිවයින උතුර - කයිට්ස්
தீவகம் வடக்கு - ஊர்காவற்றுறை
ISLANDS NORTH - KAYTS

9. Soundara...
PILLAIAR KOVIL
ANALAITIVU

# அலைமொழி

# 4

வெளியீடு :

தீவகம் வடக்கு பிரதேச
கலாசாரப் பேரவை

பிரதேச செயலகம், தீவகம் வடக்கு,
ஊர்காவற்றுறை.

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

[stamp]

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அலைமொழி - 4 |
| நூலின் வகை | : | ஆண்டிதழ் |
| முதற் பதிப்பு | : | 2011 |
| பதிப்புரிமை | : | மலர்க்குழு |
| வெளியீடு | : | தீவகம் வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை. |
| தாள் வகை | : | 80gsm |
| அளவு | : | B5 |
| பக்கங்கள் | : | xvi + 104 |
| பிரதிகள் | : | 200 |
| நிதி அனுசரணை | : | வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| அச்சுப் பதிப்பு | : | எவகிறீன் அச்சகம், கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். தொ. பே. இல : 021 221 9893 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்துடைக்கினும் ஓர்
எல்லை அறுபரம் பொருள்முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுரத் தேயுதித்தே ஒன்று பல வாகிடினும்
ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையாவுன்
சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துமே!

**மனோன்மணீயம் — பெ.சுந்தரம்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி! எங்கள் தமிழ் மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை பிரதேச கீதம்

காவலூர் அம்மா நின் அடி பணிந்தோம்....... ஊர்
காவலூர் அம்மா நின் அடி பணிந்தோம். (காவலூர்.....)

கைப்பணி கருப்பணியும் கடல்வளமும் ...... மக்கள்
செய்பணி திறம்படவே திகழ்வளமும்
செப்பெரும் கல்வி வளம் கலை வளமும் .... இங்கு
ஒப்பெரும் புகழுடைய தனவளமும் ..... கொண்ட (காவலூர்.....)

எத்தனை இன்னல் கண்டும் எழுந்தவளே ..... எங்கள்
சொத்தென மானிலத்தில் திகழ்பவளே
இத்தனை சிறப்பெல்லாம் கொண்டவளே – நீ
எங்களின் உயிரம்மா உனையணிந்தோம் ......... நெஞ்சில் (காவலூர்.....)

புரட்டினோம் வரலாற்றுப் பதிவேட்டை – அதில்
உட்கார்ந் திருக்கிறதே கடற்கோட்டை
கரம்பொன் தம்பாட்டி சுருவிலொடு – அன்னை
அருளைப் பொழிகின்ற சின்னமடு
புளியங்கூடலொடு மெலிஞ்சி முனை ...... நெல்
கழனி தனுவிலொடு நாரந்தனை
அனலை எழுவைதனை அணைத்த படி ...... பழம்
பெருமை துறைமுகத்தை சுமந்தபடி ...... செல்லும் (காவலூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கலாசாரப் பேரவையின்
# நிர்வாக செயற்குழு விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | **தலைவர்** | : | **திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்,**<br>பிரதேச செயலர், பிரதேச செயலகம்,<br>ஊர்காவற்றுறை. |
| 2. | **உபதலைவர்** | : | **திரு க.ஜெயக்குமார்,**<br>ஊர்காவற்றுறை. |
| 3. | **செயலாளர்** | : | **திருமதி கா.நிருபா,**<br>கலாசார உத்தியோகத்தர்,<br>பிரதேச செயலகம்,<br>ஊர்காவற்றுறை. |
| 4. | **உபசெயலாளர்** | : | **திருமதி ஜெ. உதயகலா,**<br>இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,<br>பிரதேச செயலகம்,<br>ஊர்காவற்றுறை. |
| 5. | **பொருளாளர்** | : | **திரு ந. சத்தியரூபன்,**<br>கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,<br>பிரதேச செயலகம்,<br>ஊர்காவற்றுறை. |

**செயற்குழு உறுப்பினர்கள் :-**

1) **திரு சி. இராமச்சந்திரன்**
2) **திரு அ. பீற்றர்**
3) **திரு செ. யேசுதாசன்**
4) **செல்வி யே. மேரிஅஜந்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

**திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்,**
கலாசாரப் பேரவையின் தலைவரும்,
பிரதேச செயலரும், பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

**திரு க. ஜெயக்குமார்,**
உபதலைவர், பிரதேச கலாசாரப் பேரவை, ஊர்காவற்றுறை.

**திருமதி கா. நிருபா,**
கலாசாரப் பேரவையின் செயலாளரும்,
கலாசார உத்தியோகத்தரும், பிரதேச செயலகம்,
ஊர்காவற்றுறை.

**திரு ந. சத்தியரூபன்,**
கலாசாரப் பேரவையின் பொருளாளரும்,
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரும்,
ஊர்காவற்றுறை.

**திருமதி ஜெ. உதயகலா,**
கலாசாரப் பேரவையின் உபசெயலாளரும்,
இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரும்,
பிரதேச செயலகம்,
ஊர்காவற்றுறை.

**திரு க. வசந்தகோகுலன்,**
பொது முகாமைத்துவ உதவியாளர்,
பிரதேச செயலகம்,
ஊர்காவற்றுறை.

**திரு க. நேதானந்தன்,**
அபிவிருத்தி உதவியாளர்,
திட்டமிடல் கிளை.

**திரு த. சந்திரகுமார்,**
அபிவிருத்தி உத்தியோகத்தர்

**திருமதி அ. தே. ஆன் ஜஸ்மின்,**
அபிவிருத்தி உத்தியோகத்தர்.

**திரு க. நல்லைமாமணி,**
அபிவிருத்தி உத்தியோகத்தர்.

**திரு வீ. கணேஸ்,**
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழினுள்ளே....


**ஆசிச்செய்தி**

01. குருக்களின் ஆசிச்செய்தி ix
02. குருமுதல்வரின் ஆசிச்செய்தி x

**வாழ்த்துச் செய்தி**

03. வடமாகாண செயலாளரின் வாழ்த்துச்செய்தி xi
04. அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி xiii
05. வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி xiv
06. ஊர்காவற்றுறை பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி xv
07. மாவட்ட கலாசார உத்தியோகத்தரின் வாழ்த்துச்செய்தி xvii

**ஆக்கங்கள்**

08. பார்போற்றும் புகழ் ஈன்ற ஊர்காவற்றுறை 01
09. அனலைதீவு வரலாறு 06
10. நாரந்தனை தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 11
11. நேரம் நல்ல நேரம் 18
12. கலை மமுங்காக் களரி மெலிஞ்சிமுனை 22
13. எழுவைதீவும் அதன் சிறப்புக் கண்ணோட்டமும் 27
14. எழில் கொஞ்சும் காவலூர் 30
15. யா/ புனித அந்தோனியார் கல்லூரியில் சமூகம் பெற்ற நன்மைகள் 33
16. குறுக்குக் கடல் 37
17. மக்களாலேயே நாம் 42
18. சமுதாய வாழ்வில் கலையின் முக்கியத்துவம் 47
19. தண்ணீர்த்தொட்டி 50
20. பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனையின் முக்கியத்துவம் 64
21. மீள் நல்லிணக்க நடவடிக்கைகளும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின்... 68
22. கற்றல் கற்பித்தலில் அழகியல் பாடத்தின் செல்வாக்கு 73
23. அநாதை 76
24. இது மனித நேயம் 78
25. மரணம் தரும் மது 80
26. நாட்டில் இடம்பெற்ற யுத்தம் மற்றும் .......... 83
27. நாளையும் நலமுடன் நாம் வாழ 87
28. மக்களின் சக்தியே கூட்டுறவின் பலம் 91
29. வெளிநாட்டு மோகமும் சட்ட ரீதியற்ற செயற்பாடுகளும் 94
30. கலையின் ஆரம்பமும் தற்காலமும் 97
31. வெளி உலகம் காணாத வேட்டுவ இனம் 99
32. மலர்க்குழுவின் உள்ளத்திலிருந்து 104




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

## தீவகத்தின் சிறப்பு பேசும் அலைமொழி

கௌரவ ஊர்காவற்றுறை பிரதேச செயலர் மற்றும் பணி யாளர்கள் அனைவருக்கும் எமது நல்லாசிகள். இலங்கையில் பூர்வீகமாக, தமிழ் கலாசாரம், கலைவளர்ச்சி, வியாபார விவசாய முயற்சி, மீன்பிடித்துறை ஆகியவற்றால் சிறப்புறுவதும், அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு ஆகியவற்றின் தலைநகராகவும், கடல் அழகும் சூழல் சுற்றம் உடையதுமாக விளங்குவது ஊர்காவற்றுறை பட்டினமாகும். நான் சிறுவயதில், கரம்பொன்னிலும் பின் புளியங்கூடலிலும் வசித்து வேலணை மத்திய கல்லூரியில் கல்வி பயின்றதனால் இப்போதும் இப்பகுதியில் பற்றும் நண்பர்களும் உடையவன். இங்குள்ள மக்கள், நற்பண்பும், நிறைந்த பக்தியும், வியாபார விவசாய முயற்சியுடன் கலை வளர்ச்சி பெற்ற மோடி நாடகம், காத்தவராயர்கூத்து, கிறிஸ்தவ நாடகங்கள் தந்தவர்கள். அத்துடன் சைவ, கிறிஸ்தவ மக்கள் ஒருவரை ஒருவர் மதித்து அன்பாகப் பழகும் நல்லியல்புடையவர்கள். ஒல்லாந்தர் முதலான மேலைத்தேய ஆக்கிரமிப்பு, பின் எமது நாட்டு யுத்த சூழல் அனைத்தையும் எதிர்கொண்டு மனந்தளராமல் மீண்டும் நாட்டுப்பற்றுடன் தமது பகுதியை செப்பனிட்டு வீடுகளை அமைத்ததுடன், ஆலயங்கள், தேவாலயங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகளைப் புதுப்பித்து வாழும் சிறப்பை யும் பெற்றவர்கள். இவர்களின் கிராம வரலாறுகளும், கலை விழுமியங்களும் நூலாக தொகுக்கப்படுவது அவசியமானதாகும். இவ்வரிய பணியை மேற்கொள்ளும் கௌரவ பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா சதீசன் உள்ளிட்ட மலர்க்குழு, முதலான அனைத்து பணியாளர்களும் நன்றியுடன் போற்றப்பட வேண்டியவர்கள். எமது பாரம்பரியத்தின் தொன்மையை ஆவணப்படுத்தி இந்நூல் தந்து அலைமொழி சிறப்புறும் என மகிழ்ந்து கல்வியாளர், பொதுமக்கள் அனைவருக்கும் எமது நல்லாசிகளைத் தெரிவித்து மலர் வெளியீடு சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்**
*ஆதீனகுரு, கதிர்வேலாயுத சுவாமி கோவில்,*
*புளியங்கூடல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

"பேனா என்பது வாளை விட வலிமையானது." (The pen is mightier than the sword) என்று சொல்லப்படுகின்றது. எழுத்தின் வலுவோ எக்காலமும் நிலைத்து நிற்கும். ஆனால் வாளின் வலுவோ மிகக் குறுகிய காலமே நிலைத்து நிற்கும். ஒரு அரசன் ஒரு நாட்டை மட்டுமே ஆளுகின்றான். ஆனால் எழுத்தாளனோ தன் எழுத்தினால் முழு உலகையுமே ஆளுகின்றான். அந்த அளவுக்கு எழுத்துக்கும் நூல்களுக்கும் பலம் உண்டு. இந்த வகையில் எமது பிரதேசத்தின் மண் வாசனையையும் தொழில் சிறப்பினையும் தாங்கி வரும் "அலை மொழி - 04". இந்த பிரதேசத்தின் ஒரு மாபெரும் பொக்கிசமாகும். இந்த நூலானது இந்த பிரதேச வளர்ச்சி மற்றும் பிரதேசத்தில் உள்ள பிரச்சினைகள் என்பன பற்றி எமக்கு எடுத்து இயம்புகின்றது. இந்த நூல் பிரதேசத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, பலர் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. அது மாத்திரமல்ல இந்த நூல் பல எழுத்தாளர்களை உருவாக்கி யுள்ளது. இந்த முயற்சிக்கு ஆக்கமும் உற்சாகமுமளித்து நெறிப்படுத்திய பிரதேச செயலருக்கும், செயலகப் பணியாளர்களுக்கும் எனது நன்றிகள்.

**அருட்பணி. மனுவேல்பிள்ளை டேவிட்**
*தீவக மறைக்கோட்ட குருமுதல்வரும்*
*மண்டைதீவு - அல்லைப்பிட்டி பங்குத்தந்தையும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி



ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் பிரதேச மலரான "அலைமொழி 04" மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இம்மலரானது தீவகத்தின் பல்வேறு வளங்களை உள்ளடக்கிய ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசங்களின் கலை, கலாசாரம், பண்பாடு மற்றும் மக்களின் வாழ்க்கை முறைகளைத் தாங்கி வெளிவருவதுடன் சான்றுபகரக்கூடிய ஆவணமாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

பொருள்சார் மற்றும் பொருள்சாராப் பண்பாட்டு அம்சங்கள் அம் மக்களின் வாழ்க்கையின் பிரதிபலிப்புக்களாகவே காணப்படுகின்றது. இயற்கையுடனான வாழ்வென்பது அப்பிரதேசத்தின் வளங்களின் பயன்களை அனுபவித்தல் என்பதில் அடங்கிக்கொள்கின்றது. தீவகத்தின் தலைசிறந்த அம்சங்களை தங்களின் வாழ்க்கையாக இம் மக்கள் கொண்டுள்ளனர். ஒரு சமூகத்தின் நிலைப்பாடானது அதன் வாழ்க்கை முறைகளை அடுத்த தலைமுறையினருக்கு வழங்குவதில் நிலை கொண்டுள்ளது. மனிதன் ஒரு சமூகவிலங்கு. சமூகமெனும் சங்கிலியால் இறுக்கக் கட்டப்பட்டுள்ளான். அச் சமூகத்தின் செயற்பாடுகளில் இணைந்தே காணப்படும் மனிதன் தனது வாழ்க்கை முறைகளைப் பேணி பாதுகாத்து வருவதுடன் அதற்கான உரிமைகளையும் உணர்ந்துள்ளான். வாழ்வாதாரத்தின் அடிப்படைகள் எமது சமூகத்திலிருந்தே கிடைக்கின்றன. ஆகவே எமது சமூகத்தின் அடிப்படைகளையும், சிறப்பம்சங்களையும் ஆவணப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. இச் செயற்பாட்டை அலைமொழியினூடாக வெளிப்படுத்தியிருப்பது பாராட்டத்தக்கது.

சிறந்த மனிதப்பண்புடைய மனிதர்களை உருவாக்க வேண்டிய நிலைப்பாட்டை இன்றைய சமூக மாற்றங்கள் ஏற்படுத்தி கொடுத்துள்ளன. வாசிப்பும் கலையார்வமும் மனிதர்களை மனிதநேயப் பண்புடனும், பகுத்தறிவுடனும் செயற்பட உறுதுணையாய் அமையும். அந்தவகையில் ஒரு சமூகத்தின் பண்பாட்டு அம்சங்கள் மற்றும் வரலாறு போன்றவை காத்திரமானவை. பிரதேசத்திற்கான சிறப்புக்களும் அதன் விசேட அம்சங்களும் மறைந்திருக்கக்கூடும். அவற்றை வெளிப்படுத்தி அதனை பலரும் அறியச்செய்யும் முயற்சியாக இந்நூல் அமையும் என நம்புகின்றேன்.

காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இம்முயற்சியானது எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் பிரதேச அபிவிருத்தியின் முக்கிய பதிவாக இருக்கும் என்பது பேருண்மையாகும். இம்மலரானது தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி.சத்தியசீலன்**
*செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி



தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலக பண்பாட்டு மலர் “அலை மொழி -04” க்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன். ஒவ்வொரு பிரதேசமும் தனக்குரிய பண்பாடு, கலை, கலாசார விழுமியங்களை ஆவணப்படுத்தும் நன்முயற்சியாக வருடாந்தம் பண்பாட்டு மலரினை வெளியிட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. அந்த வகையில் “அலைமொழி 04” ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களை மட்டுமன்றி பல்வேறு அரிய விடயங்களையும் ஆவணப்படுத்தும் வகையில் அமைகின்றது. இம் மலரில் மெலிஞ்சிமுனை கிராமத்தின் தென்மோடி நாட்டுக்கூத்தின் வளர்ச்சி, தீவகத்தின் விவசாயம், அனலைதீவின் வரலாறு, கலையின் ஆர்வமும் தற்காலமும், எழுவை தீவின் வரலாறு, ஊர்காவற்றுறையின் சிறப்புக்களை எல்லாம் தனக்கேயுரிய மண் வாசனையின் அடிப்படையாக விளங்கும் வகையில் ஆக்கங்களையும் அதன் சிறப்புக் களையும் எடுத்துக்கூறுவதாக அமைகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

“அலைமொழி - 04” அனைவரது கரங்களிலும் தவழ அயராது உழைத்த பிரதேச செயலர், கலாசாரப் பேரவையினர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரை யும் பாராட்டி அலைமொழி சிறப்புடன் வெளிவர என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா. வேதநாயகன்**
*அரசாங்க அதிபர்,*
*மாவட்டச் செயலாளர்,*
*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள
உதவிப்பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீபகற்பங்களின் வரலாற்றுப் பொக்கிசமாய்த் திகழும் ஊர்காவற்றுறை பிரதேசமானது இந்து சமுத்திரத்தின் மையப்பகுதியில் வரலாற்றுப்பொக்கிசங்களையும் சுற்றுலா மையங்களையும் தன்னகத்தே கொண்டமைந்த பண்பாட்டிருப்பிடமாய் விளங்குகின்றது. இப் பிரதேச மக்கள் தமக்கே உரித்தான இயற்கை வழிபாடுகள், கலாசார பண்பாடுகளுடன் வாழ்ந்து வருவதோடு தமது பாரம்பரிய கலைகளை வளர்ப்பதிலும் ஆர்வம் காண்பிக்கின்றனர். இத்தகைய பண்பாட்டு பாரம்பரியத்தை அடையாளப்படுத்தும் பிரதேச கலாசாரப் பேரவையானது வெளியிடும் நான்காவது இதழான அலைமொழி மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடை கின்றேன்.

பண்பாட்டு வளர்ச்சிக்காகவும் எமது பிரதேசத்திற்குரிய கலை, வரலாறு, தொல்லியல், ஆன்மீக பாரம்பரியங்களை அழியவிடாது அவற்றை பாதுகாத்து ஆவண மாக்க வேண்டியது எமது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். அந்தவகையில் பிரதேச கலைஞர்கள், ஆய்வாளர்களிடமிருந்து ஆக்கங்களைப் பெற்று பிரதேசத்தின் பண்பாட்டு மலர்ச்சி, ஆன்மீகம் மற்றும் பொருளாதாரம், கல்வி, சமயம் போன்ற இன்னோரன்ன விடயங்களை உள்ளடக்கிய மலராக இம் மலரை பிரதேச கலாசாரப் பேரவை வெளியிடுகின்ற முயற்சிக்காக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களம் அனுசரணை வழங்கியும் ஊக்குவித்தும் வருகின்றமை சிறப்புக்குரியது.

இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களிடையே வாசிப்பு ஆர்வம் குறைந்து காணப்படுவதால் இவ்வாறான மலர்கள் மறுபடியும் வாசிப்பு ஆர்வத்தை தூண்டும் என்பதால் இம்மலர் வெளியீடு வரவேற்கத்தக்கது. இம்மலர் வெளியீட்டுக்கு முயற்சி எடுத்த பிரதேச செயலாளர் மற்றும் கலாசார உத்தியோகத்தர், கலைஞர்கள், ஆய்வாளர்கள் அனைவரையும் பாராட்டி நிற்பதுடன் அலைமொழி -04 சிறந்த ஆய்வு நூலாக திகழ வேண்டுமென வாழ்த்து தெரிவிக்கின்றேன்.

**அபிராமி பாலமுரளி**
*உதவிப்பணிப்பாளர்,*
*பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலரின்

# வாழ்த்துச் செய்தி



இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப் போற்றப்படும் ஈழமணித் திருநாட்டின் யாழ்மாவட்டப் பகுதியை அலங்கரித்து, அணி செய்பவையாக சப்த தீவுக் கூட்டங்கள் விளங்குகின்றன. இத்தீவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனித்துவத்தையும் வரலாற்றுச் சிறப்பினையும் கொண்டு துலங்குகின்றன. சப்த தீவுகளுக்குள் நீண்ட தீவாகிய லைடன் தீவின் வடபகுதி நிலப்பரப்பில் ஊர்காவற்றுறை காணப்படுகின்றது. ஏழு தீவுகளும், நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளாக ஆழப்பட்டு வரும் நிலையில், ஊர்காவற்றுறை, தீவகம் வடக்கு என்னும் பிரதேச செயலகமாக பதினைந்து உட்பிரிவுகளைக் கொண்டு பிரிக்கப் பட்டுள்ளது. இவற்றுள் "பொன்விளையும் பூமியாக" விளங்கிய கரம்பொன்னும், "நாரன் என்பவன் தன் தானை சேனைகளோடு ஒன்றுகூடிய இடமாகிய "நாரந்தனையும், "மன்னார் பெரியமடுவை" ஒத்த சின்னமடு மாதா தேவாலயத்தைக் கொண்ட சின்னமடுவும், புளிய மரங்கள் கூடலாக வளர்ந்து செறிந்திருந்த புளியங்கூடலும், வளைந்த வடிவமுடைய சுருவிலும் (சுரி + வில்), மெலிஞ்சிமுனையும், தம்பாட்டியும், பருத்தியடைப்பும், சூரியன் அஸ்தமிக்கும் திசையிலுள்ள எழுவைதீவும் (எழுவான் + தீவு), கடலை அணைசெய்யும் கற்களால் சூழப்பெற்ற அனலைதீவும் (அணை + தீவு), அதனோடு இணைந்த பருத்திச் செடிகள் பயிரிடப்பட்ட பருத்தித்தீவும், புளியந்தீவும் உள்ளடங்கி நிற்கின்றன.

அந்தவகையில், இவ் ஊர்களை மாத்திரமன்றி, சப்ததீவுகள் யாவற்றையுமே காவல் செய்யும் ஊராய் விளங்கிய காவலூர் கடற்பாதுகாப்பிற்கான காவலரண் மாத்திர மன்றி பண்பாட்டிற்கும், காண்பியக் கலைகளாகிய கட்டட, சிற்பக் கலைக்கும், ஆற்று கைக் கலைகளாகிய நாடகம், கூத்து கலைகளிற்கும் காவலரணாய் விளங்கிய தென்றால் மிகையாகாது.

இவ்வாறான பெருமை கொண்ட ஊர்காவற்றுறையில் வாழ்ந்த மக்கள் திரைகடல் ஓடி திரவியம் தேடியவர்கள் மாத்திரமல்ல, கலை அழகியலிலும் காவியம் படைத்தவர்கள். இத்தகு கலைச்சிறப்போடு கூடிய பண்பாட்டுச் சிறப்புக்களுடன் விளங்கிய ஊர்காவற்றுறையின் வரலாறும் பழம் பெருமை வாய்ந்ததென்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிகாசங்களும், பாரம்பரியங்களும் இயம்பி நிற்கின்றன. பெருங்கற் பண்பாட்டுக் காலத்திலேயே ஆரம்பிக்கின்ற தீவக வரலாறு பல்வேறுபட்ட சுவாரசியமான கதைகளைத் தன்னுள்ளே தாங்கியுள்ளது. இராம, இராவண யுத்தத்திலே இராமனை மயக்க நிலையிலிருந்து காப்பாற்றுவதற்கு அனுமனால் தூக்கிவரப்பெற்ற சஞ்சீவி மலையிலிருந்து உதிர்ந்த துகழ்களே தீவுக்கூட்டங்கள் என்பது இந்து பாரம்பரியக் கதையாகும். பௌத்த பாரம்பரியத்தில் புனித இடங்களாக தன்னிதிவயின (ஊர்காவற்றுறை), அக்கினிதிவயின (அனலைதீவு) விளங்கியுள்ளமையும், ஆரம்ப நாகரிகத்தவர்களின் விருட்ஷங்களை பூஜிக்கும் யக்ஷ வழிபாட்டு மரபும் இங்கு காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கத்தோலிக்க வரலாற்றுப் பாரம்பரியத்தில் இயேசு பிறப்பைக் காணச் சென்ற மூன்று அரசர்களில் "கறுப்பு மேகஸ்" எனப்படும் "கஸ்பார் பெரியபெருமாள்" ஊர்காவற்றுறையிலிருந்தே சென்றதாகக் கத்தோலிக்கப் பாரம்பரியம் கூறுகின்றது. அத்தோடு கத்தோலிக்க சொருபங்கள் (சிற்பங்கள்), உடக்குகள் (பொம்மை பாஸ் நாடகங்களிற்கான சிற்பங்கள்) செய்யும் கலைதேர்ந்த மேஸ்திரிகள் (சிற்பிகள்) வாழ்ந்த பிரதேசமாக விளங்கியுள்ளமை என்பது வரலாற்றில் அழிக்கப்படாத அலகுகளாகும். இத்தகு சிறப்புடைய பிரதேசத்தின் வரலாற்றையும் கலைப்பொக்கிஷங்களையும் எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாத்து வழங்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். அந்தவகையில் ஒவ்வொரு வருடமும் வெளிவரும் அலைமொழி என்ற இந்நூல் இதற்கு அணிசேர்க்கும் வகையில் அமைகின்றது. அலைகளின் ஓசையின் நான்காவது பிரலாபமாகிய இந்நூல் தொடர்ந்து வளரவும், வரலாற்றின் பொக்கிஷமாக தொடர்ந்து மிளிரவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**திருமதி. சதீஷன். மஞ்சுளாதேவி**
*பிரதேச செயலரும்,*
*கலாசார பேரவைத் தலைவரும்,*
*பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுத் தொன்மைமிகு பிரதேசத்தின் அலைமொழி - 4
தேனமுதாய்த் திகழட்டும்.

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண குடாநாட்டின் தீபகற்பமாய்த் திகழும் தீவகம் வடக்கு பிரதேசமானது கடலும் கடல் சார்ந்த நெய்தல் பிரதேசத்தி லிருந்து பண்பாட்டு வளர்ச்சிக்காக பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தின் நிதிப்பங்களிப்போடு தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் முன்னெடுக்கப்படுகின்ற அலைமொழி - 4 நூல் வெளியீடு சிறப்பாக அமைவதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனையிட்டு மகிழ்வடை கின்றேன்.

வாழ்நாளில் தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியினை கலைக்காக அர்ப் பணித்து வாழ்ந்த கலைஞர்களை அவர்கள் வாழும்போதே வாழ்த்துவது தான் மனிதப் பண்புகளில் மிகச் சிறந்த தொன்றாகும். அந்த வகையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக கலாசாரப் பேரவையானது வருடந்தோறும் முன்னெடுத்து வருகின்ற பண்பாட்டு ஆவண நூல் வெளியிடும் முயற்சியானது சிறப்பானதொரு விடயமாகும்.

பிரதேசத்தின் பண்பாட்டிருப்பினை ஆவணப்படுத்தும் வகையில் பிரதேச கலைஞர்கள், படைப்பாளிகளை உள்ளடக்கி தரமான படைப்புக்களுடன் பண்பாட்டு மலராக பிரதேச ஆவணமாக முகிழ்த்து நிற்பது பாராட்டிற்குரியதாகும்.

இம்மலர் சிறப்பான முறையில் வெளிவருவதற்காக அயராது செயற்பட்டுவரும் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் மலர்க்குழுவினர் அனைவரை யும் பாராட்டி நிற்பதுடன் அலைமொழி - 4 வரலாற்றில் தடம்பதிப்பதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மா.அருள்சந்திரன்,**
*மாவட்ட கலாசார உத்தியோகத்தர்,*
*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலக உத்தியோகத்தர்கள்



**இடமிருந்து வலம் இருப்பவர்கள் :** திரு.ந.வரதயோகர் (ஆளணி உதவியாளர்), திருமதி.த.ஆர்த்தி (மேலதிக மாவட்ட பதிவாளர்) திருமதி.யோ.ராகினி (சமுர்த்தி முகாமையாளர்), திரு.வீ.சிவகுமார் (உதவி திட்டமிடல் பணிப்பாளர்), திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் (பிரதேச செயலாளர்), திரு.தி.திருவருட்செல்வன் (கணக்காளர்), திரு.கு.சுதர்ஷன் (நிர்வாக உத்தியோகத்தர்), திருமதி.ந.சுதர்மினி (சமுர்த்தி முகாமையாளர்), திருமதி.கா.நிருபா (கலாசார உத்தியோகத்தர்), திரு.சோ.சிவகணேசன் (நிதி உதவியாளர்)

**நிற்பவர்கள் 1ம் வரிசை :** திருமதி. நி. நவவித்திஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), செல்வி.ந.கிருஷாந்தி (பட்டதாரிப் பயிலுனர்), செல்வி.ந.மேரிசெலஸ்ரீனா (பட்டதாரிப் பயிலுனர்), செல்வி.அ.ரேணுகா (பொது முகாமைத்துவ உதவியாளர்), திருமதி.வி.வினோஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), செல்வி.இ.ராஜினி (பொது முகாமைத்துவ உதவியாளர்), செல்விகெ.வினோஜா (பொது முகாமைத்துவ உதவியாளர்), திருமதி.ரா. பகீரதி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.பி.சுலக்ஷனா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.கீ.ஜோசப்பின் சாந்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.ரி.யசோதா (பொது முகாமைத்துவ உதவியாளர்), செல்வி.சி.சம்பூரணி (பட்டதாரிப் பயிலுனர்), செல்வி.ர. துஸ்யந்தி (பட்டதாரிப் பயிலுனர்), செல்வி.உ.ஜெபப்பிரியா செல்வி.பே.சஜிதா (பட்டதாரிப் பயிலுனர்), செல்வி.வை.ரஞ்ஜினி (பட்டதாரிப் பயிலுனர்), செல்வி.சு.சுகிர்தா (பட்டதாரிப் பயிலுனர்)

**நிற்பவர்கள் 2ம் வரிசை :** திரு.ச.அன்ரன் (அலுவலக உதவியாளர்), திரு.பா.பிரதீபன் (பொது முகாமைத்துவ உதவியாளர்), திரு.க.வசந்தகோகுலன் (பொது முகாமைத்துவ உதவியாளர்), திரு.சி.ரிசாந்தன் (பொது முகாமைத்துவ உதவியாளர்), திரு.செ.பிருந்தாபன் (பொது முகாமைத்துவ உதவியாளர்), திரு.நவநீதன் (பட்டதாரிப் பயிலுனர்), திரு.க.கிருஷாந்தன் (பொது முகாமைத்துவ உதவியாளர்), திரு.செ.அமல்ராஜ் (பொது முகாமைத்துவ உதவியாளர்), திரு.செ. சுதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.ச.சுரேஸ்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.கி. தர்ஷன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.வை.ஞானசேகரன் (அலுவலக உதவியாளர்), திரு.இ.சிவகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.ஜெ. முகுந்தன் (சாரதி), திரு.சி. தினேஷ் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு . த. விஜிதரன் (பொது முகாமைத்துவ உதவியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இடமிருந்து வலம் இருப்பவர்கள் :** திருமதி.த.ஆர்த்தி (மேலதிக மாவட்ட பதிவாளர்), திருமதி.யோ.ராகினி (சமுர்த்தி முகாமையாளர்), திரு.வீ.சிவகுமார் (உதவித்திட்டமிடல் பணிப்பாளர்), திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் (பிரதேச செயலாளர்), திரு.தி. திருவருட்செல்வன் (கணக்காளர்), திரு.கு.சுதர்ஷன் (நிர்வாக உத்தியோகத்தர்), திருமதி.ந.சுதர்மினி (சமுர்த்தி முகாமையாளர்), திருமதி.கா.நிருபா (கலாசார உத்தியோகத்தர்)

**நிற்பவர்கள் 1ம் வரிசை :** செல்வி.சி.யோகராணி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), செல்வி.சு. நவீனா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.ர.மதியழகி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), செல்வி.பா. பாலேந்தினி (பொது முகாமைத்துவ உதவியாளர்), செல்வி.சீ.விப்ரரூபா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.ஜோ. துஸ்யந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.அ. மேவிஸ் ஜீன்சியா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.க.நேதானந்தன் (அபிவிருத்தி உதவியாளர்), திரு.க.ரகுமான் (பொது முகாமைத்துவ உதவியாளர்), திரு.உ.வதனராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.ப.துஸ்தரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு வி. விஜயராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு க. சுதாகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.லோ. லாவண்யன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) , திருஅ. யோகேஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**நிற்பவர்கள் 2ம் வரிசை :** திரு.மு.சஞ்சீவன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) , திரு.கா. சுதர்ஷன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) திரு.கி.தனுசியன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) , திரு.ஜே.கொண்மக்காரியஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.தி.மங்களேஸ்வரன் (அபிவிருத்தி உதியாளர்), திரு.க.மயூரதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.ஆ. லெனென்ஸ் நிலோசன், (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.பொ.ஜெயரூபன் (அபிவிருத்தி உதவியாளர்), திரு. ம ரஜீவ் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இடமிருந்து வலம் இருப்பவர்கள் :** திருமதி.த.ஆர்த்தி (மேலதிக மாவட்ட பதிவாளர்), திருமதி.யோ.ராகினி (சமுர்த்தி முகாமையாளர்), திரு.வீ.சிவகுமார் (உதவிதிட்டமிடல் பணிப்பாளர்), திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் (பிரதேச செயலாளர்), திரு.தி.திருவருட்செல்வன் (கணக்காளர்), திரு.கு.சுதர்ஷன் (நிர்வாக உத்தியோகத்தர்), திருமதி.ந.சுதர்மினி (சமுர்த்தி முகாமையாளர்), திருமதி.கா. நிருபா (கலாசார உத்தியோகத்தர்)

**நிற்பவர்கள் 1ம் வரிசை :** திருமதி.அ.தே.ஆன் ஜஸ்மின் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.ஆ.ஜெஸ்மின் கார்மேலா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), செல்வி.இ.சிந்துசா (சமூக சேவைகள் உத்தியோகத்தர்), செல்வி.சு.நிதனாஞ்சலி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.ப.உஷா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.ஜெ.உதயகலா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.அ.ஏஞ்சலின் றோமி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), செல்வி.அ.றெ.ஜெனிபர் சரண்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.கு.மேனகா (புலனாய்வு உத்தியோகத்தர்), திருமதி.க.நல்லைமாமணி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.தி.கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), செல்வி.சி.துஷானி (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.லோ.கிருஸ்ணவேணி (திறன் அபிவிருத்தி உதவியாளர்)

**நிற்பவர்கள் 2ம் வரிசை :** திரு.ந.சத்யறூபன் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.ச.ரேகபாகர் (இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்), திரு.கு.விக்னராஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.இ.சசிக்குமார் (புள்ளி விபர உத்தியோகத்தர்), திரு.சி.அகிலன் (தொழில்நுட்ப உதவியாளர்), திரு.பே.சக்திவேல் (விளையாட்டு உத்தியோகத்தர்), திரு.வே.விஜயநேசன் (காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர்), திரு.த.சந்திரகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.இ.தவக்குமாரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.ஸ்ரீ.செந்தூரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர்கள்



**இடமிருந்து வலம் இருப்பவர்கள் :** திருமதி.த.ஆர்த்தி (மேலதிக மாவட்ட பதிவாளர்), திருமதி.யோ.ராகினி (சமுர்த்தி முகாமையாளர்), திரு.வீ.சிவகுமார் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர்), திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் (பிரதேச செயலாளர்), திரு.தி. திருவருட்செல்வன் (கணக்காளர்), திரு.கு.சுதர்ஷன் (நிர்வாக உத்தியோகத்தர்), திருமதி.ந.சுதர்மினி (சமுர்த்தி முகாமையாளர்), திருமதி.கா.நிருபா (கலாசார உத்தியோகத்தர்)

**நிற்பவர்கள் :** செல்வி.இ.மேரி ஜெனுஜா (கிராம உத்தியோகத்தர்), திரு.ம.டினேஸ் (கிராம உத்தியோகத்தர்), திரு.மி. புருஷோத்தமன் (கிராம உத்தியோகத்தர்), திரு.அ. பஸ்ரியன் (கிராம உத்தியோகத்தர்), திரு.நா. தர்சன் (கிராம உத்தியோகத்தர்), திரு.வி. றொ. செ. ஜோண்சன் (கிராம உத்தியோகத்தர்), திரு.இ. சிறீஸ்கந்தராசா (கிராம உத்தியோகத்தர்), திரு.அ.ஆரூரன் (கிராம உத்தியோகத்தர்), திரு.சி.வினேஸ் (கிராம உத்தியோகத்தர்), திரு.தே. பாலச்சந்திரன் (கிராம உத்தியோகத்தர்) , திரு.அ. பிறின்ஸன் (கிராம உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இடமிருந்து வலம் இருப்பவர்கள் :** திருமதி.த.ஆர்த்தி (மேலதிக மாவட்ட பதிவாளர்), திருமதி.யோ.ராகினி (சமுர்த்தி முகாமையாளர்), திரு.வீ.சிவகுமார் (உதவி திட்டமிடல் பணிப்பாளர்), திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் (பிரதேச செயலாளர்), திரு.தி.திருவருட்செல்வன் (கணக்காளர்), திரு. கு. சுதர்ஷன் (நிர்வாக உத்தியோகத்தர்), திருமதி.ந.சுதர்மினி (சமுர்த்தி முகாமையாளர்), திருமதி.கா. நிருபா (கலாசார உத்தியோகத்தர்)

**நிற்பவர்கள் 1ம் வரிசை :** திரு.நா.தயாளன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.நி.புஸ்பவாணி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.ம. தர்மினி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.யூ.புஸ்பராஜி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்) திருமதி.க. மிதுலா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.சிந்துசா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.வி.நிஷாந்தினி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.சி.மோகனாங்கி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), செல்வி.பு.திவ்யா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.அ.யூக்கறஸ்ரா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.கோ.கருணாகரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்) திரு.வீ.கணேஸ் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**நிற்பவர்கள் 2ம் வரிசை :** திருமதி.பு.பகீரதி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), செல்வி.டே.கிறிஸ்ரீனா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.லெ.சென் சலோமி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), செல்வி.ச.பானுஸா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.செ.ராதிகா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.ஜெ.ரம்பா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), செல்வி.ம.மரீன் தர்மிகா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசாரப் பேரவை செயற்குழு உறுப்பினர்கள்



இடமிருந்து வலம் இருப்பவர்கள் : திரு. அ. பீற்றர் (உறுப்பினர்), திரு. க. ஜெயக்குமார் (உபதலைவர்), திருமதி. மஞ்சுளாதேவி சதீஷன் (தலைவர்), திரு. செ. யேசுதாசன் (உறுப்பினர்), திரு. சி. இராமச்சந்திரன் (உறுப்பினர்)

நிற்பவர்கள் : திருமதி. ஜெ. உதயகலா (உபசெயலாளர்), திரு. ந. சத்தியரூபன் (பொருளாளர்), திருமதி. கா. நிருபா (செயலாளர்), செல்வி. யோ. மேரி அஜந்தா (உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பார் போற்றும் புகழ் கொண்ற ஊர்காவற்றுறை

**வடக்கு மாகாணத்தின் அணிகலன்களில் ஆதர்சனமான மாவட்டம் யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்திற்கு நீண்ட பெரும் நெருங்கிய தொடர்பைக் கொண்டமைந்த பிரதேசம் தீவகம். தீவகத்தின் சிறப்புக்களையும் தனித்துவ அடையாளங்களையும் வெளிப்படுத்திய பகுதி ஊர்காவற்றுறை. புவியியல் ரீதியாக தீவகப் பிரதேசம் யாழ்ப்பாணத்தில் இருந்து வேறுபட்ட பண்புகளை கொண்டமைந்த போதிலும் வரலாற்று நோக்கி இலங்கை முழுவதும் துறை சார்ந்த நிலையில் மிக நெருங்கிய தொடர்பை கொண்டுள்ளது.**

**காவலூர் இ. விஜேந்திரன்**
BFA, PGDE, Dip.in.mass Media, MED (R)
*நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.*

## அறிமுகம் :-

ஊர்காவற்றுறை பிரதேசமானது கரம்பொன் பருத்தியடைப்பு, மெலிஞ்சி முனை, ஊர்காவற்றுறை, சுருவில், நாரந்தனை, தம்பாட்டி ஆகிய இடங்களை உள்ளடக்கிய பிரதேசமாகும். கத்தோலிக்க இந்து சமயத்தவர்களைக் கொண்டுள்ள இப் பகுதிகளில் விவசாயம் கடற்றொழில் ஜீவனோபாய தொழில்களாக இருந்த போதிலும் வர்த்தகத்தில் அனேகர் பெரும் தொழில் அதிபர்களாக உள்ளனர். இப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் பெரும் வர்த்தகர்களாக இன்றுமுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறையில் ஆன்மீகம், அரசியல், வணிகம், கல்வி மற்றும் கலைச்செழுமை மிகு செயற்பாடுகள் பெருமுனைப்பில் முன்னெடுக்கப்பட்டன. ஆன்மீகம், அரசியல், கல்வி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளில் இலங்கைக்கு பெருமை சேர்த்தவர்கள் தீவகத்து மைந்தர்களே. தீவகத்தை சேர்ந்தவர்களில் 25 பேராசிரியர்கள் உள்ளனர். மத்திய, மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களாக 6 பேரும் நிர்வாக அதிகாரிகளாக பலருமுள்ளனர்.

இலங்கையின் கத்தோலிக்க சமய வரலாற்றில் தாய் திருச்சபை தலை வணங்கும் பிரதேசம் ஊர்காவற்றுறை. ஏனென்றால் இப்பகுதியில் இருந்து 6 ஆயர்கள் தெரிவாகினர். வடக்கு கிழக்கில் உள்ள மறை மாவட்டங்களை இவர்களே அலங்கரித்தனர். தொடர்ந்தும் அலங்கரித்து வருகின்றனர். தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த பேராயர்களில் 3 பேர் தீவகத்தைச் சேர்ந்தவர்கள். தீவகத்தின் தனித்துவம் உலகறியப்பட்டமைக்கு இவ்வாறான பல சான்றுகளை முன்வைக்க முடியும்.

தீவகத்தின் இன்றைய நிலை மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அண்மித்த செயற்பாடுகள் இனி வரும் இரண்டு தசாப்தங்களிலான வெளியீடுகள் எவ்வாறு அமையும் என்பதை கடவுள் தான் தீர்மானிக்க வேண்டும். இருந்தாலும் கூட இடப்பெயர்வினால் தீவகத்திலிருந்து வெளியேறியவர்களும் புலம்பெயர்ந்த தேசங்களிலுள்ளவர்களும் தீவகப் பிரதேசங்களின் அடுத்த நிலை பற்றிச் சிந்திப்பது அவர்களது கடமை மட்டுமன்றி காலத்தின் தேவையும் கூட.

## பெயர்வரக் காரணம்

ஊரைக் காவல் செய்யும் வகையில் துறைமுகம் அமைந்த படியால் ஊர்காவற்றுறை என்ற பெயர் இன்று வரை வழக்கிலிருந்து வருகின்றது. முன்பு ஊரான் தோட்டம் என்ற பெயர் வழங்கப்பட்ட போதும் பன்றிகளை ஏற்றிய துறை என்ற படியால் ஊறா தோட்ட (சிங்களத்தில் ஊறா என்பது பன்றியைக் குறிக்கின்றது) என்பதும் ஊர்காவற்றுறையைக் குறிப்பதாகவே அமைந்தது. இவை இவ்வாறு இருக்க காலணித்துவ ஆட்சியாளர்களின் ஆதிக்கத்துக்கு பின்னர் கயிற்ஸ் என்ற சொல்லே வழக்கத்திற்கு வந்தது. இன்று வரை இப்பெயரே பயன்பாட்டில் உள்ளது.

போத்துக்கீச மொழியில் கேயிஸ் என்பது துறைமுகத்தை குறிப்பதாக உள்ளது. கேயிஸ் என்ற சொல்லே ஆங்கிலேயர் ஆட்சியில் கயிற்ஸ் ஆக மாறி இன்று வரை ஊர்காவற்றுறைக்குரிய ஆங்கிலப் பதமாக வழக்கிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. காலப் போக்கில் படைப்பாளிகள், கலைஞர்கள் தமக்கான அடையாளமாக ஊர்காவற்றுறை என்பதை காவலூர் என தமது பெயர்களுக்கு முன்பாக எழுதத் தொடங்கினர். ஊர்காவற்றுறையை அலங்கரித்த தீந்தமிழ்ப் பாவலர் ஞா.ம.செல்வராசா அவர்களே முதன் முதலாக தமது பெயருக்கு முன்னால் காவலூர் என்ற அடை மொழியை வரித்துக் கொண்டவர் என்பது பலர் அறியாத உண்மை.

## துறை முகம்

வடகீழ் தென்மேல் பருவங்கள் இரண்டிலும் பாதுகாப்பான இயற்கையாக அமைந்த பண்டைய சிறப்புமிக்க துறைமுகம் என்ற பெருமைக்குரியது. 1950 ஆம் ஆண்டு வரை கொழும்பு துறைமுகத்திற்கு அடுத்ததாக சுங்கப் பகுதியினருக்கு பெரும் வருமானம் பெற்று தரும் துறைமுகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் இருந்துள்ளது. 16 ஆம் நூற்றாண்டில் பிரான்சிஸ் சேவியர் அடிகளார் இத் துறை முகத்தில் வந்திறங்கியே கத்தோலிக்க சமய மதம் பரப்பும் பணியை மேற்கொண்டதாக வரலாற்று ஆதாரங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

6ஆம் பராக்கிரமபாகு மன்னன் யாழ்ப்பாண அரசை வெற்றி கொண்டு ஊர் காவற்றுறை துறைமுகத்தை அதிகளவில் பயன்படுத்தியவன் என்ற வரலாற்றுப் பதிவும் உண்டு. இயற்கையாக அமைந்த துறைமுகம் பருவ காலங்களில் பாதுகாப்பா னது என்ற காரணத்தால் பாரிய கப்பல்கள் படகுகள் எந் நேரமும் வணிகச் செயற்பாடு களில் ஈடுபட்டன. கடல் வணிகம் தமிழ் நாடு தொடங்கி தென்னாசியா வரை நீண்டது. இதனால் ஊர்காவற்றுறை பெரும் வணிக நகரமானது. இக் காலங்களில் பண்டமாற்று வர்த்தகச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டன. (கேரளாவுக்கு புகையிலையை அனுப்பி அங்கிருந்து அரிசியைப் பெற்றனர்)

பல்வேறு வணிக செயற்பாடுகள் கடல் மார்க்கமாக மேற்கொள்ளப்பட்டன. காளை மாடுகளின் இறக்குமதி மிகப் பெருமளவில் இடம்பெற்ற துறைமுகமாக ஊர்காவற்றுறை துறைமுகமே இருந்துள் ளது. இறக்குமதி செய்யப்படுகின்ற காளை மாடுகள் ஊர்காவற்றுறை மேற்குப்பகுதி யில் அமைந்திருந்த மாட்டுக்காளையில் தடுத்து வைத்து நோய்த்தடுப்பு செய்யப்பட்ட பின்னரே ஏனைய இடங்களுக்கு விற்ப னைக்காக கொண்டு செல்லப்பட்டன. இத் துறைமுகம் பிரித்தானியரது ஆட்சிக்காலத் தில் பெரும் சிறப்புமிக்க இடமாக விளங்கி யமை வரலாறுகள் மூலமாக அறிய முடிகி றது.

## கோட்டைகள்

ஊர்காவற்றுறையில் இரு வேறு ஆட்சியாளர்களினால் இரு வேறு காரணங் களில் கடலிலும் தரையிலும் கோட்டைகள் அமைக்கப்பட்டன. "பழங்கோட்டை" கரம் பொன் வடக்கு பிரதேசத்தில் போர்த்துக்கீச ரால் இக் கோட்டை அமைக்கப்பட்டது. இலண்டன் பல்கலைக்கழக பேராசிரியர் C.R.பொக்ஸர் போர்த்துக்கீசரின் கோட்டை கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள இலங்கை வந்தவர். இலங்கையில் பல இடங்களிலும் ஆய்வுகளை மேற்கொண்ட இவர் ஊர்காவற்றுறை வந்து பழங் கோட்டை தொடர்பான ஆய்வுகளை நடாத்தி யமை குறிப்பிடத்தக்கது.

அழிவடைந்து சிறுசிறு கற்குவியல்க ளாக இக் கோட்டை கவனிப்பாரின்றி சுய மிழந்து வருகின்றமை கண்கூடு. "ஹமன் ஹீல்" என்ற கடற்கோட்டை ஒல்லாந்தரி னால் அமைக்கப்பட்டது. ஊர்காவற்றுறைக் கும் காரைநகருக்கும் இடையில் கடலில் அமைக்கப்பட்ட இக்கோட்டை அண்மைய காலங்களில் புனரமைக்கப்பட்டு சுற்றுலா விடுதியாக செயற்படுத்தப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. 1991 ஆம் ஆண்டு இடப்பெயர்விற்கு பின்னர் இலங்கை இராணுவத்தினரால் பராமரிக்கப்பட்டு வர்த்தக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விப் பாரம்பரியம்

கத்தோலிக்க, இந்து சமயத்தவர்களைக் கொண்டுள்ள இப்பிரதேசத்தில் இரு மதத்தவர்களின் பாடசாலைகளுமே ஊர்காவற்றுறை கல்விப் பாரம்பரியத்தில் பெரும் பங்காற்றின. தீவகத்தின் கல்விப் பாரம்பரியம் ஊர்காவற்றுறையில் இருந்தே ஆரம்பமாகிறது. 1872 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆரம்பத்தில் ஆங்கிலப் பாடசாலையாகவே ஸ்தாபிக்கப்பட்டது. தீவக மக்களின் உயர்கல்வி மற்றும் ஆங்கில கல்விக்கு அக்காலத்தில் பெரும் பங்காற்றியது புனித அந்தோனியார் கல்லூரி ஆகும். 1960 ஆம் ஆண்டு வரை மிகச் சிறந்த கல்விப்பணி ஆற்றினாலும் யாழ்ப்பாணம் பண்ணை தாம்போதி ஊடான போக்குவரத்து ஆரம்பமாகியதால் மாணவர்கள் யாழ்ப்பாணம் நோக்கி நகரத் தொடங்கினர்.

ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலையே தீவகத்தில் முதலில் அமைக்கப்பட்ட பெண்கள் பாடசாலையாகும். இவற்றுடன் 1916 ஆம் ஆண்டு சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலைகளில் பெண்களின் கல்வி தொடர்பான பங்களிப்பு பெரிதாகவே நோக்கப்படுகின்றது.

1917 இல் கரம்பொன் சண்முகநாதன் மகா வித்தியாலயமும் 1929 இல் கரம்பொன் சிவகுருநாத வித்தியாலயமும் இங்கு அண்மைய காலங்களில் மெலிஞ்சிமுனை றோ.க.த.க பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டன. 1935 ஆம் ஆண்டு பருத்தியடைப்பு கதிரேசானந்த வித்தியாலயம் ஆரம்பமானது. ஊர்காவற்றுறை றோ.க.த பாடசாலை, நாரந்தனை றோ.க. மகாவித்தியாலயம், நாரந்தனை கணேச மகாவித்தியாலயம், சுருவில் றோ.க. பாடசாலை தம்பாட்டி அரசினர் த.க வித்தியாலயம் ஆகிய கல்விக்கூடங்கள் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் கல்விப்பணியாற்றின.

1991 ஆம் ஆண்டு இடப்பெயர்வுடன் பல பாடசாலைகள் தமது தனித்துவத்தை இழக்கத் தொடங்கின. மேற்கூறப்பட்ட பாடசாலைகள் யாழ்ப்பாணத்தில் இயங்க ஆரம்பித்தன. தனியார் கல்வி நிலையங்கள், பொதுவான மண்டபங்கள், பாடசாலை விடுதிகள் மற்றும் இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. 1996 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஏற்பட்ட மீள் குடியேற்றத்துடன் சில பாடசாலைகள் தமது சொந்த இடங்களில் பல இன்னல்களுக்கு மத்தியில் இயங்க ஆரம்பித்தன. இருப்பினும் இப் பாடசாலைகளினால் முன்பு போல் இயங்க முடியவில்லை. இதற்கு பல காரணங்கள் முன் வைக்கப்பட்ட போதிலும் அவை அனைத்துமே ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

## நிர்வாகம்

1960 ஆம் ஆண்டு வரையும் சப்த தீவுகளின் மக்கள் சங்கமமாகும் இடமாக ஊர்காவற்றுறை இருந்துள்ளது. தீவக மக்கள் அனைவருமே ஊர்காவற்றுறை வந்து காரைநகர் ஊடாகவே யாழ்ப்பாணம் சென்று தமது தேவைகளை நிறைவேற்றி வந்தனர். வைத்தியசாலை, பொலிஸ் நிலையம், நீதிமன்றம் மற்றும் நிர்வாக ரீதியான செயற்பாடுகள் யாவும் ஊர்காவற்றுறையிலேயே இடம்பெற்று வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் ஊர்காவற்றுறைச் சந்தை மிகப் பெரியளவில் வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுத்தது. சுறுசுறுப்புடன் இயங்கிய நகராக ஊர்காவற்றுறைப் பிரதேசம் காணப் பட்ட காலங்கள் பொற்காலங்கள் எனக் கூறின் மிகையாகாது.

## அரசியல்

1947இல் பட்டின சபை அந்தஸ்தைப் பெற்ற ஊர்காவற்றுறை 5 வட்டாரங்களை உள்ளடக்கி பட்டின பரிபாலனம் மேற்கொள் ளப்பட்டது. பிரபல தொழிலதிபரான அல்பிரட் தம்பிஜயா 1947இல் பாராளுமன்ற தேர்த லில் சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். இவரே ஊர்காவற்றுறையைச் சேர்ந்த முதற் பாராளுமன்ற உறுப்பினர். பின்னர் 1952 இல் தமிழ்க் காங்கிரஸ் மூலமாக போட்டியிட்ட அல்பிரட் தம்பிஜயா பெரு வெற்றி பெற்றவர்.

வைத்தியநாதன் நவரட்ணம் (V.நவரட்ணம்) 1962 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் சமஸ்டிக்கட்சி ஊடாக போட்டியிட்டு வெற்றி பெற்றவர். மூன்று மொழிகளிலும் நன்கு பரீட்சயமான இவர் ஊர்காவற்றுறை கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மிகத் திறமை யான அரசியல் தலைவரான வைத்திய நாதன் நவரட்ணம் 1957, 1991 ஆகிய காலங்களில் ஆங்கில மொழி மூலமாக இரண்டு நூல்களையும் எழுதியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## முடிவுரை

பார்போற்றும் புகழ் ஈன்ற ஊர்காவற் றுறை மிக நீண்ட வரலாற்றையும் வாழ்வி யல் பெருமைகளையும் இலங்கியல் மாண் பினையும் தன்னகத்தே கொண்டது. துறை ரீதியாக பல்துறை விற்பனர்களை உவந் தளித்த ஊர்காவற்றுறைப் பிரதேசம் 1991 இல் இடம்பெற்ற இடப்பெயர்வுடன் பொலி விழந்து போனது. இழப்பதற்கு ஏதுமின்றி பெரும் இன்னல்களைச் சுமந்து நின்றது ஊர்காவற்றுறை.

1996 இல் மீள்குடியேற்றம் தொடர் பாக அறிவிக்கப்பட்ட போதும் இன்றுவரை அதாவது இரண்டு தசாப்தங்கள் கடந்தும் கூட முழுமையாக அனைத்து தீவக மக்க ளும் மீள்குடியேறவில்லை. இதற்கு ஊர் காவற்றுறையும் விதிவிலக்கல்ல .போர் ஓய்ந்த பின்னர் போக்குவரத்து வசதிகள் மட்டுமன்றி அரசதுறைசார் கட்டடங்கள், சில தனியாரது கட்டடங்கள் புதுப்பொலிவு பெற் றாலும் மக்களின் மனங்கள் மாறவில்லை.

ஊர் சார்ந்த, உறவுகள் சார்ந்த நிலை யில் மக்களின் மனங்களில் மாறுதல்கள் ஏற்பட வேண்டும். ஊர்காவற்றுறையும் அதன் தனித்துவங்களும் இன்றும் பேசு பொருளாகவே உள்ளது. இதற்கு ஊர் சார்ந்த அனைவருமே உரிமை கொள்ள வேண்டும். உரிமைகள் வலுப்பெறும் போது ஊர்காவற்றுறை சார்ந்த பிரதேசம் புது மலர்ச்சி பெறும்.

**உசாத்துணை: -**


- யாழ்ப்பாணம் சமூகம், பண்பாடு, கருத்து நிலை (2000) குமரன் புத்தக நிலையம், கா.சிவத்தம்பி
- பிறந்த மண்ணில் பெற்ற சுகந்தம் (2001) மணி மேகலைப் பிரசுரம், செந்தி செல்லையா
- சப்த தீவு (1997) ஏசியன் அச்சகம். சதாசிவம் சேவியர்
- தீவகம் தொன்மையும் மேன்மையும் (2017) கரிகணன் நிறுவனம். கா.குகபாலன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தம்பையா அரியரத்தினம்**
B.A (Cey) ஓய்வுநிலை
உதவிதிட்டமிடல் பணிப்பாளர்.
சமாதான நீதவான் J.P அகில இலங்கை

# அனலைதீவு வரலாறு



அனலைதீவு யாழ் மாவட்டத்தின் தென்மேற்கு திசையில் சமுத்திரத்தின் மத்தியில் சைவசமயமும் தமிழும் அரசோச்சும் தீவாக அமைந்துள்ளது. இத்தீவு ஊர்காவற்றுறை துறைமுகத்தில் இருந்து 7 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இது சப்த தீவுகளில் ஒன்றாகும். இதன் தென்கிழக்கு முனையில் புளியந்தீவும் வடகிழக்கு முனையில் பருத்தித் தீவும் அமைந்துள்ளன. புளியந்தீவு அனலைதீவுடன் இணைக்கப்பட்டுள்ளது.

அனலைதீவு என பெயர்வரக் காரணமாக பலர் பலவற்றைக் கூறியுள்ளார்கள். ஆதியில் முனிவர்கள் அக்கினி (அனல்) வளர்த்து தவம் செய்தபடியால் அனலைதீவு என அழைத்தார்கள் என யோகிசச்சிதானந்த யோகிஸ்வரர் கூறியுள்ளார். தீவைச்சுற்றி கற்பாறைகள் அணைபோல் இருப்பதால் காலப்போக்கில் "அணை" "அன" என மாறியதாகவும் கூறுவர். அனல் என்ற பெண்ணரசி ஆட்சி செய்ததால் அனலைதீவு என அழைத்தார்கள் என்றும் கூறுவார்கள்.

பின் ஆட்சி செய்த போர்த்துக்கீசர் (Donallara Island) டொனலரு அயிலண்ட் என அழைத்தார்கள். அதற்கு பின் ஒல்லாந்தர் ஹெகட்டர்பம் என அழைத்தார்கள். அதற்கு பின் ஆட்சி செய்த ஆங்கிலேயர் அனலைதீவு என அழைத்தார்கள். போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்தில் அனலைதீவின் கிழக்கேயுள்ள துறைமுகத்தில் இருந்த கௌரி அம்பாள் ஆலயத்தை இடித்து ஒரு கோட்டையையும் மாதாகோயிலையும் கட்டி ஆட்சி செய்ததாக வரலாறு கூறுகின்றது. பின் போர்த்துக்கீசர் அவ்விடத்தை விட்டு சென்ற பின்பு அம் மாதா கோயிலை ஊர் மக்கள் இடித்து தரை மட்டமாக்கிய பின்பு அம்பாள் கோயில் கட்டியதாகவும் இன்றும் அவ்விடத்தை கோட்டை என்று அழைத்து வருவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் காணலாம். ஆங்கிலேயர் 1830ம் ஆண்டில் அனலை தீவின் வடமுனையில் ஒரு மதியக்கட்டை அமைத்துள்ளதை இன்றும் காணலாம்.

(மதியக்கட்டை என்பது கடலில் செல்ப வர்கள் அடையாளம் குறிப்பு அறிவதற்கு அமைந்த கட்டிடம்.)

யாழ் குடாநாட்டைப் போலவே குடா நாட்டு தீவுகளும் மயோசின் காலத்தில் கடலில் இருந்து சுண்ணக்கற்பாறைகள் திடலாக மேலே உயர்த்தப்பட்ட பகுதியாக வும் காலத்துக்கு காலம் கடலினதும் காற்றி னதும், ஆக்கச் செயற்பாடுகளும் அழிவுச் செயற்பாடுகளும் இடம்பெற்று வரும் இடமா கவும் காணப்படுகின்றது. அதன் நீளம் 3 மைலாகும் அகலம் 2 மைலாகவும் உள் ளது. அதாவது 673.4 ஹெக்டேயரைக் கொண்டதாகும். அத்துடன் நேர்கோட்டு வடிவத்தில் அமைந்துள்ளது. கடல் மட்டத்தி லிருந்து 5' - 8' உயரம் கொண்டவை. சராசரி மழைவீழ்ச்சி 50' குறைவானதும் சராசரி வெப்பநிலை 80F ஆகும்.

வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலத் திலே மழை வீழ்ச்சி ஏற்படும். கார்த்திகை, மார்கழி, தை மாத காலப்பகுதியில் மழை பெய்யும் காலம் பங்குனி, சித்திரை, வைகாசி அதிக வெப்பகாலமாகும். மழை வீழ்ச்சி உள்ள காலத்தில் குளங்கள், கிணறுகள் நிரம்பி வழியும். குளங்களில் நிரம்பி வழியும் நீரானது கால்வாய்கள் மூலம் கடலை சென்றடையும். இவ்வாறு செல்லும் நீரை தடுத்து அணை அமைத்து பாதுகாக்க வேண்டியது முக்கிய விடயமா கும். இவ்வூர் மண்வளம் மிக்கதாகும். அதிகமாக செம்மண், நரைமண், களிமண் காணப்படுகின்றன. இங்குள்ள கிணறுகள் 6' - 10' வரை ஆழமாக காணப்படும். மறு தீவுகள் போன்று வரட்சிக் காலங்களில் கிணறுகளில் நீர் வற்றுவதில்லை. 40% கிணறுகள் உவர்த்தன்மை கொண்டவை.

இங்கு மண் வளமும், நீர் வளமும் இருப்பதால் விவசாயமே முக்கிய தொழிலா கும். புகையிலை, மிளகாய் காசுப் பயிரா கவும் மற்றையவை நெல், சிறுதானியம், காய்கறித் தோட்டங்கள் மாரிகாலத்தில் தங்கள் தேவைகளுக்கேற்ப உற்பத்தி செய்யப்படுகின்றன. புகையிலை, மிளகாய் என்பன வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும். கால்நடை வளர்ப்பு நடை பெறும். தங்கள் தேவைகளுக்கு பால், இறைச்சி என்பன பெற்றுக் கொள்வர். 1987 ஆம் ஆண்டு கால்நடைச்சங்கத்தின் தரவு களின்படி மாடுகள் 2100, ஆடுகள் 1200, செம்மறி 150, கோழி 2500 காணப்பட்டுள் ளன. ஆனால் இன்று அங்குள்ள மக்கள் குடிபெயர்ந்துள்ளதினால் கால்நடை வளர் ப்பு குறைவாகவே உள்ளது.

கரையோரத்தில் சில இடங்களில் மீன்பிடியாளர்கள் இருப்பதால் மீன்பிடித் தொழில் செய்கின்றார்கள். சிறியளவில் மீன் பிடித் தொழிலைச் செய்வதால் உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்வார்கள் ஆனால் காலத்துக்கு காலம் மாதகல், மயிலிட்டியில் இருந்து மீன்பிடியாளர்கள் வந்து இவ்வூரின் மேற்கு கரையோரத்தில் தற்காலிகமாக வாடிகள் அமைத்து ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை செய்து வருகின்றனர். இவர்கள் பெரிய மீன்வகைகளை கருவாடாகவும் சிறுமீன், நண்டு, இறால் வகைகளை தின மும் யாழ் சந்தைக்கும் ஏற்றுகின்றார்கள். அசாதாரண சூழ்நிலையினால் சில மீன் பிடியாளர்கள் இங்கே நிரந்தரமாக வீடுகள் அமைத்து வாழ்ந்து வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னெடும் காலமாக சைவசமயத்தையும் சகல வளங்களையும் கொண்ட இத்தீவானது தற்போது 12 சைவ ஆலயங்களைக் கொண்டதாக உள்ளது. சிவன், அம்மன், விநாயகர், முருகன், வைரவர் ஆலயங்கள் குறிப்பிடத்தக்கன. வரலாற்று புகழ் மிக்க ஐயனார் ஆலயம், அம்மன், சிவன், முருகன் ஆலயங்கள் சகல வளங்களையும் கொண்டு விளங்குகின்றன. இவ்வாலயங்களில் வெளிநாட்டுக்கு இடம் பெயர்ந்தோரும் உள்நாட்டு மக்களும் ஒன்று சேர்ந்து நிதி வழங்கி அபிவிருத்திகளை மேற்கொண்டு வருவதைக் காணலாம். தேவையான கட்டிடங்கள் அன்னதான மண்டபங்கள் காலத்துக்குகாலம் திருவிழாக்கள் மூன்று நேர பூசைகள், அறநெறி பாடசாலைகள் என்பவற்றையும் சிறப்புறச் செய்து வருகின்றார்கள்.

1990வரை ஊர்காவற்றுறை துறைமுகத்தில் இருந்தே அனலைதீவுக்கான சகல போக்குவரத்து தொடர்புகளும் இருந்தன. யாழ் குடாநாட்டில் 1950க்கு முன் ஊர்காவற்றுறை முக்கிய துறைமுகமாக இருந்தது. தூத்துக்குடியில் இருந்து ஊர்காவற்றுறை துறைமுகத்திற்கு சகல ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளும் நடைபெற்று வந்த காலமாகும். ஆனால் 1950 இன் பின் காங்கேசன் துறைமுக அபிவிருத்தியினால் ஊர்காவற்றுறை துறைமுக ஏற்றுமதி இறக்குமதி நிறுத்தப்பட்டன. ஊர்காவற்றுறை துறைமுகத்திலிருந்தே அனலைதீவு, எழுவைதீவு போக்குவரத்து நடைபெற்றது. ஆனால் 1990க்கு பின் யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் துறைமுகம் கடற்படையிடம் உள்வாங்கப்பட்டதால் அனலைதீவு, எழுவைதீவு போக்குவரத்து கண்ணகி அம்மன் துறைமுகத்தில் இருந்து நடைபெற்று வருகின்றது. கண்ணகி அம்மன் கோவிலடியில் அரசு செலவில் பாலம் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

அப்பாலத்தில் இருந்து அனலைதீவுக்கு படகு மூலம் செல்வதற்கு 40 நிமிடம் எடுக்கின்றது. முன்னர் ஊர்காவற்றுறையில் இருந்து செல்வதற்கு 1 மணித்தியாலம் எடுத்தது. இப்பொழுது கடல்வழிதூரம் குறைந்துள்ளது. யாழ் நகரத்தில் இருந்து கண்ணகி அம்மன் கோவிலடி துறைமுகத்திற்கு இ.போ.சபை பஸ் சேவை, தனியார் பஸ் போக்குவரத்து சேவைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. அத்துடன் அனலைதீவு உள்நாட்டு போக்குவரத்துக்காக இ.போ.சேவை பஸ் வண்டி ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் 20க்கு மேற்பட்ட முச்சக்கர வண்டிகள் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடுகின்றன. அத்துடன் பாரமான பொதிகள் ஏற்றி இறக்குவதற்கு சிறிய, பெரிய உழவு இயந்திரங்கள் என்பன சேவையில் ஈடுபடுகின்றன. முன்னர் மாட்டுவண்டி செய்த சேவைகளை உழவு இயந்திரங்கள் செய்து வருகின்றன. இப்போது முன்னர் போக்குவரத்துக்கும், விவசாயத்துக்கும் பயன்படுத்தப்பட்ட எருதுகளின் தேவை அருகிவிட்டது.

அனலைதீவிலிருந்து கண்ணகி அம்மன் ஆலயத்திற்கும் பின்பு கண்ணகி அம்மன் ஆலய பாலத்திலிருந்து அனலைதீவு இறங்கு துறைக்கும் காலையும் மாலையும் பல கடற்போக்குவரத்து சேவைகள் நடைபெறுகின்றன. தற்பொழுது அரசினால் எழுதாரகை அதிவேக படகு சேவை ஒன்று நடைபெறுகின்றது.

1824க்கு பின்பே குடித்தொகை மதிப்பீட்டை அறியக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1824ல் | 974 பேரும் |
| 1871ல் | 1064 பேரும் |
| 1881ல் | 1296 பேரும் |
| 1981ல் | 3853 பேரும் |
| 2015ல் | 2150 பேரும் |

வசித்து வந்துள்ளார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் மக்கள் குடி பெயர்ந்ததால் குடிப்பரம்பலில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டது.

பொருளாதார நலத்தைக் கொண்டும் காலத்துக்குக்காலம் இடப்பெயர்வு ஏற்பட்டு வந்துள்ளதையும் நாம் அறியலாம். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தொழில் நிமித்தம் இடம்பெயர்ந்து கொழும்பு, சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்களுக்கு சென்றார்கள். அமரர் அல்பிரட் தம்பி ஐயா பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த காலத்தில் அவரின் உதவியால் கொழும்பு துறைமுக வேலைகளிலும் மற்றும் பிற இடங்களில் வியாபார நடவடிக்கைகளிலும், அரச தனியார் சேவைகளிலும் சேர்ந்து கொண்டதால் இடம்பெயர்ந்தார்கள். பின்னர் வன்னி பிரதேசத்தில் காணிகளை பெற்றும் இடம் பெயர்ந்தார்கள் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் காலத்துக்குக் காலம் ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடாவுக்கும், இந்தியாவுக்கும் இடம்பெயர்ந்தார்கள்.

அதிகமாக கனடாவில் அனலைதீவு மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஆரம்பத்தில் வெளிநாடு சென்றவர்கள் அதிகமானோர் நிதி உதவி செய்து தங்கள் உறவினர்களையும், நண்பர்களையும் தங்களுடன் இணைத்துக் கொண்டார்கள். அத்துடன் அவர்களின் நிதி உதவியுடன் ஆலயங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், நூல் நிலையங்கள், ஆரம்பப் பள்ளிகள், அறநெறி பாடசாலைகள் ஆகிய பொது ஸ்தாபனங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதைக் காணலாம்.

இங்கு 3 அரச பாடசாலைகள் இயங்கி வருகின்றன. வடக்கு, தெற்கு, மத்தியில் சதாசிவ பாடசாலை என்பனவாகும். மத்தியில் அமைந்துள்ள பாடசாலை 1885ல் அங்குள்ள சில பெரியோர்களால் ஆரம்பிக்கப்பட்டு இந்துபோர்ட் (Hindu Board) னால் நிர்வகிக்கப்பட்டது.

அதன்பின் 1960இல் அரசாங்கம் பொறுப்பை ஏற்றது. உள்ளூர் வெளியூர் ஆசிரியர்களால் கல்வி கற்பிக்கப்படுகின்றது. மூன்று பாடசாலைகளிலும் மொத்தமாக 500 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். சென்ற ஆண்டு தெற்கு அரசினர் பாடசாலையில் 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்தமையும் (2017) மத்திய சதாசிவ பாடசாலையில் நடந்த க.பொ.த சாதாரணதர (G.C.E O/L) பரீட்சையில் அதிக புள்ளிகளை எடுத்து மாணவர்கள் சித்தியடைந்தமையும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். 2010 இல் க.பொ.த உயர்தரம் கலையியல் ஆரம்பிக்கப்பட்டது. வெளிநாட்டில் வசிப்பவர்கள் அவ்வூரின் கல்வி முன்னேற்றத்தில் மிகவும் கவனம் செலுத்துகின்றார்கள்.

அனலைதீவு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் நிர்வாக அமைப்புக்குட்பட்டதாகும். இரு கிராம சேவகர் பிரிவை கொண்டதாகும். கிராம அலுவலர்கள் இருவரும் செவ்வனே தம் கடமைகளை புரிகிறார்கள். அத்துடன் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் இருந்து கலாச்சார அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுர்த்தி அலுவலர் போன்றோர் தங்கள் கடமைகளை அங்கு சென்று செய்து வருகின்றார்கள். அத்துடன் சுகாதாரம், கல்வி, விவசாயம், திணைக்கள அலுவலர்களும் வேறு வெளிக்கள உத்தியோகத்தர்களும் தங்கள் கடமைகள் நிமித்தம் சென்று வருவார்கள். அனலைதீவில் அரச வைத்திய சாலை இருக்கின்றது. அங்கு வைத்தியர் நியமிக்கப்பட்டு இருக்கின்றார். அங்கு வெளியூர், உள்ளூர் ஊழியர்கள் கடமை புரிகின்றார்கள். அனலைதீவு கனடா ஒன்றிய அமைப்பு புதிதாக பழைய அரச வைத்திய சாலையுடன் இணைத்து புதிய அழகான சகல வசதிகளையும் உள்ளடக்கியதாக வைத்தியசாலை அமைத்து கொடுத்துள்ளது. அவசியம் ஏற்படின் அம்புலன்ஸ் சேவையும் உள்ளது.

அனலைதீவு உள்ளூர் ஆட்சி நிர்வாகம் ஊர்காவற்றுறை பிரதேசசபைக்குட்பட்டது. அனலைதீவில் உள்ள உப பிரதேச சபை அலுவலகம் அங்குள்ள உள்ளூர் கடமைகளை செய்து வருகின்றது. முன்னர் கிராம சபை என அழைக்கப்பட்டது. இவ் உப பிரதேச சபை நூல் நிலையம், ஆயுள் வேத மருந்தகம் என்பவற்றை நிர்வகிக்கின்றது. அத்துடன் குளங்கள் உள்ளூர் சிறு வீதிகள் புனரமைப்பு குடிதண்ணீர் விநியோகம் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செய்து வருகின்றது. பிரதான வீதிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை செய்து வருகின்றது. இலங்கை மின்சார சபையினால் பெரும்பாலானோருக்கு மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் புகையிலைச் செய்கை முற்றாக தடை செய்யப்படுவதால் பெரும்பான்மை மக்கள் புகையிலைச் செய்கையை நம்பி வாழ்வதால் அவர்களின் பொருளாதாரம் பாதிப்பு ஏற்படலாம். கடல் வளம், பனை வளம் இருப்பதால் அரச நிர்வாகம் அங்குள்ள இளைஞர்களுக்கு மீன்பிடி பயிற்சி நெறிகளையும், அதற்கான உதவிகளை செய்வதோடு அடுத்து பனம் பொருள் உற்பத்தி பொருட்களின் அதிகரிப்புக்கான திட்டங்களை ஏற்படுத்துவதினால் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி வருமானத்தை அதிகரிக்கலாம்.

இவ் தீவானது சகல வளங்களையும் கொண்டதாக இருந்தாலும் வசதியான விரைவான போக்குவரத்து சேவை இருக்குமானால் சகல துறைகளையும் அதிக முன்னேற்றத்திற்கு கொண்டு செல்லலாம். உதாரணமாக வைத்தியதுறைக்கும், கல்வித்துறை முன்னேற்றத்திற்கும் வளங்கள் பயன்படுத்த உதவியாக இருக்கும். அதிகமான அலுவலர்கள் வெளியூரில் இருந்து சென்று வருவதால் அவர்களுக்கு வசதியான போக்குவரத்து சேவையை மேம்படுத்தலாம். அடுத்து மழைக்காலத்தில் கிடைக்கும் நீரை கடலுக்கு செல்லாமல் தடுத்து அணைகள் அமைப்பதன் மூலம் விவசாயத்தை மேம்படுத்தவும், உவர்த் தன்மையை மாற்றி கிணறுகளில் நன்னீர் கிடைக்கவும், கால்நடைகளுக்கு குடிப்பதற்கு நீர் கிடைப்பதற்கும் வசதியாக இருக்கும். இவ்வாறான திட்டங்களை அந்த அந்த அரச அதிகாரிகள் கவனத்தில் மேற்கொண்டால் நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை



# நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

செல்வி. மேனகா கிருஷ்ணபிள்ளை
*ஓய்வுநிலை பிரதி அதிபர்*
*யா / வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை .*

ஈழமணித் திருநாட்டின் வடபால் திருமூலரால் சிவபூமி எனப் போற்றப்பட்ட யாழ் குடா நாட்டின் சப்ததீவுகளில் ஒன்றாகிய லைடன் தீவின் மத்தியில் அமைந்துள்ள நாரந்தனைக் கிராமத்தில் பண்டாரபுலம் எனும் இடத்தில் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வூர் நாரந்தனை வடக்கு கடற்கரையோரத்தில் அரசுக்குச் சொந்தமான முடிக்குரிய நிலமாக இருந்ததுடன் கற்பாறைகளும் முருகைக்கற்களும் நிறைந்த நிலப் பரப்பைக் கொண்டதாகவும் காணப்பட்டது. வீதிகளைச் செப்பனிடுவதற்கு 1951ஆம் ஆண்டு பங்குனி மாதம் அரச அதிபரின் அனுமதியுடன் இக்காணி களில் கற்கள் அகழ்ந்து எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த திரு.மனுவேற் பிள்ளை, திரு.துரைசாமி ஆகியோர் கற்பாறைகளை வெடி வைத்து உடைத்த போது அடியில் இருந்து தங்க நாணயங்களும் அம்மன் விக்கிரகமும் வெளி வந்தமையைக் கண்டு அயலவர்களுக்கும் தெரிவித்து அவ்விடத்தில் அரசின் அனுமதியுடன் சிறு கொட்டில் அமைத்து அம்மனை நாரந்தனை வாழ் மக்கள் வழிபடலாயினர். கண்டெடுக்கப்பட்ட அம்மன் தங்கத்திலான விக்கிரகம், தங்கநாணயங்கள் என்பதனால் புதைபொருள் ஆராய்ச்சி திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நாரந்தனையைச் சேர்ந்த திரு.கு.அருளம்பலம் அவர்கள் கண்டெடுக்கப்பட்ட அம்மன் விக்கிரகத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று திரைச்சீலையில் வரைந்து அக் கொட்டிலில் கட்டிவிட மக்கள் அங்கு சென்று அம்மனை வழிபடலாயினர்.

அம்மன் விக்கிரகம் கண்டெடுக்கப் பட்ட இடத்திற்கு அயலில் வாழ்ந்து வந்த திரு.ச.உலகநாதபிள்ளை அவர்கள் அம்ம னுக்கு நாள்தோறும் விளக்கு வைத்து அம்மனை ஆதரித்து வந்தார். அவரைத் தொடர்ந்து அயலில் வசித்து வந்தவரான திரு.ஆ.கனகரத்தினம் அவர்கள் விளக் கேற்றி வந்ததுடன் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் கற்பூர தீபாராதனையும் செய்து வந்தார். இக்காலகட்டத்தில் நாரந் தனையைச் சேர்ந்த திரு.மு.கந்தையா அவர்களுக்கு அம்பாள் கனவில் தோன்றி "நாளை நீ என்னைக் கடலில் காண்பாய்" எனக் கூறிச் சென்றார். மறுநாள் காலை கடற்கரைக்குச் சென்று தேடிப்பார்த்தபோது முருகைக்கல்லிலான இரண்டு தலைகள் உடைந்த நிலையில் மூன்று தலைகளுட னான நாகபாம்பு வடிவில் விக்கிரகம் இருப் பதைக் கண்டார். அச்செய்தியை அவ்வி டத்து மக்களுக்கு தெரியப்படுத்த அவர்களும் இணைந்து இதனை எடுத்து வந்து ஏற் கனவே அமைக்கப்பட்டிருந்த கொட்டிலில் வைத்து பூசை, அபிஷேகம் நடாத்தி வழி பட்டு வரலாயினர். 1953 ஆம் ஆண்டு வீசிய புயல் காற்றினால் கொட்டில் சரிந்து வீழ்ந் தமையால் நாகத்தின் ஒருதலை உடைந்து விட்டது. எஞ்சிய இருதலைகளுடனான நாக விக்கிரகம் இன்றும் ஆலய முன்மண்டபத் திலே வைக்கப்பட்டு அபிஷேகங்கள், பூசை கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

நாரந்தனை வாழ் மக்கள் அம்மன் மீது அளவில்லாத பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தனர். தமது காவல் தெய்வம் என நம்பி வழிபட்டனர். அம்மனும் மக்க ளுக்கு அற்புதத் தெய்வமாக அருளை வழங்கி மக்களின் குலதெய்வமாக எல்லோர் மனங்களிலும் குடிகொண்டு அருளாட்சி செய்தார். அதன் காரணமாக அருட்தெய்வமான அற்புத அம்பாளுக்கு நிரந்தரமான ஆலயம் ஒன்று அமைக்க வேண்டும் என மக்கள் பேரவாக் கொண்ட னர். அதனை முன்னின்று செய்வதற்கு ஓர் அமைப்பு வேண்டும் என கருதினர். மக்க ளின் விருப்பை அறிந்த நாரந்தனை கணேச வித்தியாசாலை அதிபர் தி.க.கண பதிப்பிள்ளை அவர்கள் 1951 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 20 ஆம் திகதி சைவசமய மக்களை ஒன்று கூட்டி அவர்களின் அபிப்பி ராயங்களைக் கேட்டறிந்து அம்பாளுக்கு ஆலயம் அமைக்க வேண்டும் என்ற தீர் மானம் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற் பாட்டினை நிறைவேற்றுவதற்காக அன் றைய தினமே "சைவமகாசபை" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. சைவ மகா சபையின் போஷகராக சைவப்புலவர் திரு.மு.மயில்வாகனம் அவர்களும், தலை வராக திரு.தம்பு தில்லைநாதர் அவர்களும், செயலாளராக திரு. க.கணபதிப்பிள்ளை அவர்களும் பொருளாளர் திரு.வி.நமசிவா யம் அவர்களும் கொண்ட நிருவாக சபை ஒன்று உருவாக்கப்பட்டது.

அம்பாளின் விக்கிரகம் கண்டெடுக்கப் பட்டு கொட்டில் அமைத்து வழிபட்ட இடம் அரசுக்குச் சொந்தமானதாக இருந்தமை யால் அரசிடம் இருந்து சைவமகாசபை யினர் காணியைப் பெறுவதற்கான முயற்சி யில் ஈடுபட்டு காணியை பெற்றுக் கொண்ட னர். 1954ஆம் ஆண்டு தை மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தாறாம் திகதி நாரந்தனையைச் சேர்ந்த திரு.மூ.செல்லப்பா அவர்களால் ஆலய கட்டிடத்துக்கான அத்திவாரமிடப்பட்டு கட்டுமானப் பணிகள் துரிதகதியில் நடைபெற்றது. மூலஸ்தான ஸ்தூபியும் அதிலுள்ள சிற்பங்களும் சுருவிலைச் சேர்ந்த நா.தங்கவேல் ஸ்தபதி அவர்களாலும், ஆலயத்திற்கான கருங்கல் விக்கிரகங்கள், ஐம்பொன்னாலான எழுந்தருளி விக்கிரகங்கள், பெரியமணி என்பன தாவடியைச் சேர்ந்த திரு.நா.சோமசுந்தரம் அவர்களாலும் உருவாக்கப்பட்டு ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இக்காலகட்டத்தில் அரச காணிகள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆலயத்தை அண்டிய பிரதேசமும் அரசுக்கு சொந்தமானதாக இருந்தது. அக் காணியில் மூன்றரை ஏக்கர் நிலம் ஆலயத்துக்கும் ஏனைய நிலப் பரப்பில் ஒரு குடும்பத்துக்கு அரை ஏக்கர் வீதம் பதினாறு குடும்பங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. அக்காணிகளில் சைவ சமய மக்கள் குடியேறினர். இதனால் அம்மன் ஆலய வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக அமைந்தது.

அம்பாளின் ஆலய கட்டிட கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றதும் 1958 ஆம் ஆண்டு ஆலயத்துக்குரிய விக்கிரகங்களை பிரதிஸ்டை செய்வதற்கான கும்பாபிஷேகம் சைவமகா சபையின் தலைவர் திரு.த. தில்லைநாதர் அவர்களின் தலை மையில் சிவஸ்ரீ.கு.இராமநாதக் குருக்கள் அவர்களால் நடாத்துவதாக சைவமகாசபையினர் தீர்மானித்தனர். இதன்படி கும்பாபிஷேகம் விளம்பி வருடம் ஆவணி மாதம் நான்காம் திகதி புதன்கிழமை சுவாதி நட்சத்திரத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நாற்பது நாட்கள் அபிஷேகங்கள் நடைபெற்றது. நாரந்தனை வாழ் சைவ சமயிகள் அன்னை யின் அருட்கடாட்சத்தைப் பெற்று சீரும் சிறப்பும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

சைவமகாசபையினரினதும் மக்களினதும் விடாமுயற்சியும் பக்தியுணர்வும் ஆலயத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைந்தது. 1959ஆம் ஆண்டு எழுந்தருளி அம்மன் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்து அலங்காரத் திருவிழா செய்ய வேண்டும் என்ற விருப்பின் அடிப்படையில் திரு.நாகநாதபிள்ளை கந்தஞானி அவர்களின் உபயமாக ஐம்பொன்னாலான எழுந்தருளி விக்கிரகம் மணக்கும்பான் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு அலங்காரத் திருவிழா நடாத்தப்பட்டது. அலங்காரத் திருவிழாக்கள் தொடர்ந்து 1972 ஆம் ஆண்டு வரை நடைபெற்று வந்தது. 1972 ஆம் ஆண்டு ஆலய புனருத்தாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு புதிதாக வைரவர் கோயில் அமைக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டு பிரமாதீச வருடம் ஆவணி மாதம் 17ஆம் நாள் புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் வெகுசிறப்பாக நடைபெற்றது. இவ்வாறு ஆலயத்தின் வளர்ச்சிமென் மேலும் வலுப்பெற்றது.

தான் தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளுக்கு ஒரு சித்திரத்தேர் செய்ய வேண்டும் என அடியார்கள் பராபவ வருடம் புரட்டாதி மாதம் 14ஆம் நாள் வெள்ளிக் கிழமை ஆலய மண்டபத்தில் ஒன்றுகூடி தேர் திருப்பணிச் சபையை அமைத்தனர். இச்சபையினர் தேர் செய்வதற்கான நிதியை அடியவர்களிடம் இருந்தும் கலை நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நடாத்தியும் நிதியைச் சேகரித்து ஆரம்பகட்ட வேலைகளை ஆரம்பித்தனர். 1970 ஆம் ஆண்டு தேர்த்திருப்பணிச் சபையின் பொறுப்பை சைவமகா சபையினர் தாமே பொறுப்பெடுத்து தேர்த் திருப்பணிகளை முன்னெடுத்துச் சென்றனர். 1976 ஆம் ஆண்டு தேர்த் திருப்பணிகள் இனிதே நிறைவுற்றது. அம்பாளுக்கு கொடியேற்றி மகோற்சவம் நடைபெற்று தேர் பவனி வர வேண்டும் என அடியார்கள் அவாவுற்றனர். அதன்படி தேர் உருவாகிவிட்டது. கொடி மரம் வேண்டும் என சபையினர் ஆலோசிக்கும் வேளை நாரந்தனையைச் சேர்ந்த திரு.வை. நகுலேசபிள்ளை அவர்கள் தனது உபயமாக செப்புத்தகட்டால் ஆன கொடி மரம் நிறுவ உதவினார். அம்பிகையின் மகோற்சவம் நள வருடம் 1976 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 12ஆம் நாள் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நள வருடம் 1976ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை வெள்ளோட்டம் நடைபெற்றது. ஆவணி 21 ஆம் நாள் திங்கட்கிழமை அம்பாள் தனது புதிய சித்திரத்தேரில் முதன் முதலாக வீதியுலா வந்து மக்களுக்கு காட்சியளித்து அருள்பாலித்தாள். பதினோராம் நாள் அம்பாளின் தீர்த்தத் திருவிழா நாகம் தோன்றிய கடலில் நடைபெறுவதும் விசேட அம்சமாகும்.

அம்பிகைக்கு மகோற்சவ காலங்களில் கொடியேற்றத் திருவிழா, வேட்டைத் திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா என ஆகம விதிப்படி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிக்கும் காலப்பகுதியில் அம்பிகை அடியார்கள் எழுந்தருளி விநாயகர், முருகன் விக்கிரகங்களை உபயமாக வழங்கி ஆலய வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். விநாயகர் விக்கிரகத்தை திருமதி.ஜெ.புண்ணியமூர்த்தி அவர்களும், வள்ளி, தெய்வயானை சமேத முருகப்பெருமான் விக்கிரகத்தை திரு.திருமதி. சிவநாதன் அவர்களும் உபயமாக வழங்கினார்கள். இந்த விக்கிரகங்களும் அம்மன் வீதியுலா செல்லும் வேளைகளில் வீதியுலா வருவதும் விஷேட அம்சமாகும். இந்த மகோற்சவ காலங்களில் மகேஸ்வரபூசை செய்ய விரும்பிய சரவணை மேற்கைச் சேர்ந்த திரு.இ. பாலசிங்கம் அவர்கள் சிறிய அன்னதானமடம் ஒன்றினை அமைத்து மகேஸ்வர பூசை செய்து வந்தார். அதனைத் தொடர்ந்து மகேஸ்வரபூசை 1989 ஆம் ஆண்டு வரை இடம்பெற்று வந்தது. இடப்பெயர்வின் பின்னர் அம்பிகையின் அடியவர்கள் அன்னதான மடத்தை பெருப்பித்து மகோற்சவம் எத்தனை நாட்கள் நடைபெறுகின்றதோ அத்தனை நாட்களும் மகேஸ்வர பூசை நடாத்தி வருகின்றனர். அத்துடன் மோட்ச தினங்களிலும் அன்பர்களினால் மகேஸ்வர பூசை செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

1989ஆம் ஆண்டு ஆலயத்திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் உள் வீதியில் விநாயகர், முருகன் சந்தான கோபாலர், நவக்கிரகமூர்த்திகள் சண்டேசுரர் ஆகிய தெய்வங்களுக்கு ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்து சுக்கில வருடம் ஆனித்திங்கள் 26ஆம் நாள் திங்கட்கிழமை அத்த நட்சத்திரத்தில் மூன்றாவது கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இதன் பின்னர் நாட்டு நிலைமை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து தற்காலிகமாக வேறு இடங்களில் குடியேறியமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால் அம்பாளின் ஆலய பூசைகள், மகோற் சவங்களை நடாத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. 1990ஆம் ஆண்டில் இருந்து 1995 ஆம் ஆண்டுவரை ஆலயத்தை பரா மரிக்க முடியாது மக்கள் துன்பப்பட்டனர். 1991 -1 995 ஆம் ஆண்டுகளில் அன்னை மனோன்மணியாளை பிரதிஷ்டை செய்த நன்னாளை யாழ் கச்சேரி நல்லூர் வீதியில் வீற்றிருக்கும் புவனேஸ்வரி அம்பாள் ஆல யத்தில் அம்பிகையின் பெயரால் அபிஷே கங்கள் பூசைகள் வருடந்தோறும் சிறப்பாக நடாத்தி அன்னையை நினைவு கூர்ந்து திருப்தியடைந்தார்கள்.

1996 ஆம் 1997 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் நாட்டு நிலமை ஓரளவு சீரடைய மக்கள் மீளக்குடியமரும் சந்தர்ப்பம் உரு வானது. சிறு தொகையான மக்கள் மீளக் குடியமர்ந்தனர். அவர்கள் அன்னையின் ஆலயமும் சுற்றுப்புறங்களும் மரம், செடி கொடிகளாலும் புதர்களாலும் மூடப்பட்டு பற்றைக்காடாக இருந்தமை கண்டு அன் னையின் ஆலயத்தை மீளவும் திருத்தி அன்னைக்கு தீபாராதனை, பூசைகள் செய்ய வேண்டும் என முடிவு செய்தனர். நாரந்தனை வாழ் சைவசமயிகள் ஒன்று கூடி புதிய நிர்வாகத்தை உருவாக்கி செயற் பட ஆரம்பித்தனர். புலம்பெயர்ந்து உள் ளூரிலும் வெளிநாடுகளிலும் வாழும் மக் களிடம் நிதி சேகரித்து ஆலயத்தைப் புனருத் தாரணம் செய்து 1998 ஆம் ஆண்டு வெகு தானிய வருடம் ஐப்பசித் திங்கள் 16 ஆம் நாள் திங்கட்கிழமை உத்தரட்டாதி நட்சத் திரத்தில் நான்காவது மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து வருடந்தோறும் மகோற்சவங் கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

அம்பாளின் ஆலயத்தில் விசேடமாக அபிராமிப்பட்டர் விழா, நவராத்திரி, சிவராத் திரி, ஆடிப்பூரம், சித்திராபூரணை, திருவெம் பாவை, பங்குனி உத்தரம், மாதாந்தம் வருகின்ற விநாயகர் சதுர்த்தி, பூரணை புதுவருடப்பிறப்பு, மாசிமகம், பங்குனி உத்தரம், கேதாரகௌரிவிரதம், பிள்ளை யார் பெருங்கதை, தைப்பூசம், தைப்பொங் கல், புரட்டாதிச்சனி, ஆவணிச் சுவாதி மண வாளக்கோல சங்காபிஷேகம் என்பன அபிஷேக ஆராதனைகளுடன் மிகச்சிறப் பாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். இவ்வாறான நிகழ்வு களுக்கு உள்ளூர் வெளியூர் அம்பிகை அடியார்கள் நிதி உதவி வழங்கியும் உபயங் களாக பொருட்களை வழங்கியும் ஒத்து ழைத்து ஆலய வளர்ச்சிக்கு பெரிதும் பங்க ளிப்பு நல்கி வருகின்றமை பாராட்டுதற் குரியது.

அன்னையின் ஆலய வளர்ச்சி படிப் படியாக முன்னேற்றம் கண்டது. நாரந் தனை வாழ் சைவசமயிகள் இராஜகோபுரம் கட்டவேண்டும் என சைவமகா சபையினரு டன் கலந்துரையாடி அதற்கான நிதியினை புலம்பெயர்ந்து வாழும் நாரந்தனை அன்பர் களிடம் இருந்தும் உள்ளூர் மக்களிடம் இருந்தும் சேகரித்து இராஜ கோபுர வேலை களை ஆரம்பிப்பது என தீர்மானித்தனர். அதன்படி 14.07.2011 இல் இராஜகோபுரத் துக்கான அத்திவாரம் போடப்பட்டது. அம் பிகை அடியார்களின் விருப்பப்படி வெள் ளைக் கல்லினால் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வியாழவரி வரை கட்டப் பட்டு வந்தது. மக்களின் ஆதரவும் நிதி உதவியும் தேவைக்கு உரிய சந்தர்ப்பத்தில் கிடைக்கப் பெற்றது. இது இவ்வாறிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகம முறைப்படி ஆலய கும்பாபி ஷேகம் குறித்த காலப்பகுதியில் இடம்பெற வேண்டும் என ஆலய சிவாச்சாரியார்களின் ஆலோசனை சைவமகாசபையினருக்கு வழங்கப்பட்டது. இதன் காரணமாக இராஜ கோபுர வேலைகள் இடை நிறுத்த வேண் டிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஆலய புனருத்தாரண வேலைகளுக் காக அம்பாளுக்கு பாலஸ்தாபனம் செய்து ஐந்தாவது மகா கும்பாபிஷேகத்திற்கான வேலைகளைச் செய்ய வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டது. 2014ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 12 ஆம் நாள் அம்பிகைக்கு பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அதனைத் தொடந்து கூரைகள் அகற்றப்பட்டு ஆலயத் தின் கர்ப்பக்கிரக மண்டபம், மகாமண்டபம், ஆலயத்தின் தெற்குப் பகுதி என்பவற்றுக்கு வில்லுமண்டபம் போடப்பட்டுள்ளது. வசந்த மண்டபம், யாகசாலை, வைரவர் ஆலயம், அலுவலக அறை, மடப்பள்ளி அறை, மணிக்கூட்டுக் கோபுரம் என்பன புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அர்த்த மண்டபம், வசந்த மண்டபம், கொடிமரம் அமைந் துள்ள பகுதி என்பனவற்றின் நிலம் மாபிள் பதிக்கப்பட்டுள்ளது. கொடிமரம் புதிதாக பலா மரத்தினால் செய்யப்பட்டு செப்புத்தகட்டி னால் கவசமிடப்பட்டுள்ளது. ஆலயத்தின் கட்டிடங்கள் யாவும் மிக அழகாக வர்ணம் பூசப்பட்டும், அழகிய ஓவியங்கள் வடிவ மைக்கப்பட்டும் ஆகம விதிப்படி செப்பனிடப் பட்டுள் ளமை பார்ப்பவர்களை பரவசப்படுத் துவதாக அமைந்துள்ளது. இந்த ஆலய புனருத்தாரண வேலைகள் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு வரை நீடித்து முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. ஆலய புனருத்தாரண வேலை களுக்கான நிதி உதவியை புலம்பெயர்ந்து வாழும் நாரந்தனை வாழ்மக்களும் உள்ளூர் மக்களும் மனமுவந்து வாரி வழங்கியமை பாராட்டுதற்குரியதாகும். அன்னையின் அருட்கடாட்சம் அனைவர தும் ஒத்துழைப்புக்கு உறுதுணையாக இருந்தது. புனருத்தாரண வேலைகள் முடிவடைந்ததும் ஐந்தாவது மகா கும்பாபி ஷேகம் 2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித் திங்கள் 11 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை சுவாதி நட்சத்திரமும், வளர்பிறையும் கொண்ட நன்னாளில் வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலா பிஷேகமும் மிக சிறப் பாக நடைபெற்றது. மகா கும்பாபிஷேக தினத்தன்று அம்பிகை யின் மீது பாடப்பட்ட அம்மன் பாடல்களைக் கொண்ட இறுவெட்டு வெளியிடப்பட்டுள் ளமை விசேட அம்சமாகும்.

2018 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் நான்கு வருடங்களின் பின்னர் வருடாந்த மகோற்சவம் நடைபெற்றது மகோற்சவ காலங்களில் கொடியேற்றத் திருவிழா, வேட்டைத் திருவிழா, தீ மிதிப்பு, தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா என்பன விஷேடமானவை. வேட்டைத் திருவிழா வின் போது அம்பாள் வீதியுலாச் சென்று நாரந்தனை கர்ணந்தோட்டம் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்று முருகனை தரிசித்து நாராந்தனை கிழக்கு ஞான வைரவர் ஆல யத்துக்கு வேட்டைக்குச் சென்றுவரும் காட்சி ஊர்மக்களின் ஆன்மீக உணர்வை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது. தீ மிதிப்பு ஏனைய ஆலயங்களில் இடம்பெறு வது குறைவு இங்கு பக்தர்கள் முந்தியடித்து தீக்குளிப்பதை அவதானிக்கக்கூடியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுள்ளது. தேர்த்திருவிழாவின் போது ஆண்கள் ஒருபக்க வடத்தினையும், பெண்கள் ஒரு பக்க வடத்தினையும் பிடித்து தேர் இழுப்பதனைப் பார்க்கும் போது அம்பிகை அடியார்களின் பக்திப்பரவசத்தை அறியக் கூடியதாகவுள்ளது. தீர்த்தத் திருவிழாவின் சிறப்பு அன்னையைக் கண்டு எடுத்த சமுத்திரத்தில் தீர்த்தம் ஆடுவதாகும். இறுதி நாள் பிராயச்சித்த அபிஷேகமும் வைரவர் பூசையும் இடம்பெற்று மகோற்சவம் இனிதே நிறைவுபெறுகின்றமை குறிப்பிடத் தக்கவை.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள இராஜகோபுர வேலைகளை தொடருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.


**உசாத்துணை நூல்கள்**

- பொன்விழா மலர் -
  நாரந்தனை தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் - 2008
- நூற்றாண்டு விழா மலர்
  நாரந்தனை கணேசவித்தியாலயம் (கணேசானந்தம்)
- நேர்காணல்
  திரு. சு. இராமலிங்கம்
  (முன்னாள் செயலாளர்)
- நேர்காணல்
  திரு. கோ. இளங்கோவன்
  (பளை றோ.க.த.க. பாடசாலை)
- நேர்காணல்
  திரு. சிவகாந்தன்
  (அம்பிகையின் தொண்டன்)


**கார்ல் மார்க்ஸ்**



**பொதுவுடைமைக் கொள்கைகளின் மூலவர்களுள் முக்கியமானவர் கார்ல் மார்க்ஸ். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையில், வரலாற்றை ஆராய்ந்து சொன்ன இவரது தத்துவங்கள், சமூக பொருளாதார அரசியல் அரங்கில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியது.**

**“மூலதனம் இறந்த தொழிலாளரை போன்றது. இது உயிருள்ள தொழிலாளரின் உழைப்பை உறிஞ்சி வாழ்கிறது” என்பது மார்க்ஸ்சின் கருத்து.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேரம் நல்ல நேரம்

> "இறந்தகாலம்,
> நிகழ்காலம்,
> எதிர்காலம்
> இம் மூன்றையும் வேறுபடுத்திக்
> காட்டுவது வெறும் மாயை மட்டுமே!"
> – அல்பர்ட் ஐன்ஸ்டீன்

காவலூர் ஞானா

நேரம் என்பதை விட பெறுமதியான வேறு எதுவுமே உலகத்தில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நேரத்தை பெரிதாக மதிக்கும் கடிகார நாட்டில், இரண்டு தசாப்தங்களுக்கு மேல் வாழ்ந்தவன் என்ற முறையில், நேரத்தை எப்படி மதிக்க வேண்டும். நேரம் மனித வாழ்க்கையை எப்படி எப்படியெல்லாம் நெறிப்படுத்துகிறது என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டவன். நேரம் இல்லை என்று பலவற்றைத் தட்டிக் கழிப்பவர்களுக்கு. அதைச் செய்ய ஆர்வம் இல்லாமையினால் இப்படிச் சொல்லி நழுவிக் கொள்கி றார்கள் என்பதை அனுபவ ரீதியாகக் கண்டேன்.

டிக்... டிக்... டிக்... இதயத் துடிப்பை ஒத்த ஓசை அது. கடிகார சுழற்சியின் குழந்தையாக அது இருந்தாலும், இவ்வுலகை, அதிலுள்ள மனிதர்களை உயிர்ப்புடன் வைத்திருக்கும் செயல் அதுதான். இன்றைய காலகட்டத்தில் மனிதன் தன்னை ஆள, ஒன்றுக்கு அனுமதி கொடுத்திருக்கிறான் என்றால் அது இந்த நேரத்துக்கு மட்டும்தான். ஆனால், நம்மைப் பொறுத்தவரை, நேரம் என்றால் என்ன என்ற கேள்விக்கு "கடிகாரம் என்ன காட்டுகிறதோ, அதுதான்" என்ற பதிலைத்தான் சொல்லத் தோன்றும். உண்மையில், நேரம் என்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? நாம் அதை ஏன் பின்பற்றுகிறோம்? நேரமில்லாத உலகம் எப்படி இருக்கும்?

மாமேதைகளான நியூட்டன் மற்றும் கலிலியோ போன்றவர்கள்கூட, நேரம் என்பது பூமியில் இருக்கும் அனைவருக்கும் ஒன்றுதான், ஒரே மாதிரிதான் தோன்றும் என்ற எண்ணத்தில்தான் பல காலம் இருந்தனர். இவ்வளவு ஏன், 20-ம் நூற்றாண்டு வரை, பலரும் இப்படி ஓர் அறியாமையில் தான் இருந்தார்கள் என்று கூறுகிறது ஓர் ஆய்வு. தற்போதைய நேரம் என்னும் நவீனக் காலக் கோட்பாடு ஐன்ஸ்டீன் அவர்களின் "ரிலேட்டிவிட்டி" கோட்பாட்டின்படி கட்டமைக்கப்பட்டது. தற்போதைய நவீன அறிவியல் கோட்பாடுகளின்படி, மனிதன் நாகரிகம் அடைந்த பின்பு, அறிவியல் சார்ந்த அறிவை வளர்த்த பின்பு, ஓடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தின் தொடக்கப்புள்ளியாக விஞ்ஞானிகள் ஒன்றை நிறுவினர். அது 13.8 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு அதிர்வெடிப்பு (Big Bang) நிகழ்ந்து இப்பிரபஞ்சம் ஓர் புள்ளியில் இருந்து பிரசவிக்கப்பட்ட பின்பு விரிந்த அந்த முதல் நொடி.

எல்லாக் கோள்களும் அதனதன் இடத்தில் சென்று அமர்ந்த பிறகு, சுழற்சி என்ற ஒன்று தொடங்கிய பிறகு இந்த நேரமும் உயிர்பெற்றது என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். அன்றிலிருந்து இன்றுவரை நடந்த செயல்களை ஓர் அமைப்பாகக் சேர்க்கவும், நாளை நடக்கவிருக்கும் செயல்களை அதே வரிசையில் அடுக்கவும் நமக்கு நேரம் தேவைப்படுகிறது. பொதுவாக நேரம் என்பது மாற்றம் என்ற ஒன்றோடு தொடர்புடையது. ஒரு செயல் நடைபெற்றால்தான், அதை அடிப்படையாகக் கொண்டு நேரம் என்ற ஒன்றை உருவாக்க முடியும். அதன் பிறகு நடக்கும் எல்லாச் செயல்களையும், அந்த நேரம் என்ற அளவுகோல் ஒன்றைக் கொண்டு அளக்க முடியும்.

இங்கே நம் பார்வையில், நேரத்தின் அடிப்படையாக இருப்பது கோள்களின் சுழற்சிதான். பூமி சூரியனைச் சுற்ற எடுத்துக்கொள்ளும் கால அளவை ஒரு வருடமாகக் கொண்டு அதைக் கூறுகளாக பிரித்து, பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்ள எடுத்துக்கொள்ளும் கால அளவை ஒரு நாள் என்றும், பகல் மற்றும் இரவுகளைப் பிரித்து மணி நேரங்கள் என்றும், அதையும் பின்னர் கூறுகளாகப் பிரித்து நிமிடங்கள், நொடிகள் என்றும் அழைக்கிறோம். எனவே பூமியின் சுழற்சி என்னும் செயல் தான் நமக்கு நேரம் என்ற ஒன்றையே தருகிறது.

நேரம் என்பது நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கிறது. நாம்தான் கடிகாரங்களையும், நாட்காட்டிகளையும் வைத்து அதைக் கணக்கிட்டு துரத்திப்பிடித்துக் கொண்டிருக்கிறோம். நேரத்தின் சிறப்பே அதை வைத்து நாம் எந்தப் பரிசோதனையும் செய்ய முடியாது என்பதுதான் அதாவது, அதை நிறுத்திப் பார்க்க முடியாது, திரும்பி ஓட வைக்க முடியாது. அது ஒரே திசையில் பயணித்துக் கொண்டிருக்கும். இந்த நேரத்தை நாம் கோள்களின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கி இருந்தாலும், இன்று அந்தச் செயல் இல்லாமலே தனித்து நிற்கும் திறன் நேரம் என்ற இந்தக் கோட்பாட்டுக்கு உண்டு. உதாரணத்துக்கு, நம் பூமி தன்சுழற்சியை நிறுத்திவிட்டது என்றாலும் எவ்வளவு நேரமாகச் சுற்றாமல் இருக்கிறது என்பதை நாம் கண்டறிய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரம் என்ற ஒன்றை நாம் ஏன் உருவாக்கினோம்?

பொதுவாக, இயற்கை என்னும் தத்துவக் கோட்பாடு, ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்துகொண்டேதான் இருக்கிறது. உயிர்கள் பிறப்பதும், இறப்பதும், பின்பு மீண்டும் பிறப்பதும் என நம் கோள்களின் சுழற்சி போல, கடிகாரத்தின் சுழற்சி போல நிகழ்ந்து கொண்டேயிருக்கும் ஒரு செயல் அது. இயற்கை என்ற வார்த்தையின் கீழ் வரும் அனைத்துமே சுழற்சியை அடிப்படையாகக் கொண்டவை. அந்தந்தப் பொருளுக்கு ஏற்றவாறு அதனதன் சுழற்சிக்குத் தேவையான காலஅளவு மட்டும் மாறுபடுகிறது. இந்த இயற்கை உருவாக்கிய பொருட்களும் இந்தச் சுழற்சி என்ற ஒன்றை அடிப்படையாகக் கொண்டுதான் இயங்குகின்றன. இரவானால் உறங்க வேண்டும், பகலில் எழ வேண்டும், உணவு உண்ண வேண்டும், பின்பு மீண்டும் உறங்க வேண்டும் என்பவை நம் மரபணுக்களில் பதிந்து போன ஒரு விஷயம்.

ஆதி மனிதர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உண்டு, குறிப்பிட்ட நேரத்தில் தம் கழிவுகளைக் கழித்து என்று வாழத் தொடங்கும் போது, அவர்களின் உடலும் அதற்குப் பழகிப் போகின்றன. உதாரணமாக, இன்று சூரியன் உச்சியில் இருக்கும் போது உணவு உண்கிறார்கள் என்னும் போது, அதை மீண்டும் மீண்டும் செய்யத் தொடங்க, நாளைக்குச் சூரியன் உச்சிக்கு வரும் முன்பே வேட்டைக்குச் சென்றுவிட வேண்டும் என்று அவர்களுக்குத் தோன்றும். இந்தச் சூரியன் உச்சியில் இருக்கும் போது நாம் உணவு உண்டுவிட வேண்டும் என்று அவன் முதன் முதலில் நினைத்த போதே அவன் நேரம் என்ற கோட்பாட்டை அவனுக்குத் தெரியாமலே உருவாக்கி விட்டான். பகலானால் வேட்டை, இரவானால் உறக்கம் என்பதும் அதற்கான உதாரணம் தான். பின்பு நாகரிகம் வளர வளர, அவன் அன்றாடம் செய்யும் செயல்கள் அதிகமாக அதிகமாக, அவற்றையெல்லாம் எப்போது செய்ய வேண்டும் என்று குறித்துக்கொள்ள அவனுக்கு அளவுகோல் ஒன்று தேவைப் பட்டது. நேரம் என்ற கோட்பாடும் அதனால் பரிணாம வளர்ச்சி அடைகிறது. தற்போது நேரம் என்பது மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஆயங்களாக (Coordinates) விளங்குகிறது.

## நேரமில்லா உலகம் சாத்தியமா?

நேரம் இல்லாத உலகம் குழப்பங்களின் குவியலாக இருக்கும் என்று நீங்கள் நினைத்தால் அதுதான் இல்லை. நேரம் இல்லாத உலகம் என்பது சாத்தியமே இல்லாத ஒன்று. நேரம் என்ற ஒன்று இல்லாத உலகம் வேண்டும் என்றால், அங்கே இருக்கும் உயிர்களின் மரபணுக்களுக்குள் "சுழற்சி" என்ற விஷயமே பதிந்திருக்கக் கூடாது. எப்போது நம் வாழ்வில் சுழற்சி என்ற ஒன்று நுழைந்துவிட்டதோ, அப்போதே நேரம் என்ற ஒரு கோட்பாடு உள்ளே நுழைந்துவிட்டதாகதான் அர்த்தம். அதைக் கூறுகளாக பிரித்து கடிகாரம் கொண்டு அளக்கவில்லை, அவ்வளவு தான். உதாரணமாக ஐந்தறிவு மிருகங்களால் நேரம் என்றால் என்னவென்று புரிந்துகொள்ள முடியாது. ஆனால், எப்போது உணவு தேடச் செல்ல வேண்டும், உணவு உண்ண வேண்டும், எப்போது இனப்பெருக்கம் செய்ய வேண்டும் போன்ற விஷயங்கள் அதற்குத் தெரியும். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகத்துக்கு மிருகம் மாறுபடுமே தவிர, அது சுழற்சியாக நடந்து கொண்டேதான் இருக்கும்.

துரதிஷ்டவசமாக, நம் பிரபஞ்சத் தின் இயற்பியல் விதிகளின்படி, சுழற்சி என்ற ஒன்று, இயற்கையின் தன்மையாக இருக்கி றது. இங்கே நாம் நேரம் என்ற ஒன்றை கழட்டி விடவே முடியாது. நாம் நாள் முழு வதும் கடிகாரத்தைப் பார்க்காமல் தவிர்க்க லாம். ஆனால், பசித்தால் உணவு உண்ண வேண்டும். உறக்கம் வந்தால் உறங்க வேண்டும் என உங்கள் உடலின் தேவை கள் சுழற்சி நிலையில்தான் இருக் கும். அதை நாம் நினைத்தாலும் மாற்ற முடி யாது. நம் கண்களை மூடிக்கொண்டால் உலகம் இருட்டி விடுமா என்ன?

நேர நிர்வாகம் பற்றி யோசிக்கும் போதெல்லாம் அது எவ்வளவு தவறான சொல்லாடல் என்று தோன்றும். நேரத்தை யாரும் நிர்வாகம் செய்ய முடியாது. நம் மைத்தான் நாம் நிர்வாகம் செய்ய முடியும். அதுவும் முடிந்தால்! நம்மை நாம் எப்படி நிர்வாகம் செய்கிறோம் என்பதற்கு நேரம் ஒரு சாட்சி அவ்வளவுதான்.

மனம்தான் நேரத்தை தன் இஷ்டத் திற்கு வளைத்து வளைத்து கையாள்கிறது. காதலிக்காக பல மணி நேரக் காத்திருப்பு, ஆள் வந்ததும் நொடியாய்த் தெரிகிறது. ஒத்துவராத மேலதிகாரிக்காக ஒரு சில நிமிடங்கள் காத்திருக்கும்போது, அது பாதி வாழ்க்கை போனதுபோல ஆயாசமாக இருக்கிறது. காலத்திற்கு இப்படி ஒரு இழு படும் தன்மையை மனம் கொடுக்கிறது.

நாம் எப்படி நேரத்தைக் கையாள்கி றோம் என்பதில் நம் திறமை மட்டுமல்ல ஆரோக்கியமும் அடங்கியிருக்கிறது. அத னால் நேரத்தை கட்டுபடுத்த நினைக் காமல், நம் உடல், மனம், உறவுகள், வேலை இவைகளை கட்டுப்படுத்தினால் அது நாம் வாழும் வாழ்க்கையின் தரத்தை நிர்ணயிக்கும்.

தொழில் உலகில் நேரம்தான் செல் வம். அதனால் குறைந்த நேர முதலீட்டில் நிறையப்பலன்கள் எதிர்பார்க்கப்படுகின் றன. அதனால்தான் எல்லா வேலைகளும் நேரத்துடனும் சம்பளத்துடனும் கணக்கிடப் படுகின்றன. நேர விரயம் செல்வ விரயம் என்ற கணக்கு வந்தது இப்படித்தான். இந்த கண் ணோட்டத்தில் பார்த்தால் வேலை நேரத் தில் நிறைய விரயங்களை கண்டு கொள்ள லாம்.

பொழுதுபோக்கு என்ற சொல்லே நேர விரயம்தான். பொழுதை ஆக்கும் விளையாட்டு, நாடகம், இலக்கியம், கலை எல்லாம் உங்கள் வாழ்க்கைக்கு மதிப்பு சேர்ப்பவை. ஆனால், என்ன செய்வது என் று தெரியாமல் தொலைக்காட்சி பார்த்தல், முகநூல் மேய்தல், தொடுபேசி விளையாட்டுக்கள் என எல்லா இலக்கில்லா பொழுதுபோக்குகளும் கண்டிப்பாக விரயங் கள்தான். வளர்ந்த நாடுகள் அனைத்திலும் நேரத்தை மதிக்கிறார்கள். தங்கள் நேரமா கட்டும், பிறர் நேரமாகட்டும், நேரத்தை மதிப்போம். உலகம் நம்மை மதிக்கும்! என்றுமே மிதிக்காது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலை மழுங்காக் களரி மெலிஞ்சிமுனை

**கிறிஸ்து அரசர் கலைமன்றம்**
மெலிஞ்சிமுனை

**ஈழ நாட்டவரின் கலைச்செயற்பாடுகளை ஆராயும் போது குறிப்பாக மரபுவழிக் கூத்துக்கலையை நோக்கினால், மட்டக்களப்பில் வடமோடி, தென் மோடி, கூத்துக்களும், விலாசங்களும் மன்னார்ப் பகுதியிலே கிறிஸ்தவ அடிப் படையில் அமைந்த வடபாங்கும் தென்பாங்கும், வாசாப்புகளும், முல்லைத்தீவில் வடமோடி, தென்மோடி சிந்துநடைக் கூத்துகளும், யாழ்ப்பாணத்தில், தென்மோடி, வடமோடி காத்தான்கூத்துகளும், நீர்கொழும்பு தொடங்கி புத்தளம் வரையுள்ள பகுதிகளில் யாழ்ப்பாண, மட்டக்களப்பு ஆட்ட முறைகளிலிருந்து சற்று வித்தியாசமான கூத்துகளும், மலைநாட்டில் காமன் கூத்து, அருச்சுனன் தபசு போன்ற கூத்துகளும் இருந்து வருகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கூத்துகள் பிரதேசத்திற்குப், பிரதேசம் வேறுபட்டு நின்றாலும் ஈழத்தின் தனித்து வத்தைப் பொதிந்து வைத்திருக்கும் கலை வடிவங்களில் ஒன்றான மெலிஞ்சிமுனை பிரதேசத்தில் வழக்கில் இருக்கும் தென் மோடிக்கூத்து வடிவத்தையே இக்கட்டுரை முன்நிறுத்துகிறது.

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் நிகழ் த்தப்பட்டுவந்த தென்மோடிக் கூத்துக் கள் காலத்துக்குக் காலம் தன்னிலை மாற்ற மடைந்து வந்த தடங்கள் வரலாற்றின் பதிவு களில் காணக்கிடைக்கின்றன. இந்த மாற் றங்களின் தன்மை அடிப்படைகளை வைத் துக்கொண்டே மெலிஞ்சிமுனைக் கூத்தின் தனித்துவத்தை நாம் இனங்கண்டு கொள்ள லாம்.

பொய்த்துப்போன வானத்தைப் பார் த்து குரலெழுப்பி, கடலைப் போல நெருப் பைப் போல உடலசைத்ததிலிருந்து தோன் றியது கலை என்கின்றனர் ஆய்வாளர்கள். (இயற்கையைப்) போலச் செய்ததிலிருந்து தோன்றியிருக்கலாம் என்றும் சொல்கின்ற னர். மெலிஞ்சிமுனைக் கூத்துக்களின் நிகழ்த்து முறைகளை உற்றுக் கவனித் தாலே இவை இரண்டு தன்மைகளும் மறைந்து கிடப்பதைக் கண்டுணரலாம்.

தமிழில் மெலிஞ்சியர் எனும் சொல் கோயில் காப்பாளர் எனும் அர்த்தத்தைக் கொண்டதாக இருக்கிறது. இந்த அர்த்தம் பொய்த்துப்போகாத தன்மை கொண்டதாக மெலிஞ்சிமுனையில் நீண்டு வருவதையும் அவதானிக்க முடியும். தீவகத்தின் வெவ் வேறு பகுதிகளில் வாழ்ந்த இன்றைய மெலிஞ்சிமுனையின் முன்னோர் பல தேவாலயங்களைக் கட்டும் பணிகளில் ஈடு பட்டு பங்குதாரர்களாகவும், மெலிஞ்சி முனையில் குடியேறிய பின்னரும் செல்லு மிடமெல்லாம் ஆலயம் கட்டும் மன ஆர்வத் தைக் கொண்டவர்களாகவும் இருந்து வந்த தற்கு தீவகத்தின் வெவ்வேறு ஆலயங்கள் இன்றும் சாட்சிகளாக நிற்கின்றன.

இன்னொரு வகையில் நயினாதீவோ டும், ஊருண்டியோடும் தொடர்புபட்ட மக்கட் பரம்பலையும், இனங்காணக்கூடிய பரம் பரைத் தொடர்புகளையும் இங்கு அவதா னிக்கலாம்.

ஆலயத்தை மையப்படுத்திய வாழ்க்கை, கலை, பண்பாடு என்று வாழும் இம்மக்களின் தென்மோடிக் கூத்துக் கலையை ஆராய, மேற்படி நிலைப்பாடு களை கருத்திற்கொள்ளுதலே இக்கலைப் பரம்பரைக்குக் கொடுக்கக்கூடிய உண்மை யான மதிப்பீடாய் இருக்க முடியும்.

நீண்ட கூத்து மரபின் தொடர்ச்சியான "காவிகளாக" வந்த மக்கட் பரம்பல் கூடி, கருக்கட்டிய இடமே மெலிஞ்சிமுனை எனும் தளமாக அமைந்தபோது அங்கு கூத்துப் பயிற்றுவிப்பாளராக இருந்தவர் யாக்கோப்பு எனும் மூத்தவர் என்று அறியக் கிடைத் தாலும், இம்மக்கள் கூட்டத்தின் கலை ஆளுமையாக இவர்களின் கலையை வீச் சோடு முன் வைத்தவர் கலைக்குருசில் நீ.வ.அந்தோனி அண்ணாவியார் என்றே சொல்லலாம். இவரின் காலப்பகுதியை மெலிஞ்சிமுனைக் கூத்தின் எழுச்சி மிக்க காலம் என்று மட்டுமல்லாமல், ஈழத்தாரின் கலை வரலாற்றின் முக்கியமான காலம் என்றும் சொல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களின் பல்வேறு கிராமங்களுக்கும் சென்று அங்கேயே தங்கி பல கூத்துக்களையும், கலைஞர்களையும் உருவாக்கிய அந்தோனி அண்ணாவியார் சுமார் இருபத்தைந்து கூத்துகளுக்கு மேல் மேடையேற்றியதோடு மெலிஞ்சிமுனைக் கூத்துக்கான மிக உறுதியான கலை அத்திவாரம் ஒன்றினை யும் போட்டு ஐந்து தலைமுறைகளைத் தாண்டியும் அதன் நீட்சி வலுப் பெறுவதற்கான உந்துவிசையாகவும் இருந்தார்.

ஐரோப்பிய மெலோ டிராமா மரபை உள்வாங்கிய "பம்பாய் பார்சி" நாடகக் கம்பனி இந்தியாவில் மேற்கத்தைய மரபு நாடகங்களை மேடையேற்றியதன் விளைவாக, பார்சித்தியேட்டர் மரபு தமிழகத்திலும் அறிமுகமாகி, தமிழ் நாடக மரபிலமைந்த நாடகங்களே இசை நாடகங்களாயின. இவ்வகை நாடகங்களை அண்ணாவி மரபு நாடகம், கொட்டகைக்கூத்து, ஸ்பெசல் நாடகம், டிறாமா மோடி, இசை நாடகம் என பலவாறு அழைப்பர். இதிலிருந்து உருவமைத்துக்கொண்ட தமிழகத்து சபாக்கள் பல இலங்கை வந்தன. பின்னர் நிரந்தர மடுவங்கள் உருவாகி இலங்கையிலும் ஒரு நாடக மரபாய் தோற்றம் பெற்றன.

இந்த நாடக மரபின் எழுச்சி வி.வி.வைரமுத்து எனும் பெருங்கலைஞனின் காலத்தில் முகிழ்த்தது. மூவாயிரம் மேடைகளையும் தாண்டி "அரிச்சந்திர மயான காண்டம்" நிகழ்த்தப்பட்ட காலத்தில் ஒட்டுமொத்த இலங்கையின் இரசிகப் பட்டாளமும் அலையலையாய் இசைநாடகப் பக்கம் திரும்பிய போதும், பல கிராமங்களின் கூத்துக்கலைஞர்கள் இசை நாடகப் பாங்கை உள்வாங்கிப் பாடியபோதும் மெலிஞ்சிமுனையில் அந்தோனி அண்ணாவியாரும் அவருடன் இயங்கிய கலைஞர் படையும் பிடிவாதமாய் தென்மோடியின் உயிர்ச்சாரத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டு களரி கட்டினர்.

அவர்களில் தீயோகு, நீக்கிலார், மோசேஸ், மரியார், யாக்கோப்பர், சுவானி, சுவாம், வலோரியார், அவுறார், வயித்தியார், அருளப்பர், கித்தேவார், சலமோன், இன்னாசி, அ.லூக்கேஸ், அதிரியார், சந்தியாகு, இசிதோர், தீ.பிரகாசம், பவூன் பாவிலு, சூசைமுத்து, சந்தியாக்குட்டி, சு.வயித்தியார், பேதுறு, ம. (மனேச்சர்) வயித்தியார், இ. சுவக்கீன், அ.வயித்தியார், ம.அந்தோனி, அ.பத்தி நாதன், மனேச்சர் சூசை, கா. மனுவல், இ. மத்தியாஸ், அ.மடுத்தீஸ், செபமாலை, சுவக்கீன், தொம்மைக்குட்டி, கபிரியேல் என்பவர்கள் பெரும் பங்களித்தவர்கள் என்று அறியக்கிடைக்கின்றது.

இவர்களின் பின்னர் அ.சவிரிமுத்து, இ.ம. அலைக்சாண்டர் ஆகியோர் எதுவித சலனமுமின்றி தென்மோடியின் சாரம் நீர்த்துப்போகாமல் மேற்படி தலைமுறையின் வாரிசுகளோடு பயணப்பட்டுக் கொண்டிருந்தனர். இவர்களில் சீரணி ராயப்பு, பாக்கியநாதன், தோமாஸ், குருசுமுத்தி, மரியநாயகம், சைமன் இதானியல், டேவிற், ஆரோக்கியநாதன், பி.அகஸ்ரின், இ.ஆசை, ம.யோசை, யா.செல்லன், சீமான் பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, தொம்மை, செபமாலை, நோவா, ராசு, விக்டர், போன்றவர்கள் குறிப்பிடத்தக்க கலைஞர்களாக இயங்கினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெலிஞ்சிமுனையிலிருந்து அரசியற் சூழ்நிலைகளால் இடம்பெயர்ந்த காலங்களி லும் அ.சவிரிமுத்து, ம.அலைக்சாண்டர், ப.சைமன், அ.யேசுதாசன் ஆகிய அண்ணா வியர்களின் கூத்துக்கள் இலங்கையின் வெவ்வேறு இடங்களில் மேடையேறின.

கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூர்ந்து பாடும் கல்லறைக் கண்ணீரும், மரண வீடுகளில் பாடப்படும் நடுத்தீர்வை உலாவும், எல்லாவற்றையும் இழந்து நின்ற மக்களின் நினைவு அடுக்குகளில் கொண்டு செல்லப்பட்டன. அவற்றைப் பாடுவதில் மெலிஞ்சிமுனையின் பெண்கள் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தனர்.

(இந்தத் தலைமுறையில் சில விடு படல்கள் இருக்கலாம் அவை மீள்பதிவில் சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும். அத் தோடு இதற்கு அடுத்த தலைமுறையின் பெயர் விபரங்கள் கட்டுரையின் பக்கங் களைக் கருத்திற்கொண்டு இங்கு இடம்பெற வில்லை)

அந்தோனி அண்ணாவி காலத்தி லும், அவருக்குப் பின் வந்த காலத்திலும் ஒரு சுயம்புவாக உருவெடுத்த கி. சவிரி முத்துவெனும் தாளச்சித்தன் தன் கலைத் தாகம் தணியாது தன் மரணகாலம் வரை மத்தளகாரனாகவே வாழ்ந்து மரித்தார். கூத்துக்களோடு, கிறிஸ்தவப் பாடல்களுக் கும் ஆர்மோனியம் வாசித்ததன் மூலம் பி. பிரான்சிஸ், ப.விஜயநாதன் ஆகியோர் தம் கலைப்பங்களிப்பையும் செய்தார்கள். கி.சவிரிமுத்து அவர்களின் பின்னர் தொ.லோறன்ஸ் அவர்களும் மத்தள காரனாய் இயங்கி வருகின்றார்.

அரசியல், சமூக மாற்றங்களை உள் வாங்கி அவற்றின் போக்கிற்கேற்ப அவர் களின் காலத்தைத் தொடர்ந்து கூத்துக்கலை அவர்களின் வழித்தோன்றல்களான ச.மிக்கேல்தாஸ், அ.ஜேசுதாசன், ச.ஜெய ராஜா, அ.ஜோண்சன், கி.லக்ஸ்மன், தமயந்தி, செ.குயின்ரன், மெலிஞ்சிமுத்தன், றொபின்சன் போன்றவர்களால் கிராமத்தி லும் புலம்பெயர் சூழலிலும் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

கூத்துக்கலையோடு பிற்காலத்தில் சமகாலச் சமூகநிலைப்பாடுகளை பேசு பொருளாய்க் கொண்ட நாடகங்களும் அரங் கேறத் தொடங்கின. நாடகப் பிரதி, பாடற் பிரதிகளை உருவாக்குவதில் பி. பிரான்ஸ் ஸில் அவர்களும், அவரைத் தொடர்ந்து அ.ஜேசுதாசன், சந்தியாப்பிள்ளை ஆகியோ ரின் நாடகப் பிரதிகளும் அரங்கேறின. நாடகப் பிரதி உருவாக்கலில் ஆர்வங் கொண்ட அ.ஜேசுதாசன் பிற்காலத்தில் கூத் துப் பிரதிகளையும் எழுதத் தொடங்கினார்.

புலம்பெயர் சூழலில் ச.மிக்கேல்தாஸ் அவர்களின் மூன்று கூத்துப் பிரதிகளும், தமயந்தியின் ஒரு கூத்துப்பிரதியும் நூலுருப் பெற்றிருக்கின்றன. அத்தோடு மெலிஞ்சி முத்தனின் மூன்று கூத்துப்பிரதிகளும், ச.குயின்ரனின் ஒரு பிரதியும், பா. சிறிலின் நெறியாள்கையில் ஒரு கூத்துமென்று பல மேடையேற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் இலக்கி யச் சூழலில் தமயந்தி, மெலிஞ்சிமுத்தன் ஆகியோரிடமிருந்து ஒன்பது இலக்கியப் பிரதிகளும், நூலுருப் பெற்றிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் ச.அசீஸ்குமாரின் ஒரு கவிதைத் தொகுப்பும் நூலுருப் பெற்றிருக்கிறது. புகைப்படக்கலையில் சிறந்து விளங்கும் தமயந்தி பல புகைப்படக் கண்காட்சிகளையும் தொடர்ந்து நடாத்தி வருகின்றார்.

மெலிஞ்சிமுனை ஈழத்தின் கலையால் தீட்டப்பட்டு கடலுக்குள் நீண்டு நிற்கும் மழுங்காமுனை என்பதற்கான ஆதாரங்களை இவ்வாறு சொல்லிக்கொண்டே போகலாம். மெலிஞ்சிமுனையின் கலை ஒழுங்கு முறைகளின் பாறைகளை உடைத்து ஆணி வேரோடிய பெருவிருட்சமாய் வெவ்வேறு தளங்களில் விரிந்து, பரந்து, கிளை விரித்து நிற்பதைப் பதிவு செய்வதில் உளம் பூரிக்கிறது.

**வாழ்க கலை, வளர்க பிற்கோக்கறுத்த தமிழ்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுவைதீவும் அதன் சிறப்புக் கண்ணோட்டமும்

அ. யொனிற்றன் யோசப்
எழுவைதீவு தோமையார்
இளைஞர் கழகப் போசகர்.

நான்கு திசையும் கடலலை கவிபாட எழில்மிகு தீவாய் எழுச்சியுடன் காட்சியளிக்கும் உயிர்ப்புள்ள உன்னத தீவு எம் எழுவைதீவு. இலங்கைத் திருநாட்டின் உயர்ந்த அதிக (ஏறத்தாழ ஒரு இலட்சம்) கற்பகதருக்களைக் கொண்டு உயர்ச்சி பெற்று காட்சி அளிப்பதுடன் இலங்கை பனை அபிவிருத்திச் சபையினால் அதிக பனை வளம் உள்ள கிராமம் என்ற சிறப்பையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. இந்து சமுத்திரத்திலிருந்து வருகை தரும் வேளையில் தீவு களில் முதன்மையாகவும் எழுச்சியுடனும் தென்படுவதனால். எழுவைதீவு எனும் பெயர் சூட்டப்பட்டது. எமது கிராமம் 175 குடும்பங்களையும் 680 அங்கத் தவர்களையும் உள்ளடக்குவதுடன் நீளம் 3.3km அகலம் 1.8km கொண்ட சிறிய அழகிய தீவாகும். எமது கிராமத்தின் அயல் தீவுகளாக பருத்தீவு மற்றும் அனலைதீவு காணப்படுகின்றது. எமது கிராமத்தில் கிறிஸ்தவம், இந்து என இரு சமயத்தவரும் வாழ்வதுடன் பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ தேவாலயமாக புனித தோமையார் ஆலயமும் இந்துக் கோவிலாக ஈழத்துச் சிதம்பரம், முத்தன்காட்டு முருகன் தேவஸ்தானமும் திகழ்கின்றது. எமது மக்களின் வாழ்வாதார முக்கிய தொழிலாக கடற்றொழில் அமைகின்றது. தீவகத்தின் மீன்வளம் குறைவாக இருந்தாலும் அதீத முயற்சியுடன் நவீன முறைகளைக் கையாண்டு கடலு ணவுகளை பிடிப்பதனாலும் சிறந்த கட்டுக்கோப்புகளுடன் புனித தோமையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் வழி நடத்துவதனாலும் போட்டிச் சந்தை உரு வாக்கப்பட்டு பல்நாட்டு நிறுவனங்கள் கடலு ணவுகளை கொள்வனவு செய்வதனால் எமது நாட்டில் அதிகூடிய விலைகளில் கட லுணவுகள் கொள்வனவு செய்யும் தீவாக எமது தீவு காணப்படுகின்றது என்று கூறி னால் மிகையாகாது. எமது கிராமத்தின் பயணப்பாதை கடல்மார்க்கமாக அமைந் துள்ளதுடன் கண்ணகி அம்மன் துறை முகத்திலிருந்து கடல் மார்க்கப் பாதையால் 20 நிமிடம் பய ணித்து எமது கிராமத்தினை வந்தடையும் சாத்தியமான சூழ்நிலையுள் ளது.

எமது கிராமத்தின் கல்வி அலை அமு துகளாக மூன்று பாடசாலைகள் காணப்படு கின்றன. பாலர் பாடசாலையாக புனித தோமையார் முன்பள்ளியும், ஆரம்பப் பாட சாலையாக றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலம் மற்றும் க.பொ.த. சாதாரணதரம் வரை முருகவேள் வித்தி யாலயமும் தமது கல்விச்செயற்பாடுகளை சிறப்பாக ஆற்றி வருகின்றது. உயர்தர கற் கைகளாக வெளியிடங்களுக்கும் புலமை பரீட்சை க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்கு ஊர்காவற்றுறை செல்ல வேண்டிய கடின நிலையும் காணப்படுகின்றது. எமது கிரா மத்தில் ஆதார வைத்தியசாலை நீண்ட காலத்தின் பின்னர் எமது கிராமத்தி னைச் சேர்ந்த திருவாளர் வைத்தியக் கலாநிதி நொல்நடேசன் மற்றும் அவரது பாரியாரும் இணைந்து தமது சொந்த நிதியில் வைத்திய சாலை அமைக்கப்பட்டதுடன் அதற்குரிய காணியினை எமது கிராமத்தினைச் சேர்ந்த சிலர் அன்பளிப்பு செய்தமை குறிப்பிடத் தக்கது. அதனை அரசாங்கத்திடம் உத்தி யோகபூர்வமாக கையளித்து ஆரம்ப வைத்தியச் செயற்பாடுகள் வெகுசிறப்பாக முன்னெடுக்கப்படுவது எமது மக்களுக்கு கிடைத்த உன்னத கொடையாக அமைகின் றது. எமது கிராமத்தில் இலங்கையில் முதல் முதலாக அமைக்கப்பட்ட ஒன்றிணைந்த மின்சக்தி நிலையம் காணப்படுவது எமது கிராமத்திற்கு கிடைத்த சிறப்பம்சமாக அமைகின்றது. எமது கிராமத்தில் குடிநீர் பாரிய அத்தியாவசியப் பிரச்சினையாக காணப்படுகின்றது. இதனை எமது கிராமத் தின் துறைமுகத்தினை குறுகிய நிதியில் புதுப்பொலிவும் பலமும் அடையச் செய் வித்து அதன் சிறிய இலாபப் பணத்தினை பயன்படுத்தி கடற்படையினர் எமது கிராமத் தில் Ro plant அமைத்தமை எமது குடிநீர் பிரச்சினையை குறிப்பிடத்தக்க அளவில் பூர்த்தி செய்தமை பாராட்டுக்குரிய விடய மாக அமைவதுடன். மேலுமாக பாரிய வைத்திய சேவைக்கான விரைவுப்படகு உதவிகள் மற்றும் சிறுவர்களுக்கான போசாக்கு பானங்களுடனான சிறப்பான காலை மாலை பயிற்சிகள் தற்போது வரை கடற்படையினர் ஆற்றிவருவது எமக்கும் அவர்களுக்கும் உள்ள ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றது.

எமது கிராமத்தின் அமைவு மலைப் பகுதியை ஒத்ததாக அமைகின்றது நடுப் பகுதி உயர்ந்ததாகவும் ஏனைய பகுதிகள் அதிலிருந்து தாழ்ந்த பகுதியாகவும் காணப் படுவதுடன் கல் பாறைகள், கடலோர நன்னீர் கிணறுகள், கடற்கரை அழகிய அமைவுகள் எமது கிராமத்தினை கண் கவரச் செய்கின்றது. வாகனப் பாவனை குறைவாகவும் அதிகளவு துவிச்சக்கர வண்டிகள் பாவனைக்கு உட்படுத்தப்படுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனாலும் சூழல் பாதிப்புக்கள் மிகக் குறைவாகக் காணப்படும் கிராமம் எமது கிராமமாகும். எமது கிராமம் கடற்காற்றும் மற்றும் தமக்கு தேவையான உணவுகளை தாமே சுகாதாரமான முறையில் சமைத்து உண்ணும் முறை என்பவற்றால் நல் உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுளுடனும் தமது வாழ்வை நகர்த்தி செல்ல எமது கிராமம் ஏதுவாக அமைந்துள்ளது எமக்கு இறைவன் அளித்த கொடையாகும்.

எமது கிராமத்தில் பனை உற்பத்திகள் மற்றும் பாரம்பரிய முறையிலான சமையல் முறைகள் தற்போதும் உள்ளமை நமது பண்பாடு, பாரம்பரியங்களை காக்க கூடியதாக அமைந்துள்ளது. எமது கிராமத்தில் எமது மக்கள் வெளியிடங்களில் இருந்து வருபவர்களை வரவேற்பதில் வல்லவர்களாவும் நல்லவர்களாகவும் திகழ்வதனால் வந்தாரை வரவேற்கும் தீவு என்றும் செல்லமாக அழைப்பர்.

கடலலை மோதி விளையாட
நீர்த்துளி துள்ளி குதூகலிக்க
அள்ளி விளையாடும் கடல் மணல்
சூடு குதூகலமாக்க
மெல்லிய காற்று வருடிச் செல்ல
மேனியெல்லாம் இனிய இசை மீட்ட
ஆலமர நிழல் ஆனந்தம் தர
எங்கும் இல்ல மனமகிழ்வு கைகூடும்
இனிய நடனமேடை எம் எழுவைதீவு

எமது கிராமத்தின் இட அமைவு பல்வேறு நிகழ்வுகளின் படப்பிடிப்பு மையமாகவும் எண்ணத்திற்கு ஏற்ப வண்ணப் புகைப்படம் எடுக்கும் மற்றும் ஒளிப்பதிவு மையமாகவும் திகழ்வது குறிப்பிடத்தக்கது. மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தனிப்பட்ட வீட்டு நிகழ்வுகளை தமது சொந்த நிகழ்வாக ஏற்று ஒப்பேற்றுவது மற்றும் எமது கிராம வழமையுடன் பிணக்குகள் சமூக மட்டத்திலே தீர்க்கப்படும் உன்னத செயல் எல்லாம் எமது கிராமத் திற்கு உரித்தான பண்புகளும் பயன் தரும் விடயங்களாகவும் அமைகின்றன.

சாதி மத ஏற்றத்தாழ்வு இல்லை சமூக மட்ட வலுப்படுத்தல்களை சன சமூக நிலையங்கள் மற்றும் இளைஞர் கழகங்கள் மத குருமார்களினால் நெறிப்படுத்தப்பட்டு செயல் வடிவம் பெறுகின்றன. குறிப்பாக தனது சொந்த நிதியை அதிகளவு பயன் படுத்தி மணிவாசகர் அறிவகத்தை சிறப்பாக இயக்கி கல்வி மற்றும் கலை சமூக ஒருமைபாட்டை வளப்படுத்தும் சண்முகலிங்கம் ஐயா பாராட்டத்தக்கவர் இவ்வாறு ஊக்குவிப்பு அனைவர் மத்தியிலும் உருவாக்கத் திற்கான ஆரோக்கிய சிந்தை தோற்றம் பெறவேண்டும்

பணவிரயத்தை தவிர்ப்பவர்கள் எம் மக்கள். எழுவைதீவுக் கிராமம் எமக்கு கிடைத்த உயர்ந்த சொத்து. அதன் பண்பாடு பாரம்பரியங்கள் மேன்மேலும் பக்குவப் படுத்துவது எம் கடமை. எங்கள் கிராமம் என்றும் எப்போதும் புதுப்பொலிவு பெற கரையோர பாதுகாப்பை வளப்படுத்த அதிகளவு மரங்களை நாட்டி பாதுகாப்பிற்கு ஏதுவான சாதக நிலையை உருவாக்க அனைவரும் கைகோர்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழில் கொஞ்சும் காவலூர்

காவலூர் றமில்டன்
மண்குளி வீதி, ஊர்காவற்றுறை.

சப்த தீவுகளின் தலைநகரம்
காவலூர் அதன்
சிறப்பினைக் கூற
ஆயிரம் சொல்லெடுத்து
புனைகின்றேன் கவியொன்று...!

தாயை நேசிக்கும் அனைவரும்
தாய் மண்ணை நேசித்தல் கடமை
பாலும் தேனும் ஓடாவிடினும்
பாசம் நேசம் பொங்கி வழியும்
தேசம் அதை அறிவீர்...!

கடலின் மத்தியிலே கடற்கோட்டை
கரையினை அண்டி பழங்கோட்டை
உல்லாசப் பயணிகள் அனைவரையும்
கவர்ந்தீர்க்கும் சொர்க்க பூமி...!

காலை உதயம் கண்ணுக்கு குளிர்ச்சி
குபீரெனப் பாயும் கடலலையின் எழுச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டாம்பூச்சிகள் படையெடுப்பது போல்
பள்ளி மாணவர்களின் அணிவகுப்பு...!

நான்கு கோவில்கள் அரண் அமைக்க
நடுவினில் அழகிய நகரம் காவலூர்
கோடையில் வரட்சியாயினும்
குணமதில் வரட்சிகாணா குடிமக்கள்
படித்த பண்டிதர் பாமரரென
பாகுபாடற்ற சமூகம்...!

கிராமங்கள் புடை சூழ
குன்றத்து குமரன் போல
அறிஞர்கள் ஆயர்களென
அதிசயிக்க வைத்த கல்லூரி...!

தீவகத்தின் சிகரம் என
மிடுக்குடன் நிமிர்ந்த கல்லூரி
அந்தோனி என்ற பெயரினைத் தாங்கி
அழகிய முத்திரை பதித்த கல்லூரி...!

மகளீர்க்கென்று தனிச்சிறப்போடு
நகரின் மத்தியிலே மரியாள் பாடசாலை
இந்து மக்களின் தெய்வ பக்தியை
எடுத்தியம்பும் சிவன் கோவில்...!

குருக்கள் கன்னியர் துறவிகளென
குறிப்பிட முடியாத கணக்கு அது
அறிஞர்கள் கலைஞர்கள் ஆசான்கள் என
அடுக்கடுக்காய் அடுக்கலாம்....!

திரைகடலோடிய மாலுமிகள்
சிறப்புடன் மிளிர்ந்த நகரமிது
கடற்கரைக் காற்றும் தாலாட்டும்
கள்ளுத் தவறணைதனில்....!

G. Soundararajan
PILLAIAR KOVILADY
ANALAITIVU



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைபுரண்டிடும் சூரிய அஸ்தமனத்தினைக் கண்டு
குதூகலித்திடும் இளவல்களும் உண்டு
அவசர உலகில் அனைவருமே
அன்புடன் செய்யும் அர்ப்பணிப்பு
அறவழி நழுவா மக்களைக் கண்டு
ஆனந்தப்படுவதில் பேரின்பம்...!

வசதி வாய்ப்பற்ற மக்களுக்கென்று
வடக்கு றோட்டிலே வைத்தியசாலை வசதிகள்
இலவசமாய் கிடைத்தும் வாழத் தெரியாமல்
அக்கரைப் பச்சையை நம்பி
புலம்பெயர் தேசத்தில் அல்லலுறும் உறவுகள்...!

போரின் வடுக்கள் தெரிந்தாலும்
புதுப்பொலிவுடன் துலங்கும்
காவலூரின் பெருமைதனை
எடுத்தியம்பி பேரின்பம் காண்கிறேன்...!

சொல்லிலடங்கா சொர்க்கத்தை
தொலைத்துவிட்ட பாவிகள் நாம்
மீண்டும் கூடிக்குலாவிக் குதூகலிக்க
ஆண்டவன் அருளை வேண்டுகிறேன்...!

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யா/ புனித அந்தோனியார் கல்லூரியில் சமூகம் பெற்ற நன்மைகள்

வணபிதா. க. ஜேம்ஸ் சிங்கராஜர்,
அதிபர், புனித அந்தோனியார் கல்லூரி,
ஊர்காவற்றுறை.

**காவலூர் அந்தோனியார் கல்லூரி தீவுப் பகுதியின் கலைக்கோபுரம். காற்றும் கடலும் வெயிலும் அழிக்க முடியாத அறிவுநிதியை அளித்த கற்பக விருட்சம் அது. மாதவன் சபைத் துறவிகளும் பணிக்கெனப் பிறந்த குருமணிகளும் நல்லாசிரியச் சான்றோர்களும் அறிவாலும் தியாக சேவையாலும் குளிப்பாட்டி வளர்த்த பூஞ் செடியது. அந்நியக் காலணித்துவம், பின்னர் அண்டைய காலணித்துவம், தொடர்ந்து பண்டைய சோழன் வாரிசு கரிகாலன் காலம் கண்டும், இன்றைய இலங்கா ஆட்சி இடுக்கண் ஊடாகவும் 150 ஆண்டுகளாக இடையறாத கல்விப் பணி புரியும் எமது கலைக்கூடம் அது.**

தெய்வபக்தி, புனிதவாழ்வு, மனிதமாண்பு, நாட்டுப்பற்று என்பவற்றின் கல்வெட்டுக்களை நெஞ்சில் பதித்த எழுத்தாணி. ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதித்த வள்ளுவரின் வாரிசுகள் முன்நடந்து காட்டிய வாசற்படி. கண்ணைக் கவரும் கலைகள், எண்ணம் கவரும் சிந்தனைகள், விண்ணைக் கவரும் ஞானதீபங்கள், கண்ணைக் கவரும் பாடல்கள், ஓவியங்கள், காவியங்கள்,விளையாட்டுத்துறை என்பவற்றின் உற்பத்தி ஸ்தானம். சொர்க்கத்தின் சாவியை இடுப்பில் கொண்டு திரியும் ஞான ஆசிரியர்களின் பொற்கோயில். "சகோதரத்துவம் என்ற வீணையை மீட்டிக்கொள்ளுங்கள்" ."அன்பென்னும் மதுக்கோப்பையை கொடுங்கள் அதனையே எல்லோரும் சேர்ந்து தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணுங்கள்" என்று அறிவுறுத்திய அறிவுச்சாலை.

இவ்விதம் கல்விக்கோர் கலங்கரை விளக்கமாகத் திகழும் புனித அந்தோனியார் கல்லூரியானது சமூகத்திற்கு ஆற்றிய சேவைகளை பட்டியலிட்டு உள்ளடக்கிவிட முடியாது. அத்தனை நிறைந்த சேவைகளால் பொலிவடைந்து நிறைந்து கம்பீரமாக காட்சி யளிக்கின்றாள் எம் கல்லூரித்தாய்.

1872ம் ஆண்டு ஊர்காவற்றுறை பங்குத்தந்தை அருட்பணி பொய்சோ (அ.ம.தி) அவர்களால் சிறிதாக விதையிடப் பட்டு இறைவனில் நம்பிக்கை (Deo Confidimus) என்ற கல்லூரியின் தாரக மந்திரத்தை இலட்சியக்கோட்பாடாகக் கொண்டு இன்றும் விழுதுவிட்டு சமூகத்திற்கு நிழல்விட்டுக் கொடுத்து பலனளிக்கும் பெருவிருட்சமாக திகழ்கின்றது.

கல்விச் செல்வத்தை கருணை உள்ளத்தோடு எமக்கு அள்ளித்தந்த கற்பக விருட்சம் தான் எமது கல்லூரி. அந்த கற்பகதருவில் கற்றுத் தேர்ந்தோர் ஆயர்களாக, குருமார்களாக, பொறியியலாளர்களாக, வைத்திய கலாநிதிகளாக, கணக்கியல் பரிசோதகர்களாக, ஆசிரியர்களாக, வர்த்தகர்களாக மற்றும் பல்வேறு துறைகளிலும் சீருடனும் சிறப்புடனும் உள்நாட்டில் மாத்திரமல்ல உலக நாடுகளிலும் வாழ்ந்து வருவதற்கு எம் கல்லூரித்தாயே காரணம் எனின் அது மிகையாகாது.

ஒருவரிருவரையல்ல இலங்கை கத்தோலிக்க திருச்சபை வரலாற்றிலேயே முதல் முதல் சுதேச ஆயராக அபிஷேகம் செய்யப்பட்ட அதிவந்தனைக்குரிய ஆயர் ஜே.எமிலியானஸ்பிள்ளை அதிவந்தனைக் குரிய ஆயர் பி. தியோகுப்பிள்ளை அதிவந் தனைக்குரிய ஆயர் எல். ஆர். அன்ரனி. அதிவந்தனைக்குரிய ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், அதிவந்தனைக்குரிய ஆயர் கிங்ஸி சுவாம்பிள்ளை, அதிவந்த னைக்குரிய ஆயர் யஸ்ரின் பேனாட் ஞானப் பிரகாசம் மொத்தம் ஆறு ஆயர்களை உருவாக்கிய பெருமை எம் கல்லூரிக்கு உண்டு. அத்தோடு ஏறத்தாழ 45 குருமணிகளை அளித்த பெருமையும் இக்கல்லூரிக்கு உண்டு.

"தேமதுரைத் தமிழோசை உலகெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற வாக்கிற்கிணங்க உலகம் முழுவதும் பணியாற்றி உலகத் தமிழராட்சி மாநாட்டை தோற்றுவித்தவரான தமிழ்தூது தனிநாயகம் அடிகளார் கல்வி கற்றது எம் கல்லூரியே என்று ஒவ்வோர் காவலூர் மைந்தனும் பெருமை கொள்ளச் செய்தது.

இன்னும் ஊர்காவற்றுறையிலே பிறந்த அருட்தந்தை பீற்றர்பிள்ளை அடிகளார் அகில இலங்கையிலேயே மிகச் சிறந்த மாணவனாகவும் வித்தகராகவும் கல்விமானாகவும் சிறப்பு பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. எம் நாட்டின் உயர்நீதி அரசராக சர்வானந்தா பணியாற்றியதை எண்ணிப்பார்க்கையில் எமது கல்லூரியின் சேவை எவ்வளவு மகத்தானது என எண்ணி வியப்படைய வைக்கின்றது.

முன்னைநாள் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமாக விளங்கிய பி. பாலசுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை அவர்கள் எம் கல்லூரியின் புதல்வ னாகக் காணப்பட்டமையும் எம் கலைக் கூடத்திற்கு மேலும் பெருமை சேர்ப்பதாக அமைகின்றது.

மேலும் கலை பண்பாட்டு முயற்சி களில் ஆர்வமுடன் ஈடுபட்ட அமரர் அமிர்த கான அருளப்பு அண்ணாவியார் அவர் களையும் அமரர் காவலூர் கவிஞர் ஞா.மா செல்வராசா அவர்களையும் காவலூர் மண் ணில் கலைப்பணியாற்ற செய்தது நம் கல்லூரி. இன்றும் காவலூர் மண்ணில் புகழ் பெற்று விளங்கும் ஞானசவுந்தரி மற்றும் பண்டாரவன்னியன் முதலான தென்மோடிக் கூத்துக்களை கவிஞர் ஞா.மா செல்வராசா அவர்கள் இயற்ற அதனை அமிர்தகான அருளப்பு அண்ணாவியார் நெறியாழ்கை செய்து பலமுறை கொழும் பில் மேடையேற்றினார்கள். இதிலே குறிப் பிடத்தக்க விடயம் என்னவென்றால் 2002 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வெளி யிடப்பட்ட தரம் 07 ற்கான "தமிழ்மொழியும் இலக்கியமும்" பாடநூலில் பல்சுவைப் பாடல் கள் எனும் பகுதியில் காவலூர்க் கவிஞர் ஞா.மா செல்வராசா அவர்கள் எழுதிய நாட்டுக்கூத்திலிருந்து "ஞானசௌந்தரி தேவாரம்" (அலைகடலில் துரும்பானேன்) எனும் பாடப்பகுதி இணைக்கப்பட்டுள்ள மையும் குறிப்பிடத்தக்கதாகும்.

2010 ஆம் ஆண்டிலே மாணவர்க ளால் மேடையேற்றப்பட்ட "அரிச்சந்திர மயானகாண்டம்" இசை நாடகமானது மாகாண ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதோடு இன்றும் அனை வர் மனங்களிலும் அழியாத இடம்பிடித் திருக்கின்றது என்று கூறினால் மிகையா காது. யுத்த காலத்தின் பிடியின் பின் 2010 ஆம் ஆண்டிலிருந்து எம் கல்லூரி மாண வர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்று கல்வி கற்றமையும் கற்று வருகின்றமை யும் குறிப்பிடத்தக்க விடயமாகும் .ஏறத்தாழ 32 மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பெருமையும் எம் கல்லூரி யையே சாரும். விசேட விதமாக கணிதத் துறையிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்று எம் கல்லூரி மாணவன் இன்று பல்கலைக் கழகத்தில் கல்வி பயில்வது குறிப்பிடத் தக்கதாகும்.

கல்வித்துறையில் மட்டுமல்லாது விளையாட்டுத்துறையிலும் எம் கல்லூரி தீவின் மகுடமாக சுடர்விட்டு ஒளிர்கின்றது என்று கூறினாலும் மிகையாகாது. 2008 ஆம் ஆண்டிற்குப்பின்னர் உடற்பயிற்சி போட்டிகளில் இக்கல்லூரி தேசிய மட்டத்தில் வெற்றிகளைக் குவித்து வருவது குறிப்பிடத் தக்கது.

| ஆண்டு | பதக்கம் |
|---|---|
| 2008 | தங்கம் |
| 2009 | வெண்கலம் |
| 2010 | வெள்ளி |
| 2011 | தங்கம் |
| 2012 | வெள்ளி |
| 2014 | வெண்கலம் |
| 2015 | தங்கம் |
| 2016 | வெண்கலம் |
| 2017 | தங்கம் |
| 2018 | வெள்ளி |

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட "ரக்பி" (Rugby) குழுவினரும் ஆரம்பிக்கப்பட்ட முதல் ஆண்டிலேயே தேசிய மட்டத்தில் சாதனை படைத்தனர். வடமாகாணத்தின் சிறந்த அணியாக தெரிவு செய்யப்பட்டு காலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்கம மைதானத்தில் நடைபெற்ற 2012 ஆம் ஆண்டுக்கான தேசிய "ரக்பி" சுற்றுப் போட்டியில் பங்குகொண்டு தென்பகுதி முன்னணி அணிகளில் பலவற்றைத் தோற்கடித்து காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று விளையாட்டுத்துறை அமைச்சு அதிகாரிகளையும் ரசிகர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினர்

இதனைவிட 2011ஆம் ஆண்டு அஞ்சலோட்டப் போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றமையும், 2013 ஆம் ஆண்டு "கராத்தே" யில் பங்குபற்றி தேசியத்தில் சாதனைகளை நிகழ்த்தியமையும் குறிப்படத் தக்கவையாகும்.

இதுவரை 120 தங்கப்பதக்கங்களையும் 90 வெள்ளிப்பதக்கங்களையும் 94 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று மொத்தமாக 304 பதக்கங்களையும் பெற்று அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்டப் போட்டிகளில் கூடிய பதக்கங்களைப் பெற்ற பாடசாலையாக வடக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்திருக்கின்றமை சிறப்புக்குரிய விடயமாகும். விளையாட்டுத்துறை, கல்வித்துறை மட்டுமல்லாது தொன்றுதொட்டு சமூகத்திற்கும் எம் கல்லூரி அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகின்றமை வரவேற்கத்தக்கதாக காணப்படுகின்றது.

எமது பாடசாலை மைதானமானது சிறப்பான வகையில் புனர்நிர்மாணிப்பு செய்யப்பட்டு 400 மீட்டர் ஓட்டப்பாதையினை கொண்டு மிளிர்வதும்,அனைத்து துறைசார் விளையாட்டுக்களிற்கும் எம் கல்லூரி மைதானம் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

இன்னும் சாரணிய இயக்கம் சென் யோன்ஸ் அம்புலன்ஸ் என்பவை இயக்கப்பட்டு அனைத்து விளையாட்டு நிகழ்வுகளின் போதும், ஆலயத் திருவிழாக்களின் போதும் விசேட நடமாடும் சேவைகளின் போதும் மிகவும் அர்ப்பணிப்புடனும் ஒழுக்கத்துடனும் தமது சேவையை ஆற்றி வருகின்றமை எம் கல்லூரித்தாயின் பெருமையை இன்னும் ஒளிரச் செய்வதாகக் காணப்படுகின்றது.

இவ்வண்ணமாக சமயத்திற்கும், தமிழுக்கும் பணியாற்றும் நல்ல மாணாக்கர்களைத் தந்தது எம் கல்லூரி என்று கூறுவதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றோம்.

இவ்விதமாக பலரை உருவாக்கிய எமது கல்லூரி எதிர்காலத்திலும் சிறப்பான சாதனைகள் பல படைத்து புகழ் பரப்பி குன்றின் மேலிட்ட தீபமாக குவலயத்தில் மிளிர்ந்திட நாமும் வாழ்த்துவதில் உவகை கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறுக்குக் கடல்

திரு. சி. வினேஸ்
கிராம அலுவலர்,
ஊர்காவற்றுறை.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் முதன்மையான நன்னீர்த் தேக்கமாக குறுக்குக்கடல் காணப்படுகின்றது. புளியங்கூடலின் மேற்குப் பகுதியிலிருந்து பரந்து விரிந்து சென்று நாரந்தனை மற்றும் கரம்பொன் பகுதிகள் வரையும் அண்ணளவாக 3 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் குறுக்குக்கடல் வியாபித்து நிற்கின்றது. யா/ 60 புளியங் கூடல், யா/ 59 சுருவில், யா/ 58 நாரந்தனை தெற்கு, மற்றும் யா/ 53 கரம்பொன் தென்கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் இந் நீர்த்தேக்கத்தினை உள்வாங்கி உள்ளன.

குறுக்குக்கடல் அதன் பெயருக்கு ஏற்றாற்போல் இயற்கையா கவே அமைந்த ஒரு கடல்நீரேரி ஆகும். முன்னைய காலங்களில் பெருமளவு உப்பு விளைகின்ற ஒரு பிரதேசமாக இப்பகுதி காணப்பட் டது. கடற்பெருக்குக் காலங்களில் இப்பகுதிக்குள் உட்புகும் கடல்நீர் பெருமளவான உப்பு விளைய காரணமாய் இருந்தது.

குறுக்குக்கடலைச் சூழக் காணப்பட்ட குடியிருப்புக்களிலிருந்த கிணறுகள் உவர் நீராகவே இருந்தது. அதுபோல விவசாய நிலங்க ளும் உவர் நிலங்களாக படிப்படியாக மாறிக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவான நிலங்கள் தரிசு நிலங்களாக மாற்றமடைய ஏனையவை பருவகாலம் தவிர்ந்த காலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத நிலங்களாகவே காணப்பட்டன.

இதேவேளை பருவமழைக் காலங்களில் இப்பகுதியை வந்தடையும் மழை வெள்ளம் எவ்வித தங்குதடையுமன்றி நேராக கடலை அடைந்தது. இதனால் பெருமளவான மழைநீர் எவ்வித பயனுமின்றி வருடாவருடம் கடலுடன் சங்கமமாகிக் கொண்டிருந்தது. வேலணை, சரவணை உள்ளிட்ட அயற் கிராமங்கள் அல்லாத பகுதிகளில் இருந்தும் வெள்ளநீர் இப்பகுதியூடாகவே கடலை வந்தடைந்தது.

இந்நிலையில் 1990 ற்கு முற்பட்ட காலப்பகுதியில் கடல்நீர் உட்புகாதவாறும் மழைநீர் கடலுக்குள் செல்லாதவாறும் அணை அமைக்கப்பட்டிருந்த போதும் இடப்பெயர்வு மற்றும் யுத்தம் ஆகியவற்றால் பராமரிப்பற்று அது சிதைவடைந்து விட்டது. 1996 இன் பிற்பட்ட காலப்பகுதியில் தீவகப் பகுதிகளுக்கு மக்கள் மெல்ல மெல்லக் குடியேறத் தொடங்கி 2002 ம் ஆண்டு யுத்த சமரச காலப்பகுதிக்குள் மக்கள் ஓரளவு மீள் குடியேறிய நிலையில் மீண்டும் தமது விவசாய நடவடிக்கைகளையும் ஆரம்பித்திருந்தனர்.

எனினும் குறுக்குக் கடலானது விவசாயத்திற்கு ஏற்றதாக அன்றி பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகவே காணப்பட்டது. விவசாயத்திற்குத் தேவையான நன்னீரைத் தேக்க முடியாத நிலையில் கடல் நீரே இப் பகுதிக்குள் உட்புகுந்திருந்தது.

இந்நிலையில் 2002 ஆம் ஆண்டு அப்போதைய ஊர்காவற்றுறைப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் திரு.கே.எக்ஸ். செல்வநாயகம் அவர்களின் முயற்சியால் வடக்கு, கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (நியாப்) கீழ் குறுக்குக்கடல் உவர்நீர்த் தடுப்பணை அமைக்கப்பட்டது.

அன்றிலிருந்து தீவகத்தின் முக்கிய நன்னீர்த் தேக்கமாகவும், ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் மிகப் பெரிய நன்னீர்த் தேக்கமாகவும் குறுக்குக்கடல் பெருமை கொள்ளப்படுகிறது. சுருவில் வீதியை மையமாக வைத்து இரண்டு மதகுகள் அமைக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்படுவதுடன் சுருவில் மயானத்துக்கு வடக்காக கடலுக்கருகே வான் கட்டும் வான்கதவுகளும் அமைக்கப்பட்டு, மிகை நீர் கடலுக்குச் செலுத்தப்படுகிறது.

**குறுக்குக்கடல் இன்று...**

கிழக்கே புளியங்கூடல் விவசாய நிலங்கள், தெற்கே சுருவில், விவசாய நிலங்கள் மேற்கே தணுவில் என்று சொல்லப்படுகின்ற விவசாய நிலப்பரப்பு, வடக்கே பெரியபுட்டி எனப்படுகின்ற கரம்பொன் கிராமத்தின் தென்பகுதியிலுள்ள தோட்டப்பகுதி தென்கிழக்கே நாரந்தனை விவசாய நிலங்களைக் கொண்டு தீவகத்திற்கே பசுமை வழங்கும் ஒரு பெரும் நன்னீர்த் தேக்கமாக குறுக்குக்கடல் காணப்படுகின்றது. இவற்றில் தணுவில் உள்ளிட்ட பெரும்பாலான தோட்டங்களுக்கு குறுக்குக் கடலில் இருந்தே நீர் பாய்ச்சப்படுகின்றது. இதேவேளை புளியங்கூடல் உள்ளிட்ட அயற்கிராம குடியிருப்புக் கிணறுகள் மெதுவான சீரான அள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் படிப்படியாக நன்னீராக மாறுவது உணரப்படுவதாக குடியிருப்பாளர்கள் கூறு கின்றனர். இந்த மாற்றம் 15 வருடங்களு க்கு முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது தெளிவாகப் புலப்படுகிறது.

அத்துடன் வருடாவருடம் கார்த்திகை மாதம் முதல் மாசி மாதம் வரையான காலப் பகுதியில் குறுக்குக்கடல் மற்றும் அதனோடி ணைந்த பகுதிகளில் வெளிநாட்டுப் பறவை களின் வரவும் அதிகரித்துக் காணப்படு கின்றன. இலட்சக்கணக்கான வெவ்வேறு வர்க்கங்களைத் சேர்ந்த வெளிநாட்டுப் பறவைகள் இக்காலப்பகுதியில் குறுக்குக் கடலை அலங்கரிக்கின்றன. பிரதான வீதி யில் குறுக்குக்கடல் அமைந்திராத காரணத் தினாலும் இது குறித்த தகவல்கள் உரியவர் களைச் சென்றடையாமையாலும் பறவை களைக் காண்பதற்கு இப்பகுதிக்கு வருபவர் கள் மிகக் குறைவே. சுற்றுலாப் பயணிக ளுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப் படும் பட்சத்தில் இயற்கை அழகுடன் கூடிய குறுக்குக்கடலில் வெளிநாட்டுப் பறவை களின் அணிவகுப்பைக் காணும் வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்கும்.

வான்கட்டினூடாக பேரிரைச்சலுடன் குறுக்குக்கடல் வான் பாய்கின்ற அழகை ரசித்திருப்பவர்கள் மிகக் குறைவாகவே இருப்பர். காரணம் இந்த வான்கட்டு அமை ந்த பகுதிக்குச் செல்வதற்கு மயான வீதியூடா கச் சென்று பின் அணைக்கட்டின் வழியே 100m இற்கு மேல் பற்றைகள் கற்களூடாக பயணிக்க வேண்டும். இதனால் உள்ளூ ரைச் சேர்ந்தவர்கள் கூட பலர் இதைப் பார்த்திருக்க வாய்ப்புக் குறைவு.

2015ம் ஆண்டின் பருவ மழைக்குப் பின்னர் பெரியளவில் இதுவரை வான் பாய வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் போதியளவு பருவமழை கிடைக்கா மையே இதற்குக் காரணமாகும். இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒரு முறையே குறுக்குக்கடல் வான் பாய்கின்ற அழகைக் காண முடியும். இக் காட்சி வன்னிப் பகுதியிலுள்ள குளங்களைப் போன்ற அதனையொத்ததாக அமைந்தி ருக்கும். குறுக்குக்கடல் அணைக்கட்டுக் கான போக்குவரத்துப்பாதை சீர்செய்யப் படும் பட்சத்தில் இந்த இயற்கை வனப்பை அனைவரும் ரசிக்கக் கூடியதாக இருக்கும்.

### வரட்சிக் காலம்

பருவமழை காலத்தில் பசுமையான பகுதியாகக் காணப்படும் குறுக்குக் கடலும் அது சார்ந்த இடங்களும் கோடை காலங் களில் முழுவதுமாக நீர் வற்றி வரண்டு போய்விடும். ஆனி தொடக்கம் கார்த்திகை வரையான காலப்பகுதியை குறுக்குக் கடலு க்கு இருண்ட காலப்பகுதியாகவே கணிக்க முடியும். ஆவணி, புரட்டாதி மாதங்களில் முழுமையாகவே நீர் வற்றி, பொருக்கு வெடித்துக் காணப்படும். அதே நேரம் அதிக காற்று வீசும் தருணங்களில் அது புழுதிப் புயலாக மாறி, நாரந்தனை தெற்குப் பகுதி, கரம்பொன் தென்பகுதி என்பன புழுதியால் நிறைந்து காணப்படும். இப்பகுதிகளைப் பொறுத்தவரையில் இது ஒரு பாரிய அனர்த் தமாகவே நோக்க வேண்டியுள்ளது. இத னால் சூழல் கடுமையாக மாசடைவதுடன், சுவாசம் சார்ந்த நோய்த்தாக்கங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின் றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய குறுக்குக் கடலை பயன்படுத்தும் கால்நடைகள் வேறு இடங்களை நோக்கி நகர வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால் இறைச்சிக்காக அவை சட்ட விரோதமாக வேட்டையாடப்படுவதுடன் வேறு இடங்களை நோக்கிச் செல்லாத கால்நடைகள் நீரின்றி இறக்கும் அபாய நிலையும் இக் காலப்பகுதியில் இங்கு ஏற்படுகின்றது. எனவே குறுக்குக்கடல் நீரின்றிப் போவதானது வருடாந்தம் நூற்றுக்கணக்கான கால்நடைகள் இறந்து போவதற்கு காரணமாக அமைகிறது. அதுபோல் குறுக்குக் கடலில் உயிர் வாழும் நீர்வாழ் உயிரினங்கள் வருடாந்தம் முற்றாக அழிந்து போகின்றன. இதனால் உயிர்ப்பல்வகைமை பாதிப்படைகின்றது.

### சட்ட விரோத மண் அகழ்வு

சட்டவிரோத மண்ணகழ்வானது இங்கு அதிகளவில் இடம்பெற்று வருகிறது. கடல் மட்டத்தை விடவும் ஆழமான குழிகள் தோண்டப்பட்டு மண் அகழ்ந்து செல்லப்படுவதால் கடல்நீர் உட்புகுவதற்கு வாய்ப்பாக இது அமைந்து விடுகிறது. அத்துடன் மண் அகழப்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. ஆங்காங்கே ஆபத்தான குழிகள் இப்பகுதியில் புதிது புதிதாக தோன்றுவதையும் காண முடிகிறது. இந்த ஆபத்தான குழிகளாலும் கால் நடைகளிற்கு உயிராபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. தனிநபரின் தேவைகள் ஆராயப்பட்டு பாதுகாப்பான வகையில் மண் அகழ்வதற்கு அனுமதிக்கப்படின் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும் அதேவேளை சட்ட விரோத மண் அகழ்வைக் கட்டுப்படுத்த சட்டத்தை இறுக்கமான முறையில் அமுல்படுத்த வேண்டியதும் காலத்தின் தேவையாகும்.

### அபிவிருத்திப் பணிகள்

2002ம் ஆண்டின் பின்னர் பெரியளவிலான அபிவிருத்திப் பணிகள் எதுவும் குறுக்குக்கடலை மையப்படுத்தியதாக நடைபெறவில்லை. வான் கதவுகளில் காணப்படும் நீர்க்கசிவுகள் காரணமாக பெருமளவான நீர் வருடாந்தம் கடலைச் சேர்கிறது. உண்மையில் மேலதிக நீர் வெளியேற்றப்பட்ட பின்னர் சேமித்து வைக்கக்கூடிய நீரை வீண்விரயமின்றி பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பு. எனினும் கதவுகளில் ஏற்படும் கசிவினூடாக பெருமளவான சேமித்து வைக்க வேண்டிய நீர், கடலைச் சேர்கிறது. அதுபோல் கரம்பொன் சவக்காலைக்கு அருகில் சுருவில் வீதியிலுள்ள மதகுகள் இரண்டினூடாக பெருமளவான நீர் வெளியேறுகிறது. இம் மதகுகள் இரண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டு மேலதிக நீரை வெளியேற்றுவதற்கான கதவுகள் பொருத்தப்படுகின்ற பட்சத்தில் இப் பகுதியூடாக விரயமாகும் நீரையும் பாதுகாக்க முடியும்.

பொருத்தமான தொழில்நுட்ப ஆலோசனைகளின்படி குறுக்குக்கடல் ஆழமாக்கப்பட்டால் அதன் கொள்ளளவை அதிகரிக்க முடியும். அதுபோல் மண் திட்டுக்கள் மேடுகளை சமப்படுத்துவதன் மூலமும் நீரேந்து பிரதேசத்தை அதிகரிக்க முடியும். இதனால் பெருமளவான மண் இங்கிருந்து கிடைக்கும் குறுக்குக்கடல் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக்கு மேலதிகமாகப் பெறப்படும் மண்ணை பொதுமக்களுக்கு வழங்க முடியும். இதனால் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலுமென்பதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டவிரோத மண்ணகழ்வையும் தடுக்க முடியும்.

சுருவில் வீதியை மையப்படுத்திய மதகுகள் சற்று உயர்த்தப்படும் பட்சத்தில் நீரேந்து பிரதேசத்தின் பரப்பளவை மேலும் அதிகரிக்க முடியும். எனினும் அரச காணிகளில் குடியமர்த்தப்பட்டுள்ள சூரியவத்தை மற்றும் அண்ணா வீதியின் குறுக்குக்கடல் கரையோரங்களில் உள்ள 15 வரையிலான குடும்பங்களின் வீடுகளை வெள்ளம் சூழும். எனவே இவர்களுக்கான மாற்றுக் காணிகளை வழங்குவதன் மூலமோ அல்லது இக் காணிகளை மண் நிரப்புதல் மூலமோ எதிர்விளைவுகளில் இருந்து காத்துக்கொள்ள முடியும். இவ்வாறான திட்டங்கள் மிகவும் சவால் மிகுந்ததாக உள்ள போதும் எமது நன்னீர் வளத்தை தக்க வைக்கும் பொருட்டு இவை சிந்திக்க வேண்டிய விடயங்களாகவே கருதப்படுகின்றன.

அத்துடன் குறுக்குக்கடலை மையப் படுத்தியதாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்க முடியும். குறுக்குக் கடலானது வெட்டவெளிப் பிரதேசமாகக் காணப்படுவதால் இப்பகுதியில் நடுகை செய்வதற்கு உகந்த மரங்கள் குறித்து ஆய்வு செய்து துரித கதியில் பொருத்தமான மரங்களை நடுகை செய்ய வேண்டும். அத்துடன் நன்னீர் வளர்ப்புத் திட்டங்களையும் இங்கு நடைமுறைப்படுத்த முடியும்.

துறை சார்ந்த வல்லுனர்கள் பொறியியலாளர்களின் ஆலோசனையுடன் அரசாங்கம் உரிய திட்டங்களை இங்கு முன்னெடுக்குமானால் மட்டுமே ஊர்காவற்றுறையின் நன்னீர் வளத்தைக் காப்பாற்ற முடியும். இயற்கை எமக்குத் தந்த பெருங்கொடை குறுக்குக்கடல். அதை நவீனப்படுத்தி வளப்படுத்தி எமது பிரதேசத்துக்கான நன்மைகளைப் பெற்றுக்கொள்வது எமது தார்மீகப் பொறுப்பு.

இன்றைய காலநிலை மாற்றங்களும், வறட்சி உள்ளிட்ட அனர்த்தங்களும் அதையே எமக்குச் சுட்டிக்காட்டுகின்றன.




சந்தோஷமான குடும்பங்கள் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்கின்றன. துக்ககரமான குடும்பம் ஒவ்வொன்றும் வெவ்வேறு மாதிரியாக இருக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களாலேயே நாம்...


பானுசிறி ஸ்ரீகந்தராசா
பொது முகாமைத்துவ உதவியாளர்
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.


**சமூகத்தின் தேவைகளுக்கும் குடிமக்களின் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்புடைய வகையில் அபிவிருத்தியை மேற்கொள்ளல் அதனை நிர்வகித்தல் மற்றும் ஒழுங்கமைத்தல் போன்ற தொழிற்பாடுகளை ஓர் நாட்டினது அரசின் சார்பில் பொறுப்புடன் மேற்கொள்வதற்காக பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.**

பொது நிர்வாகம் என்ற பதத்தில் பொது என்பது மக்களையும் நிர்வாகம் என்பது ஆட்சியையும் குறித்து மக்களுக்கான ஆட்சியாகவே கருதப்படுகின்றது. அவை தம் நிர்வாகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் வாழும் குடிமக்களுக்கு எவ்வித வேறுபாடுகளுமின்றி சமமான சேவை வழங்கலை உறுதிசெய்ய வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இனம், மதம், பிரதேசம் என்ற வித்தியாசமின்றி குடிமக்களின் அனைத்துப் பிரிவினருக்கும் பாரபட்சமின்றி பொறுப்புக் கூறக் கூடியதாகவும் அனைவரும் இலகுவில் அணுகக் கூடியதாகவும் தமது தேவைகளை எமது சேவையால் பூர்த்தி செய்யக் கூடியவாறும் பொறுப்புடன் செயற்படக்கூடியதாகவும் காணப்பட வேண்டும் என பெரிதும் எதிர்பார்க்கப் படுகின்றது. அரச நிர்வாக அமைப்புக்களை மக்களுக்கு அண்மித்த வகையில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபித்து அதன் மூலம் சேவை வழங்கலை இலகுபடுத்தல், பொதுச்சேவைகளை விரைவாக மக்களிடம் கொண்டு செல்லுதல் என்பன பொதுச்சேவை வழங்கலின் முக்கிய நியதிகளாகும். இச்சேவைகள் மனித மேம்பாட்டிற்கும் சமூக இயக்கத்திற்கும் பெரிதும் அத்தியாவசியமானவைகளாகும்.

1988 ஆம் ஆண்டு டிசம்பரில் ஜனாதிபதியாக பதவியேற்ற ரணசிங்க பிரேமதாச அவர்கள் மக்களுக்கான சேவை என்ற அடிப்படையில் நிர்வாகத்தினை மக்களின் காலடிக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்தார். இதன் பயனாக 1989 இல் உதவி அரசாங்க அதிபர் என்ற பதவி பிரதேச செயலாளராக மாற்றப்பட்டது. 1991 ஆம் ஆண்டு பிரதேச செயலக முறை நடைமுறைக்கு வந்தது. நாட்டில் சராசரியாக 30,000 - 40,000 பேருக்கு ஒன்று என்ற வகையில் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் பொது நிர்வாக நிறுவனங்களின் பணியாக சமூகத்தில் வாழும் மிகவும் பலவீனமான, ஒதுக்கப்பட்ட ஜனக்குழுக்களை இனங்கண்டு அவர்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கு அவசியமான சேவைகளையும் உதவிகளையும் வழங்கி அவர்களை தேசிய நீரோட்டத்துடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அரசு மக்களின் பொது நலன்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களையும் கொள்கைகளையும் உருவாக்கி செயற்படுத்தி வருகின்றது. அரசாங்கம் பல அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் கொண்டு பொதுமக்களின் தேவைகளை இனங்கண்டு கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்த வகையில் கொள்கைகளை அமுல்படுத்தும் நிர்வாகக் கட்டமைப்பில் பிரதேச செயலகங்கள் மிக முக்கியமான இடத்தினை பெறுகின்றன. மாவட்ட செயலகத்திற்கு அடுத்த நிர்வாகக்கட்டமைப்பாக காணப்படும் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டமையின் நோக்கம் அரச சேவையினை சாதாரண பொதுமக்களின் காலடிக்கு கொண்டு செல்வதற்காகவே.

மத்திய அரசாங்கத்தின் அமைச்சுக்களினை பிரதேச மட்டத்திற்கு கொண்டு செல்வதற்காக ஒவ்வோர் அமைச்சிலிருந்தும் அல்லது ஒவ்வோர் அமைச்சு திணைக்களங்களில் இருந்தும் அரச உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களில் கடமையாற்றுகின்றார்கள். அதேபோன்று 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய உடன்படிக்கை மூலமாக உருவாக்கப்பட்ட மாகாண சபையின் கீழ் பல விடயங்கள் கொண்டு வரப்பட்டன. இதில் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் சார்பாகவும் அரச உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களில் கடமையாற்றுகின்றனர். கிராம சேவைப்பிரிவில் பிரதேச கட்டமைப்பில் இருந்து நேரடியாக கடமையாற்றுபவர்களாக கிராம சேவகர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் போன்றோர் காணப்படுகின்றனர். மேலதிக வினைத்திறனான முறையில் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொதுமுகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலகப்பணியாளர்கள் என பலரும் இணைக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச சேவையினை ஒருங்கிணைக்கும் பிரதேச செயலகம் என்பது ஓர் பிரஜையின் பிறப்பு முதல் இறப்பு வரையான கால கட்டத்தில் அரசில் இருந்து பெறக்கூடிய பெரும்பாலான சேவைகளை வழங்கும் முதற்படியான அரச நிர்வாக இயந்திரமாகும். பிரதேச செயலக முறை உருவாக்கத்தின் மிக முக்கிய நோக்கம் மக்களின் தேவைகளை காலதாமதமின்றி நேர்த்தியான முறையில் பெற்றுக் கொடுப்பதாகும். ஆனால் நடைமுறையில் இலஞ்சம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம், பாரபட்சம் மற்றும் அரச சேவை தொடர்பான தெளிவான வழிகாட்டலின்மை என்பன மக்களை விரக்தி மனப்பாங்கிற்கு இட்டுச்செல்கின்றன.

அந்தவகையில் மக்களுக்காக நியமிக்கப்பட்ட ஊழியர்கள் முக்கியமானவர்களே. இவர்களுக்கிடையிலான உறவு சிறந்ததாக காணப்பட வேண்டும். இது குழுச்செயற்பாட்டிற்கு அவசியமானதொன்றாகும். இதன் மூலம் மக்களுக்கு சிறந்த சேவையினை ஒன்றிணைந்து ஒரே இலக்கின் கீழ் வழங்க முடியும்.

இவ்வாறாக பொதுமக்களின் வரிப் பணத்தினை சம்பளமாகக் கொடுத்து மக்களுக்காக நியமிக்கப்பட்ட ஒவ்வொரு அரச உத்தியோகத்தர்களும் தமது கடமைகள் பொறுப்புக்களை நியாயமான முறையில் மனச்சாட்சியுடன் வினைத்திறனான முறையில் செயற்படுத்தி அரச சேவையை மக்களின் வீட்டு வாசலிற்கு உரியமுறையில் எடுத்துச் செல்லப்பட்டிருந்தால் ?

எமது நாட்டின் மூலை முடுக்கு எங்கும் வாழும் ஒவ்வொரு பிரஜையும் அடிப்படை வசதிகளேனும் நிறைவேற்றப்பட்ட வாழ்விடத்தினைக் கொண்டவர்களாக ஆரோக்கியமான சுகாதாரமான பூரண கல்வி அறிவுடைய வாழ்வாதார தேவையை நிறைவேற்றக்கூடிய வருமானம் ஈட்டுபவர்களாக பிறவிப்பயனின் ஏதோ ஓர் அர்த்தத்தினை உலகிற்கு வெளிப்படுத்தும் மாமேதைகளாக திருப்திகரமாக வாழ்வார்கள்.

ஆனால் எம் பிரதேசங்களிலோ! ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகள், அங்கவீனமான சித்த சுவாதீனமான பச்சிளம் பாலகர்கள், ஆரம்ப கல்வியையே இடைநிறுத்தி குடும்ப வறுமையால் நூறுக்கும் இருநூறுக்கும் கூலி வேலைக்குச் செல்லும் பள்ளிச்சிறார்கள், துஷ்பிரயோகங்களுக்கு உட்படும் பிஞ்சு உள்ளங்கள், குடிபோதைக்கும் போதைவஸ்திற்கும் அடிமையாகியிருக்கும் எதிர்காலத் தலைவர்கள் எனும் இளைஞர்கள், புத்தகப்பை தூக்கும் கைகளில் சினிமாப்பாணியில் பாரிய கொடூரமான வாள்கள், கிணறுகளிலும் நீரோடைகளிலும் கடலோரங்களிலும் மலையடிவாரங்களிலும் ஒதுங்கியிருக்கும் இளையோரின் பிணங்கள், வீதி விபத்தால் சிதைந்த சிரசுகளும் உடல்களும், துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள், பதின்ம வயதுப் பெண்களின் கர்ப்பங்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், கலாசாரப்பிறழ்வுடைய பெண்கள், பற்றைக்காடுகளிலும் குப்பைத்தொட்டிகளிலும் பிறந்து ஓர் இரண்டு நாளேயான சிசுக்கள், ஒருவேளை உணவிற்கே அல்லற்படும் நலிவுற்ற குடும்பங்கள், ஆண்டவனாலும் குடும்பத்தவராலும் தெருவோரங்களில் கைவிடப்பட்ட அங்கவீனர்கள், சமூகத்தின் முதுசம் என வர்ணிக்கப்படும் முதியோர்களின் இறுதிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால பரிதவிப்புக்கள், என எண்ணிலடங்கா சொல்லெனாத் துன்பங்கள் நிறைந்த காடாகவே காணப்படுகின்றது.

இவை எதுவும் இயற்கை அனர்த்தங் களினாலோ விலங்குகளினாலோ ஏற்பட் டவை அன்று. மனதைக் கனக்க வைக்கும் இச்சம்பவங்கள் யாவும் மனிதர்களாலேயே ஏற்படுத்தப்படுகின்றது. இவற்றை தவிர்க்கக் கூடிய வலு மனிதராக பிறந்த ஒவ்வொரு வரிடமும் காணப்படுகின்றது. அதனிலும் மனிதராக பிறந்த ஒவ்வொருவரும் சமூகம் தொடர்பான அக்கறையுடையவராக இருக்க வேண்டும். அதற்கு சமூகம் என்றால் நாம் என்பதனை உணர வேண்டும். அரச உத்தி யோகத்தர்களாகிய நமக்கு இது எழுதப் படாத விதி. ஆனால் கண்டும் காணாது விடுகின்றோம். நமக்கேன் ஊர்வம்பு என்ற அலட்சியப்போக்கு. இவை நம் வீட்டில் நடந் தால்?

சமூகத்தில் அசம்பாவிதங்கள் ஏற்பட அரச உத்தியோகத்தர்களாகிய எங்களு டைய பொறுப்பற்ற செயற்பாடுகளும் கார ணம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இதற்கு அரச உத்தியோகம் தொடர்பாக மரபு ரீதியாக தொடரும் நாகரீகமும் சூழ்நிலை யுமே காரணமாகும். அரச உத்தியோகத் தில் இணைக்கப்பட்டவர்கள் நியமனத் திகதியில் இருந்து பாடையில் போன பின்பும் தங்கி வாழ்வோருக்கும் ஊதியம் வழங்கப் படுவதாகும். தலைமைத்துவம் எல்லோரா லும் விரும்பப்படுவது ஆனால் எல்லோருக் கும் எளிதில் கிடைப்பதில்லை. கிடைத்தவர் கள் சரியான முறையில் செயற்படுத்தாமை யுமே இந்நிலைமைகளுக்கு முக்கிய கார ணம். தாபனக்கோவையில் குறிப்பிடப்பட்ட குற்றவியல் மற்றும் அதற்கான தண்டனை கள் சொற்பமாகவே காணப்படுகின்றது. அதுவும் நடைமுறையில் நிறைவேற்றப்படு வதில்லை. ஆனால் ஊழியருக்கான வெகு மதிகளோ ஏராளம். அவை ஒவ்வொருவரா லும் ஆழமாக அறியப்பட்டவை. ஏனென் றால் அவை அரச நிதிதானே! நம் வீட்டுக் காசு என்றால்? இலங்கை எனும் ஓர் நாட் டின் கூரையின் கீழ் வாழும் மக்கள் என வாயளவிலேயே தொழிற்படுகின்றோம்.

நிரந்தரமான சம்பளத்திற்காகவே அரச உத்தியோகத்தினை நாடுகின்றோம். ஒரு மாத சம்பளம் நிறுத்தப்பட்டால் எம் ஒவ்வொருவரதும் நிலை? மக்களுக்கு சேவை புரியும் எம்மை ஊக்குவிப்பதற்கா கவே இந்த வெகுமதிகள். ஆனால் நடை முறையில் மக்களை தொந்தரவாகவே எதிர்கொள்கின்றோம். அவர்களை அலட்சி யமாகவே நடாத்துகின்றோம். மக்களுக்கு சேர வேண்டியவற்றினை வழங்குவதற் கான இடைத் தரகர்களாகவே அரசு எம்மை நியமித்துள்ளது என்பதனை மறந்து செயற் படுகின்றோம்.

செயலகங்களின் இலக்கின் ஊடாக நாட்டின் இலக்கினை அடைய எத்தனிக்கும் போது பொருத்தமான உத்தியோகத்தர்க ளைப் பொருத்தமான முறையில் தெரிவு செய்யப்பட வேண்டும். அவர்களிற்கான கட மைகள் பொறுப்புக்கள் வலியுறுத்தப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டு கடமை நேரத் தின் போதான கருமங்கள் மதிப்பீடு செய்யப் பட்டு அலட்சியப்போக்கானவர்கள் விலத்தப் பட வேண்டும். எல்லோரும் ஏதோ ஒரு வகையில் சிறப்பானவர்களே. விலத்தப் படும் போது அதுபற்றிய அச்ச உணர்விலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது தமது திறமையான செயற்பாட்டை வெளிக்காட்டுவர் என்பதற்காகவே. இதனாலேயே தனியார் துறை சிறப்பான தொழிற்பாட்டினைக் கொண்டமைந்துள்ளது. காலப் போக்கில் அனைவரும் சிறப்புத்தேர்ச்சி பெற்ற வினைத்திறனான உத்தியோகத்தர்களாகவே தொழிற்படுவர். இவ்வாறான முடிவுகளை எடுக்க சிறந்த தலைவர்கள் உருவாக வேண்டும். உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரும் பொறுப்புக்களை பொறுப்பாக கையில் துணிந்து எடுக்க வேண்டும். முன்னெடுக்கும் கருமங்களை பொறுமையாக சகிப்புத்தன்மையுடன் முழுமனதோடு வினைத்திறனாக புதிய தொழில்நுட்பங்களினூடாக சமூகத்திற்கு தீங்கு ஏற்படா வண்ணம் தொழிற்படுத்தப்பட வேண்டும். எந்தவொரு செயலையும் சமூகத்தின் நலன் கருதி திட்டமிட்டு செயற்பட வேண்டும். திட்டமிட தவறுபவர்கள் தவறவிட திட்டமிடுகிறார்கள் என அறிஞர்கள் கூறுகின்றார்கள். நாம் ஒவ்வொருவரும் நாமாக நம்மை பண்படுத்தினாலேயே அழகான பூலோகத்தில் ஆரோக்கியமாக நாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைக்கலாம்.

ஏனைய நாடுகளை போல நாமும் இருக்க வேண்டும் என உவமைகளை ஊடுருவாமல் எம் நாட்டு வரையறுக்கப்பட்ட வளங்களை கொண்டு எம் நாட்டின் எல்லையற்ற தேவைகளை எம் நாட்டிற்கே உரித்தான பாணியில் வளப்படுத்துவோம்.

"தமிழர் என்ற இனம் உண்டு அதற்கு என்று ஓர் தனி குணம் உண்டு என பார் போற்ற வாழுவோம்."

●

"மனிதன் எப்படித் தோன்றியிருப்பான்?" என்ற பன்னெடுங்காலமாக தொங்கி நின்ற கேள்விக்கு தெளிவான விடையை சொன்னவர்.
மனித இனத்தின் பரிணாம வளர்ச்சியை பல நூற்றாண்டுக்கு முன்பே தெளிவுபடுத்திய வகையில், பல ஆராய்ச்சிக்கான கதவுகளை அகல திறந்து வைத்த பெருமைக்குரியவர்.

"மனிதன் ஒரு மணி நேரத்தை வீணாக்குகிறான் என்றால், அவன் வாழ்கையில் மதிப்பை உணரவில்லை என்று அர்த்தம்" என்கிறார் டார்வின்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமுதாய வாழ்வில் **கலையின்** முக்கியத்துவம்

V. றஞ்சினி

**ச**முதாய வாழ்க்கையுடன் கலைக்கு உள்ள உறவு என்ன என்கிற பிரச்சினை ஓரளவு வளர்ச்சியடைந்த எல்லா இலக்கியங்களிலும் எப்போதுமே மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாய் இருந்துள்ளது. சங்ககாலம் தொட்டு இன்றுவரை எம் வாழ்வில் பல கலைகள் பின்னிப் பிணைந்துள்ளமையை எம்மால் ஒருபோதும் மறக்க முடியாது. மனிதனை வாழ வைப்பதும் கலையே. அந்த வகையில் ஒரு மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரையான காலப்பகுதியில் பலவித சடங்குகள், கிரியைகள், மங்கள நிகழ்வுகள் என பலதரப்பட்ட பண்பாட்டு விழுமியங்களுடன் கூடவே வளர்கிறான்.

பொதுவாக முன்னோர்கள் ஆலயங்களினூடாக கலைகளை வளர்த்து வந்தார்கள் என்பது கண்கூடு. இதனை பலவகை சான்றுகள் மூலம் நாம் அறிந்துகொள்ள முடியும். கட்டடக்கலை, சிற்பக்கலை, நடனக்கலை, இசைக் கலை, வாத்தியக்கலை, ஓவியக்கலை எனப் பல்வேறு வகைக் கலைகளும் பல்லவர் காலத்தில் மேலோங்கி வளர்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

சமணர்களால் கீழ்நிலைக்கு தள்ளப்பட்ட எமது சமயம் பல்லவர் காலத்தில் புத்துணர்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. கலைகள் தமிழர் தம் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளது. என்பது யாராலும் மறக்க முடியாத ஒன் றாகும். அக்கலைகளை உலகுக்கு வழங்கும் வானோங்கிய கோபுரங்களும், வற்றாத இயற்கைச் சூழல்களும், பேசும் கற்பாறைகளும், இலக்கியங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் நம் முன்னே மேம்பட்டு "தமிழர் தம் வாழ்வு நல்ல பண்பட்ட வாழ்வு" என் பதை உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக் கின்றன. இந்த அடிப்படையில் நம் தமிழ் சமுதாயம் பெருமையுடன் பண்பாட்டைப் பேணிப் பாதுகாத்து வருகின்றது. இத்த கைய பண்பாட்டுக் கலைகளை பேணிப் பாதுகாக்க வேண்டியது இன்றைய சமுதா யத்தின் தலையாய கடமையாகும்.

தமிழர் வாழ்வை உலகுக்கு உணர்த் துவது கலைகளே. கலைகளும் இலக்கியங் களும் ஆன்மாவை பக்குவப்படுத்தும் தன் மையுடையது. தமிழிசை வளர்ந்த இசை, கிராமங்கள் தோறும் இவை கலைப்பயிற்சி மையங்கள் தோன்றி நாதஸ்வர இசை பழைய காலங்கள் போல் ஆலயங்களில் மங்கல வாத்தியங்கள் முழங்க வேண்டும். இவ்வாறான கலை நிகழ்வுகளால் மக்கள் குடும்பவாழ்வு வெற்றி பெறும். குடும்ப வாழ்வு மேலோங்க கிராமம் செழிக்கும் கிராமம் செழிக்க நாடு மேலோங்கும்.

"வரப்புயர நீருயரும்...." எனும் கூற் றுக்கிணங்க ஒரு நாட்டில் உள்ள அத்தனை செல்வங்களும் அந் நாட்டின் சமுதாயத் துடன் பின்னிப் பிணைந்துள்ளன. நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர் எனில் அந்நாட்டு அரசு சிறப்பாக அமைந் துள்ளது என்பது பொருள். நாட்டின் செழிப் பில் ஆலயங்களின் சிறப்பு மிகவும் இன்றி யமையாதது. ஆலயங்கள் தான் கலையின் இருப்பிடம் என்றால் ஐயமில்லை. சங்க காலம் தொட்டு இன்றைய 20 ஆம் நூற்றா ண்டு வரை கலை வளர்ச்சியை நோக்கின் கலை வளர்த்த பெருமை ஆலயங்களையே சாரும்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" இது முதுமொழி. எந்த ஒரு ஊர்மக்களின் மனஅமைதி கிடைத்து பண் பாடு கலாச்சாரம் மிளிரும் இடம் ஆலயம் ஆகும். சமுதாய மக்கள் சீரும் சிறப்புமாக, இன்பமாக வாழ ஆலயம் இன்றியமையா தது. ஆலயங்களில் தான் ஆயகலைகள் 64 கினையும் வளர்ச்சியடையச் செய்த பெருமை உள்ளது. இசையின் சிறப்பை தமிழ் மக்கள் பண்டைக் காலத்திலிருந்தே உணர்ந்து வருகின்றனர். இறைவன் இசையில் மயங்குபவன். என்பது அவர்கள் நம்பிக்கை. சங்ககால புலவர்கள் முதல் இன்றைய திரைப்பட பாடலாசிரியர்கள் வரை எல்லாருமே இசைத்திறமையினால் தமிழ் மக்களை வசப்படுத்தியுள்ளனர்.

இசையின் ஆற்றலை அறிந்தே பட்டுக்கோட்டையார்

"துன்பக் கடலைத் தாண்டும் போது
தோணியாவது கீதம்" என்று கவிதை

புனைந்தார். ஆறறிவு கொண்ட மனிதனை மற்றைய உயிரினத்திலிருந்து வேறுபடுத் திக் காட்டுவது கலையே. மனிதன் தோன் றிய காலத்திலிருந்தே கலை என்பது முக் கிய அம்சமாக திகழ்கிறது. கற்றனுக்குரியன வெல்லாம் கலையே. தற்கால மனிதர்கள் முதல் இன்றைய நவீன கால மனிதர்கள் வரை கலையை உருவாக்கிக் கண்டு களித்து ரசித்து அனுபவித்து வருகின்றனர்.

காலப்போக்கில் கலை என்பது பல மாற்றங்களை உள்ளடக்கி இன்று பல்வேறு முன்னேற்றங்களை அடைந்துள்ளது. கலை என்பது திறமை மற்றும் நுட்பமான தன்மையை உள்ளடக்கியது. கவிஞனின் கற்பனைத் திறனை ஐம்புலன்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுகளுடன் வெளிப்படுத்துவதே கலையாகும். இசைக்கலையைத் தொடர்ந்து கேட்பவர்க்கு மன அழுத்தம் குறையும். என மனோதத்துவ அறிஞர்கள் கூறுவர். நடனக் கலையானது மனித உடலுக்கான உடற்பயிற்சியாகத் திகழ்கின்றது.

பல்லவர்காலம் சோழர்காலம் நம் வாழ்வில் பொற்காலம் என்பது நாம் அறிந்த பேருண்மை. கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, பண்பாடு கலாச்சாரம் போன்ற எல்லாக் கலைகளையும் நேர்த்தியாகப் பேணிப் பாதுகாத்த பெருமை அந்நாட்டின் ஆலயங்களையே சாரும். பல்லவர் காலத்தை பக்தி நெறிக் காலம் எனவும் அழைப்பர். அந்த வகையில் சமய குரவர் நால்வர் பண்ணோடு தேவாரத் திருப்பதிகங்கள் பாடி பல அற்புதங்கள் நிகழ்த்தியமை சமுதாய வாழ்வில் கலையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது. எடுத்துக்காட்டாக சம்பந்தரும் அப்பரும் சேர்ந்து திருமறைக்காட்டில் அடைக்கப் பட்ட கதவினை மூடவும் திறக்கவும் பதிகங்கள் பாடியமை இசையின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது.

படிப்பறிவு இல்லாத பாமர மக்களையும் இலகுவாகப் புரிய வைக்கும் வகையில் தெளிவுபடுத்துவதும் கலையே. எளிய நடையில் இனிதே புரியும்படி நாட்டுக்கூத்து நாட்டார் பாடல், வில்லுப்பாட்டு, நாடக வடிவம் என பலதரப்பட்ட கலை அம்சங்களை நம் அன்றாட வாழ்வில் கண்டு பெருமிதம் கொள்ளுகின்றோம். அந்தவகையில் குழந்தைப் பருவத்திலே பாடும் தாலாட்டுப் பாடல் "ஆராரோ..." தொடக்கம் பள்ளிப் பருவங்களிலே பாடப்படும் சிறுவர் பாடல் "ஆனா சொல்லித் தந்தார்...", "பந்தடிப்போம் பந்தடிப்போம்...", குருவிக் குஞ்சே....", "வெள்ள முயல் காட்டுக்குள்ளே...." இவ்வாறான பல சிறுவர் பாடல்களுடன் நாட்டார் பாடல் வகைகளான அரிவி வெட்டுப்பாடல், "மண்ணை நம்பி...", கோலாட்டப் பாடல்", "கோலாடுவோம் நாமும் பண்பாடுவோம்..", மீனவர் பாடல்", "சிறுநண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்...", ஒப்பாரிப் பாடல் இவ்வாறு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையான பாடல்கள் கலையோடு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றமை கண்கூடு.

சந்தத் தமிழும் சாமகானமும் நமது உரிமைக் கலைகளாகும். பாட்டும் பரதமும் தமிழ் மக்களின் இரு கண்கள் என்பர். பரதம் ஒருத்தியின் வாழ்வில் பேரிளம் பெண் என்ற பருவத்தை அடையும் வரை தான் அவளுக்கு துணை நிற்கின்றது. ஆனால் பாட்டு மரண பரியந்தம். அவளுக்கு வரப்பிரசாதமாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தண்ணீர்த் தொட்டி

திரு. மா. பாலசிங்கம்

உந்த அலுவலுக்கு நீங்கதான் தோது.... ஆற்றை சொல்லையும் சனம் கேக்காது.

ஊர்ப் பிரமுகர்கள் தேன் சொரிய, பால் சொரியப் பேசிப் பென்னம் பெரிய வேண்டுகோளொன்றை விடுத்துச் சென்று விட்டனர். சாய்மனைக் கதிரையில் கிடந்து, தில்லையம்பலம் அங்குமிங்கும் புரண்டு கொண்டிருக்கின்றான்! விடுத்திருக்கும் அன்பான வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளுவதா அன்றேல் கை கழுவுவதா – இந்தப் பிரச்சினை தான் அவனது மனப் போராட்டத்திற்குக் காரணம். மொழிப்பிரச்சினை போல் அவ்வேண்டுகோள் அவனைத் திக்குமுக்காட வைக்கிறது.

"ஊர்ப் பெரிய மனிசரைக் காய்வெட்டுவதா....."

"கஷ்டப்பட்டாலும், கூழுக்குக் கஞ்சிக்கு இல்லாததுகளுக்கு உதவினால் நல்லது. கண்டவையிட்டையும் குடுத்தாச் சுருட்டிக் கொண்டு போயிடுவினம். அது தான் என் தலையில் கட்டினவை."

தில்லையம்பலத்தின் மனம் சலிக்கின்றது. பொதுப் பணியென்றால் முன்னுக்கு நின்று முடிச்சை அவிழ்த்து விடுபவன் அவன். இன்னமும் அந்த விலாசம் ஊருக்குள் நிலவுகின்றது. தனது வீட்டு முற்றத்தை அவன் ஏறிட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கிறான். முற்றத்தில் புழுதி பறக்கிறது. கொழுத்தும் வெயில் அவன் பார்வையை மழுங்கச் செய்கிறது.

"இஞ்சேரும்...." குரல் உரத்து ஒலிக் கிறது.

"இப்பத்தான் தேசிக்காய் கரைக்கி றன்... கொஞ்சம் பொறுங்க மனைவியின் உத்தரவை ஏற்று, நிமிர்ந்தவன் மீண்டும் சாய்மனையில் சாய்கிறான்.

குழப்ப நிலையில் இருந்த அவனுக்கு நல்லதோர் தீர்வு பிறந்துவிட்டதென்ற களிப்பு!

இந்தாங்க....... அலுமினிய லோட்டா நிறையத் தேசிக்காய் ரசத்தை மனைவி சற்குணவதி நீட்டுகிறாள். அவன் வாங்கிக் கொள்கிறான்.

அந்த வேட்டியைக் கொஞ்சம் கொண்டு வா....

குமையும் அகத்தை முகத்தில் நிழலாடவிட்டு, அகலவில்லை.

"நான் என்ன சொன்ன நான்" அலுமி னிய லோட்டாவைக் கீழே வைத்தபடி தில்லையம்பலம் கடுகடுக்கிறான்.

இந்த வெயிலுக்க எங்க வெளிக்கிடப் போறியள்? கணவனின் பேச்சை விளங் காதவள் போல நடித்துக் கொண்டு, சற்குண வதி அறையை நோக்கிச் செல்கிறாள்.

நல்ல காரியமெண்டாலும் சரி. கெட்ட காரியமெண்டாலும் சரி எப்பவும் இவளுக்கு இந்தக் கேள்விதான். தில்லையம்பலம் புறு புறுத்துக் கொண்டு நேரத்தைக் கடத்து கிறான்.

போம் குடுத்து முடிஞ்சிது. இப்ப வரட்சி நிவாரணம் வந்திருக்கு. ஊருக்க கதைச்ச கதை தெரியுந்தானே. வேட்டியையும், சால் வையையும் கணவனிடம் கொடுத்தபடி சற்குணவதி முறையிடுகிறாள்.

ரேப்பில பதிச்ச மாதிரி அதுகள் இன் னும் இவளிட்டக் கிடக்கு. ஊரவை என்னத் தைத் தான் கதைக்க மாட்டீனம்... நான் உள்ளிட்டா நறுக்கா நிப்பன். அந்தக் காம காரந்தான் எழுந்து நின்று தில்லையம்பலம் சாரத்தை அவிழ்க்கிறான்.

இஞ்ச வந்து தலைக்குத்து, மண் டைக்குத்தெண்டு நிற்கக் கூடாது. உந்த வெய்யில் தலைக்குத்தை, மண்டைக்குத் தையா குடுக்கும் ஆளை ஈயம் மாதிரி உருக்கிப்போடும்.

ஊர் அலுவலெண்டா உங்களை நெருப்பில வைச்சுக் காய்ச்சினாலும் தெரி யாதே.

களைந்து கீழே கிடந்த சாரத்தைச் சற்குணவதி எடுத்துக் கொள்கிறாள்.

தில்லையம்பலத்தின் நிவாரண யாத்திரை தொடங்கி விட்டது, முற்றத்தில் இறங்கி விட்டான். வெந்து போயிருந்தனர். அவன் பாதத்தைக் கொதிக்கச் செய்கிறது. பாதங்களை நிமிர்த்திக் குதிகளால் நடக்கி றான்.

செருப்பைக் கொழுவிக் கொண்டு போங்களன்.

அறுந்தெல்லே போச்சு... தில்லையம் பலம் சலிப்போடு கூறுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செருப்பு வாங்க எங்களிட்ட வக்கில்லை. ஊர் முழுக்க நிவாரணக்காசில சுதி பண்ணுதுகள்.

உன்னை ஆரு உத்துயோகத்தினை முடிக்கச் சொன்னது.

கிழுவை மரத்தில் சாத்தி நின்ற சைக் கிளை எடுத்துக் கொண்டு தில்லையம்பலம் படலையை நோக்கி நடக்கிறான்.

ஆகவும் கடும்புடி புடிச்சு ஊருக்க பகையைக் காட்டாம... இந்த முறை எல்லா ரையும் சேஃத்துப் போடுங்க. தெருவோரத் தில் நின்று கொண்டு சற்குணவதி கணவ னுக்கு ஆலோசனை கூறுகிறாள்.

கண்ணைக் கூச வைக்கும் வெயில்! கதிரவன் பயங்கரவாதியாக இயங்கிக் கொண்டிருக்கிறான். தில்லையம்பலத்தின் வெறும் மேனி தீக்குழிக்கின்றது. குழிகள் விழுந்துள்ள பாதையில், நிதானத்தை இழக் காமல் சைக்கிளை ஓட்டுகிறான். கிழக் கூரை நோக்கிச் சைக்கிள் போய்க் கொண்டி ருக்கிறது.

தான் பொறுப்பேற்ற பணியை எப்படி யாவது குற்றம், குறை இல்லாது முடித்துவிட வேண்டுமென்று அவன் தனக்குள் கங் கணம் கட்டுகின்றான். சற்குணவதி சொன் னவைகள் அவன் மனதைப் பிய்த்துக் குத்து கின்றன. அவள் சொன்னவைகள் பாதிக்கு மேல் உண்மைதான். ஊதியமற்ற பணி! தன்னைப் போன்றவர்கள் ஒதுங்கிக் கொண்டால் முழுக் கிராமமுமே பாதிப்பிற்கு உள்ளாகும்! அதைக் கண்டு நெகிழ்ப் போவ தும் தானேதான்! தில்லையம்பலம் மீண்டு மொரு முறை சபலங்களிலிருந்து விடுபடு கிறான்.

அவன் புளியடிச் சந்திக்கு வந்து விட்டான். இன்னும் கொஞ்சத் தூரந்தான். முதல் தரிப்பு சின்னமணி வீட்டுக் கேற்றிற்கு முன் நிற்கிறது. தலைப்பாகையைக் குலை த்து, முகத்தில் வழிந்து கொண்டிருக்கும் வியர்வையைத் துடைக்கிறான். சைக்கிள் மணி ஓசை கேட்டு, சின்ன மணி கேற்ற டிக்கு விரைந்து வருகிறான்.

ஓ..... தில்லையோ வாய்க்குள் நிரப்பி வைத்திருந்த வெற்றிலை எச்சிலை ஓர மாகக் கொப்பளித்தபடி சின்னமணி திகைப் பிலிருந்து சாந்த நிலைக்கு வருகிறான்.

நிப்பியோ எண்டு யோசிச்சன்..........

இந்தக் காண்டியத்துக்க எங்க போறது. வீட்டுக்கதான் இருக்க முடியுதா? மரங்களுக்குக் கீழதான் இப்ப எங்கட நட மாட்டம் தில்லையம்பலத்திற்குச் செங் கம்பள வரவேற்பு.

உங்களையெல்லாம் உப்புடி வீடு களுக்கே அடஞ்சு கிடக்காமச் செய்யத்தான். இப்ப ஒரு புது வேலை வந்திருக்கு. நான் இப்ப வந்தது அதுக்குத்தான்.

சின்னமணியின் முகத்தைப் பார்த் துச் சொல்லிக் கொண்டு தில்லையம்பலம் கதிரையில் அமர்கிறான்.

உம்மட எந்த அலுவலுக்குக் காணும் நான் பின்னடிச்சனான் தில்லையம்பலத் தின் சிந்தனை மேகங்கள் கலைந்து விட்டன. வந்த அலுவலில் மூன்றில் இர ண்டு முடிந்து விட்டது போன்ற ஆறுதல்.

மணியின்ர குணம் எனக்கா தெரி யாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அறிவிக்க வந்த விஷயத்தை தில்லையம்பலம் ஒவ்வொன்றாகப் பிய்த்துப் பிய்த்து விளக்குகிறான். அவன் கூறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் தன் தலையை ஆட்டி ஆட்டிச் சின்னமணி தன் உடன்பாட்டை அறிவிக்கிறான்.

இந்த ஊருக்கு உந்த வரட்சி நிவாரணத்தை நிரந்தரமாக்கிப் போட்டாலும் நல்லது தில்லை... இல்லையே! சொல்லு பாப்பம், எந்த வருசந்தான் இஞ்ச மழை ஒழுங்காப் பெஞ்சிருக்கு? குடிக்கத் தண்ணி இல்லாமல் மிருக சாதியெல்லாம் றோட்டு றோட்டாகச் செத்துக் கிடக்கப் போகுது.

உம்மோட கதைக்கிற தெண்டா நெடுகக் கதைச்சுக் கொண்டு இருக்கலாம். எனக்கு அலுவல் கிடக்கு தில்லையம்பலம் எழுந்து நின்றான்.

என்ன, தண்ணி கிண்ணி குடிக்காமலோ? அவவும் வெளியால போட்டா...

நான் குடிச்சுப் போட்டுத்தான் வந்த நான். வீட்டுப் படிக்கட்டை விட்டு தில்லையம்பலம் தரைக்கு இறங்கினான்.

இனி எந்தப் படலைத் திறக்கப் போகிநீர்? பிரியாவிடை கொடுக்கும் பாணியில் வீட்டு வாசலில் நின்று கொண்டு சின்னமணி கேட்டான்.

இதுக்க ஜே.பியையும் இழுக்கப் போறன்.

தன் அடுத்த வீட்டுக்காரரைத் தான் குறிக்கப்படுகிறதென்பதைச் சுருதி சுத்தமாக அறிந்து கொண்டான் சின்னமணி. தில்லையம்பலம் கேற்றை நோக்கி நடந்தான்.

சைக்கிளை உருட்டியபடியே தில்லையம்பலம் றோட்டிற்கு மிதக்கிறான். பத்திற்கும் மேற்பட்ட மாடுகள் சின்னமணியின் வீட்டு மதில் ஓரமாக நிற்கின்ற சின்னமணியின் காணிக்குள் நிற்கும் உயர்ந்த தருக்கள் அம்மாடுகளுக்குக் குடை பிடிப்பது போல் நிழல் கொடுக்கின்றன. வெய்யிலின் வெம்மையை மறக்கத் தில்லையம்பலத்திற்கு அக்காட்சி கை கொடுக்கிறது. சைக்கிள் உருண்டு முன்னேறுகிறது. சின்னமணியின் கிணற்றடிக்கு முன்பாகத் தெருவோரத்தில் தொட்டியொன்று தெரிகிறது. அதைச் சுற்றி நின்று மாடுகள் அதற்குள்ளிருக்கும் நீரைக் குடிக்கின்றன.

தில்லை தொட்டீக்க தண்ணி கிடக்கா? ஒருக்காப் பாத்துச் சொல்லு.

துலாக் கயிற்றைப் பிடித்தபடி சின்னமணி நிற்பதைத் தில்லையம்பலம் கண்டு கொள்கிறான்.

இவ்வளவு மாடுகளும் குடிக்க உந்தத் தொட்டித் தண்ணி காணுமா? சின்னமணி.

காசு வரட்டும் பெரிய தொட்டி கட்டப் போறன். ஆனந்த ஆரவாரத்தோடு சின்னமணி உரத்துக் கத்துகிறான். நீர் பீலி மூலமாகக் கொட்டிக் கொண்டிருக்கிறது. வாலை ஆட்டி ஆட்டி மாடுகள் நீரைக் குடிக்கின்றன.

தன்னைக் கேற் வரை வந்து சின்னமணி வழி அனுப்பாததற்கான காரணத்தைத் தில்லையம்பலம் உணர்ந்து கொள்கிறான்.

சுற்றுமதிலில் குண்டுகள் துளைத்தது போன்ற குழிகள்! வயிறு குளிர்ந்த மாடுகள் தங்கள் கொம்புகளால் சுற்று மதிலை முட்டிப் பார்த்திருக்கின்றனவென்ற உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைத் தில்லையம்பலம் இரசிக்கிறான். அது மட்டுமா! சுற்று மதிலில் அங்குமிங்கும் சாணி பூசப்பட்டிருந்தது. மாடுகளின் இத் திருவிளையாடல்களைக் கண்டும் சின்ன மணி இன்னமும் தொட்டிக்குள் நீர் நிறைக் கிறான்! தில்லையம்பலத்திற்கு வியப்பாக இருக்கின்றது. நண்பனின் இதயம் ஆழ்ந்த சாகரம்!

இந்தத் தொட்டியை எப்ப சின்னமணி கட்டினவன்! ஒரு வார்த்தைகூட எனக்குச் சொல்லவில்லையே மனம் திறந்து பேசும் நண்பன் இப்படியான நல்ல காரியத்தைத் தான் செய்தது குறித்து ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே என்ற ஆதங்கம் தில்லையம்பலத்தின் நெஞ்சை அடைக் கிறது.

புகழை விரும்பாதவன்... நசுக்கிடா மல் இரகசிய நடவடிக்கை எடுத்ததன் காரணம் இதுவேயெனத் தில்லையம்பலம் தன்னைச் சுதாகரித்துக் கொள்ளுகிறான்.

உருண்டு கொண்டிருந்த சைக்கிள் ஜே.பியின் கேற்றை அடைந்து விட்டது.

சுற்று மதிலில பொருத்தப்பட்டிருந்த பிளாஸ்ரிக் எழுத்துக்கள் வீட்டுச் சொந்தக் காரர் என். வடிவேலு, ஜே.பி. எனக் கட்டியங் கூறுகின்றன. தில்லையம்பலம் சைக்கிள் மணியை ஒலிக்கிறான். நாயொன்று தானும் அங்கிருப்பதைக் குரைத்து அம்பலப் படுத்துகிறது.

ஆரது... நாய் போடும் சத்தத்தை உதைத்துக் கொண்டு பெண்ணொருத்தி யின் குரல் தில்லையம்பலத்தின் செவி களுள் புகுகின்றது. தன்னை அறிமுகப் படுத்த வேண்டிய அவசியமில்லை. அவன் மௌனித்துக் கொள்கிறான். ஜே.பியின் மனைவி அம்மன் சிலைபோல் அவனை நோக்கி வந்து கொண்டிருக்கிறாள்.

ஜே.பி.இருக்கிறாரோ?

"ஓம் வாருங்க" மனக் கிலேசம் எதுவு மின்றி ஜே.பி.யின் மனைவி கேற்றைத் திறக்கிறாள்.

சனம் அவரைச் சும்மாவா இருக்க விடுகுது. அடிக்கொரு தரம் சத்தியக் கடுதாசி யெண்டு வருகுதுகள மொலு, மொலுவென அவள் சினந்து சொல்லிக் கொண்டிருந்தாள்.

இப்பத்தானே அந்த நிவாரணம், இந்த நிவாரணமெண்டு அறிவிச்சுக் கொண்டிருக்கினம். சனத்துக்கு எல்லா நிவாரணத்தையும் எடுக்க வேண்டுமென்ற நோக்கம். அதுதான் ஜேபியிட்ட சத்தியக் கடுதாசிக்கு கியூவில் நிக்குதுகள்.

ஜே.பி.யின் மனைவி குசினிப் பக்கம் போகிறாள். கூச்சமற்றவனாகத் தில்லையம் பலம் முன் முற்றத்திற்குச் சைக்கிளை உருட்டுகிறான். கமுக மரமொன்றின் கீழ் சைக்கிளைச் சரித்து வைக்கிறான்.

தில்லையம்பலமோ வாரும் வாரும் விறாந்தையில் நின்று கொண்டு ஜே.பி வரவேற்கிறார்.

வரவேற்புக்குக் கண்டதுக்கு இண் டைக்குத்தான் இஞ்சால... சலித்தபடி ஜே.பி கூறுகிறார்.

குசன் செற்றியில் இருவரும் சமனாக அமருகின்றனர். மின்னல் வேகத்தில், எதிர்பாராது, ஜேபி எழுந்து எதிரில் இருந்த செற்றியில் குந்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முகத்தைப் பார்த்துக் கதைக்க வேணும்" தனது செய்கைக்கான விளக்கத்தை ஜே.பி.ஒப்புவிக்கிறார்.

இந்த வெய்யிலுக்க எங்க தான் ஜே.பி. போறது...

"இப்ப என்னவும் மழையிக்காலயா வந்திருக்கிறீர் நகைச்சுவையாகப் பேசி விட்டதைப் போல் ஜேபி அட்டகாசமாகச் சிரிக்கிறார்.

தள்ளிப் போட ஏலாத காரியம் ஜே.பி. அதுதான் வெய்யிலைப் பாராம வந்தனான்... ஜே.பியின் முடுக்கிவிட வேண்டுமென்ற தந்திரத்தோடு தில்லையம்பலம் தனது பயணத்தின் நோக்கத்தைத் தொடர்ந்தான்.

அப்படி என்னப்பா விஷயம் ஜே பிக்கு ஆறப் பொறுக்க முடியாத ஏக்கம்! வந்தவன் என்னத்தைச் சொல்லப் போகிறானென்ற மனத் தவிப்பு.

தில்லையம்பலத்தின் கசெற் ஓடிக் கொண்டிருந்தது. மக்களுக்குத் தொண்டு செய்ய இதை விட அரிய சந்தர்ப்பம் கிடைக்காதென ஜே.பி தனக்குள் எண்ணிக் கொண்டார்.

உது கட்டாயம் செய்ய வேண்டிய அலுவல் தான். மாடுகளுக்கு நோயெண்டு இறைச்சி விக்கவும் தடை போட்டிருக்கு. இன்னும் கொஞ்ச நாளையில நாயளுக்கும் விசர் புடிச்சு ஆக்களுக்குக் கடிச்சு, ஆக்களுக்கும் விசர் வரப் போகுது அது சரி நிவாரணக் குழுவில மற்ற ஆக்கள் ஆர்.

ஜே.பியின் கண்கள் தில்லையம்பலத்தில் மொய்த்தன.

நீங்களொண்டு, நானொண்டு சின்ன மணியையும் போட்டிருக்கிறன். அவர் எங்களோட போம் குடுக்க வந்தவர்.

சடாரென ஜேபி முகத்தைக் கவிழ்த்துக் கொண்டார்.

என்னோட ஜேபிக்குப் போட்டி போட வெளிக்கிட்டவர் இரு கைகளையும் முழங்கால்களுக்குள் இடுக்கிக் கொண்டு ஜே.பி சொன்னார். அவரது முக முத்திரைகளை அவதானிக்கத் தில்லையம்பலம் துடித்தான். அவன் கண்கள் துருதுருத்தன!

அதெல்லாம் போன கதை. விட்டுப் போடுங்க. இப்ப எவ்வளவு காலமாப் போச்சு ஜேபியைச் சாந்தப்படுத்தத் தில்லையம்பலம் முனைந்தான். தன் முழுத் திறமையையும் பாவித்து ஜேபியின் வைராக்கியத்தை ஒட்டுமொத்தமாகப் போக்க வேண்டுமென்ற முனைப்போடு தில்லையம்பலம் இயங்கினான்.

உரையாடல் தொடராமல் காலம் கரைந்தது.

"சின்னமணியைப் பற்றி யோசிக்காதாயுங்க. குழுவுக்கு நீங்கதான் தலைவர். எது எப்படி இருந்தாலும் நாங்கள் சனத்துக்குச் செய்யிறதைச் செய்யத்தான் வேணும்."

செருமிக் கொண்டு ஜேபி குனிந்த தலையை நிமிர்த்தினார். தில்லையம்பலத்திற்குப் பழத்தைப் பறித்துவிட்ட மகிழ்ச்சி எழுந்தது. இருவரும் வெளியே வந்தனர். சைக்கிளை எடுத்துக்கொண்டு ஜே.பி சகிதம் தில்லையம்பலம் கேற்றை நோக்கி நடக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் வாசிகசாலையில தான் சந்திக்க வேணும். எப்ப வெண்டு சொல்லி யனுப்புறன்."

புறப்பட ஆயத்தமாகத் தில்லையம் பலம் தெருவோரத்தில் நின்றான். தொட்டி யில் நீர் குடித்துக் கொண்டு நின்ற மாடுகள் வால்களை உயரத் தூக்கி ஆட்டிக்கொண்டு நகர ஆரம்பிக்கின்றன. நடந்து கொண்டே அவைகள் தெருவில் சாணத்தைக் கழித்துச் செல்கின்றன.

"கண்டீரே... உந்தப் பேயன் சின்ன மணி ஒரு தொட்டியைக் கட்டிவிட்டு, தண் ணியைக் குடிச்சுக் குடிச்சு மாடுகளுக்கெல் லாம் பீச்சல் விசாதி புடிச்சிட்டுது

தொட்டியை எரிப்பதுபோல் பார்த்துக் கொண்டு ஜே.பி. ஏளனமாகக் கூறுகிறார். அந்தப் பேச்சைப் பொருட்படுத்தாதவன் போல் தில்லையம்பலம் சைக்கிள் பெடலில் பாதத்தை வைத்தான்.

"உந்தத் தொட்டியை உடைக்கச் சொல்லி எல்லாருமாகச் சேர்ந்து கொமிசன ருக்கு பெட்டிசம் எழுதினா என்ன? மிகவும் நெருங்கி வந்து ஜேபி சொன்னது தில்லை யம்பலத்தின் நெஞ்சில் சுட்டது.

சற்று முன் வரட்சியைக் குறித்து ஜே.பி சொன்னவைகளை தில்லையம்பலம் மீட்டுப் பார்க்கிறான். இந்தத் தொட்டியை உடைத்தால், இந்த மிருக சாதிகளின் வயிற் றில் வரட்சி குடிகொள்ளுமே... இந்த உண ர்வு ஜே. பிக்குப் பிறக்கவில்லையே... சின்ன மணி போட்டிக்கு வந்ததிற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? எறிக்கும் வெயிலில் தில்லையம்பலம் நிற்பதா போவதாவெனத் திணறிக் கொண்டு நின்றான். ஜே.பி யின் உள்ளத்து வரட்சிக்கு எங்குதான் நிவார ணம் தேடுவது. பெடலை ஊன்றி மிதித்துச் சைக்கிளில் ஏறிக்கொள்கிறான். சைக்கிள் ஜே.பி க்கு அப்பால் நகர்ந்து விட்டதென்ற குளிர்ச்சி அவன் மேனியில் சில்லிட்டது.

வடிவேலு ஜே.பி போன்றோரின் தல மையின் கீழ் சின்னமணி போன்றோரைப் பணியாற்ற வைப்பது தகுமா?

நியாயத் தீர்வொன்றின் தேடலில் அவன் மனம் இலயித்துக் கொண்டது. நியாயம் பெரிய மனிதர் சிலருக்கு மட்டும் சொந்தமானதல்ல நியாயத்தின் பொதுமை அவன் நெஞ்சில் நங்கூரம் பதித்தது. அவன் திசை மாறும் பறவையல்ல....




வள்ளலார் என்ற இராமலிங்க அடிகளார் ஓர் சிறந்த தத்துவ ஞானி. சாதி சமய வேறுபாட்டுக்கு எதிரான தமது நிலைப்பாடு காரணமாக ஆன்மீகவாதிகளாலே விமர்சனத்திற்கு உள்ளானவர். "அறியாமை என்னும் மாயத்திரைகள் நம்மை விட்டு விலகினால் அருட்பெருஞ்சோதியான ஆண்டவரை நாம் தரிசிக்கலாம்" என்பது வள்ளலாரின் வாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவக மக்களின் வாழ்வாதாரப் பயிர்ச்செய்கை

**க.சகாதேவன்**
**ஓய்வுநிலை கிராம அலுவலர்,**
**நாரந்தனை.**

வரலாற்றுப் புகழ் பெற்ற ஊர்காவற்றுறை சப்த தீவுகளின் தலைநகராக ஐரோப்பியர் காலத்தில் விளங்கியது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை கைப்பற்றி தமது வியாபார நடவடிக்கைகளுக்காக கப்பல் கட்டுவதற்கு பயன்படுத்திய ஒரு இயற்கைத்துறை முகமாக விளங்கிய பெருமைமிக்க பிரதேசம் ஊர்காவற்றுறை ஆகும். அக் காலத்தில் ஊராத்தோட்ட எனும் பெயரால் அழைக்கப்பட்டது. காலப்போக்கில் அது மருவி இயற்கைத் துறைமுகமாகவும் இருந்தமையால் ஊர்காவற்றுறை என பெயர் பெற்றது. சப்த தீவுகள் அனைத்தும் ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் செயற்பட்டது. உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊர்காவற்று றைப் பிரதேசத்தில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட பிரதேசம் தீவு என்று அழைக்கப்படு கிறது. அந்தவகையில் ஊர்காவற்றுறைப் பிரதேசமும் கடலால் சூழப்பட்டிருப் பதனால் தீவு என அழைப்பர். காலப்போக்கில் அது தீவகம் என மாற்றம் பெற்றுள்ளது. தீவகமானது, தீவகம் வடக்கு, தீவகம் தெற்கு என இரு பிரதேசங் களாகப் பிரிக்கப்பட்டு மக்களுக்கான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது. தீவகம் தெற்கு வேலணை பிரதேசமாகவும், தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேசமாகவும் பிரிக்கப்பட்டு மக்கள் சேவை இடம்பெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் கீழ் பதினைந்து(15) கிராம சேவகர் பிரிவுகள் இயங்கி வருகின்றன. அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந்தனை, புளியங்கூடல், சுருவில் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியுள்ளது. இப்பிரதேசங்களில் வாழும் மக்களில் அதிகமானோர் தமது வாழ்வாதார தொழிலாக விவசாயத்தை மேற்கொள்பவர்களாகவே காணப்படுகின்றனர். 1960ஆம் ஆண்டு காலப்பகுதியில் தீவகத்தின் எல்லாக் கிராமங்களிலும் மக்கள் செறிவாகக் காணப்பட்டனர். தங்கள் குடியிருப்புக்களை அண்டிய வயல்நிலங்களில் நெற்செய்கையை மேற்கொள்வார்கள். தோட்ட நிலங்களில் பிரதான பயிராக புகையிலையும், மிளகாயும், வெங்காயமும் பயிரிடுவார்கள். தமது தேவைகளுக்காக சிறிய அளவில் மரக்கறிப்பயிர்களும் செய்கை பண்ணப்பட்டது. இப்பயிர்கள் யாவும் வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றினால் பெய்யும் மழையை நம்பியே பயிரிடப்படுகின்றது. வானம் பார்த்த பூமியாகவே காணப்பட்டாலும் மாரிமழை கிடைக்கும் காலப்பகுதியில் ஒருபோகம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய காலநிலை உள்ள பிரதேசமாக அமைந்துள்ளது. கால்நடை வளர்ப்பிலும் அக்கால மக்கள் ஆர்வமுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். கால்நடைகளை விவசாய நடவடிக்கைகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில் மேய்ச்சற்தரைகளில் கட்டி வளர்த்து வந்தார்கள். இதனால் தமக்குத் தேவையான பால், முட்டை, இறைச்சி போன்றவற்றை பெற்றுக்கொள்ள முடிந்தது. தமது வயல் நிலங்களை உழுவதற்கு எருதுகளை கலப்பையில் பூட்டி வயலை உழுது பண்படுத்தி நெல் விதைப்பார்கள். அயலவர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கூட்டாக நெல் அறுவடை செய்தல், பயிர்களை நாட்டுதல், சந்தைக்கு கொண்டு செல்லல் போன்ற வேலைகளில் ஈடுபடுவதனை அவதானிக்க முடிந்தது. விவசாய நடவடிக்கைகளுக்கு இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தினார்கள். அதாவது கால்நடைகள் வளர்ப்பினால் பெறப்பட்ட ஆட்டெரு, மாட்டெரு, தாவரங்களின் இலைகுழைகள், வீடு வேய்வதற்குப் பயன்படுத்திய பனை ஓலைகள் என்பவற்றைப் பதப்படுத்தி கூட்டெரு தயாரித்து இயற்கைப் பசளையாகப் பயன்படுத்தினார்கள். இதனால் நஞ்சு கலப்பில்லாத உணவுப்பொருட்களைப் பெறக்கூடியதாகக் காணப்பட்டது. தாம் உற்பத்தி செய்த உணவுப் பொருட்களை அயலவர்களுக்கும் கொடுத்து தாமும் பயன்படுத்துவதுடன் மேலதிகமானவற்றை சந்தைப்படுத்துவார்கள். வெங்காயம், மிளகாய், புகையிலை என்பவற்றை வாங்குவதற்காக வியாபாரிகள் கிராமங்களுக்கு வருகைதந்து குறித்த விலை கொடுத்து பெற்றுச்செல்வார்கள். வெங்காயம், செத்தல் மிளகாய், நெல் என்பனவற்றை கூட்டுறவுச் சங்கமும் சந்தை விலைக்கு கொள்வனவு செய்து மக்களின் விவசாய நடவடிக்கைக்கு ஊக்கமளித்தது.

நெல் அறுவடைக் காலங்களில் அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் என எல்லோரும் ஒன்றுகூடி அறுவடை செய்து எருது பூட்டி சூடு மிதிப்பார்கள். நெல்லைத் தூற்றி சாக்குகளில் மூடைகளாகக் கட்டி மாட்டுவண்டியில் வீடுகளுக்கு ஏற்றிச் சென்று அரண் அமைத்து அடுக்கி வைப்பார்கள். தைப்பொங்கல், மாட்டுப் பொங்கல், தைப்பூசம் என்பன வீடுகள் தோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகச்சிறப்பாகக் கொண்டாடுவதுடன் அன்றைய கலாசாரமும் பேணப்பட்டு வந்தது.

ஆடிமாதத்தில் ஆடிக்கூழ் காய்ச்சுவதும் ஆடிக்கொழுக்கட்டை அவிப்பதும் பனங்கிழங்கு காலத்தில் பனங்கூழ் காய்ச்சி குடிப்பதும் அப்போதைய மக்களின் பண்பாடாகக் காணப்பட்டது. மழை வராது போனால் பறை அடித்து கொடும்பாவி கட்டி வீதி தோறும் இழுத்துச் சென்று எரிப்பதும் அக்காலத்தில் காணப்பட்டது. மக்களுக்கான பொதுஅறிவித்தல்கள் பறை அடித்து தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு அக்கால மக்கள் தமது கிராம கலாசாரத்தையும் பண்பாடுகளையும் வளர்ப்பதிலும், தன்னிறைவுப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் ஆர்வம் காட்டினர்.

காலப்போக்கில் விஞ்ஞான வளர்ச்சியும் மக்களின் வாழ்வாதாரத் தேவைகளும் அதிகரிக்க விவசாய நடவடிக்கைகளில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. வயல் நிலங்கள் தோட்ட நிலங்களாக மாற்றமடைந்தன. நிலத்தை உழுது பண்படுத்தல், சூடு மிதித்தல், அறுவடை செய்தல், கிருமிநாசினி தெளித்தல், நீர் இறைத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு பாரிய உழவு இயந்திரங்கள், அறுவடை செய்யும் இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் கிருமிநாசினி தெளிக்கும் இயந்திரங்கள் என்பன பயன்படுத்தப்பட்டு விவசாய நடவடிக்கைகள் இடம்பெற்றன. இயற்கைப் பசளைகளுக்குப் பதிலாக செயற்கைப் பசளைகள் பயன்படுத்தப்பட்டன. இதன் காரணமாக தாழ்நில பயிர்களான நெல் பயறு, உழுந்து, எள்ளு என்பனவற்றில் மக்களின் ஆர்வம் குறைவடைந்தது. பணப் பயிரான புகையிலைச் செய்கையில் மக்கள் அதிக ஆர்வம் காட்டினர். தீவக மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பணப் பயிராக புகையிலை விளங்கியது.

1970 களில் அரசு மிளகாய் செய்கையை ஊக்குவிப்பதற்காக மிளகாய் இறக்குமதியை கட்டுப்படுத்தி உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளிக்குமுகமாக கமநல சேவைத் திணைக்களங்கள் ஊடாக மக்களுக்கு கடன் உதவி, மானியமுறையில் உரங்களை வழங்குதல், நல்லின விதைகளை வழங்கல் போன்ற உதவிகளை வழங்கியது. இதனால் அதிகமான மக்கள் மிளகாய் உற்பத்தியில் ஈடுபட்டமையினால் அதிக வருமானத்தை பெற்றனர். பொருளாதார ரீதியாக மக்கள் முன்னேற்றம் கண்டனர். மண் குடிசைகளில் வாழ்ந்த மக்கள் கல்வீடுகள் அமைத்து தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொண்டனர்.

1985, 1986 ஆம் ஆண்டு காலப் பகுதியில் போர்ச்சூழல் காரணமாக தீவக மக்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு பிள்ளைகளை அனுப்புவதிலும் பாதுகாப்பான இடங்களை நாடிச் செல்வதிலும் அக்கறை செலுத்தினர். இதன் காரணமாக தீவக வடக்கு மக்கள் செறிவு குறைவடைய ஆரம்பித்தது. விவசாய நடவடிக்கைகளில் குறைந்தளவான மக்களே ஈடுபட்டனர். நெற்செய்கையிலும், புகையிலைச் செய்கையிலும் மிளகாய் செய்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. 1990ஆம் ஆண்டு தீவகம் வடக்கில் வாழ்ந்த மக்கள் 99% ஆனோர் இடம்பெயர்ந்து வன்னிப் பிரதேசங்களிலும், யாழ்ப்பாணத்திலும் குடியேறினர். தீவக விவசாய நிலங்களும் நெல் வயல்களும் புல் பூண்டுகளால் மூடப்பட்டு பற்றைக்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக மாற்றம் அடைந்தது. குடியிருப்புக்கள் யாவும் பாழடைந்து மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டது. குடியிருப்பாளர்களின் கால்நடைகள் பராமரிப்பாரின்றி கட்டாக்காலி விலங்குகளாக மாறின.

1996, 1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் போர்ச்சூழல் ஓரளவு சுமூகநிலைக்கு வர தீவக மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்தனர். மீண்டும் தமது வாழ்வாதார தொழிலான விவசாயத்தைத் தொடர ஆரம்பித்தனர். இதற்கு தீவகம் வடக்கு பிரதேச செயலகமும், கமநல சேவைத்திணைக்களமும் புலம்பெயர் மக்களின் ஆதரவும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள மக்களுக்கு உறுதுணையாக அமைந்தது. மக்கள் பொருளாதார ரீதியாக பின்தங்கியிருந்தமையால் தீவகத்தின் பணப்பயிரான புகையிலையை நாட்டுவதிலே அதிக நாட்டம் காட்டினர். நெல்வயல்கள் கவனிப்பாரற்று தரிசு நிலங்களாக கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. புகையிலையின் விலை சந்தையில் அதிகரித்தமையால் மக்கள் இழந்த பொருளாதாரத்தை ஓரளவு சீர்செய்யக்கூடியதாக இருந்தது. தீவக மக்களின் நெல் பயிரிடப்படாத வயல் நிலங்களை கமநலசேவைத் திணைக்களம் அவற்றைத் திருத்தி நெற்செய்கையை மேற்கொள்வதற்கு வேலி அடைப்பதற்கான முட்கம்பி கள், கம்பிக்கட்டைகள் வழங்கி உதவியது. பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் விவசாய சம்மேளனங்கள் உருவாக்கப்பட்டு அதனூடாக விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

1997ஆம் ஆண்டின் பின்னர் மக்கள் மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை என்று தான் கூற வேண்டும். பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக நகரப்புறங்களுக்கு மீண்டும் இடம்பெயர்ந்து செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது. வாழ்வாதார தொழில் விவசாயம் என்பதனால் விவசாயம் செய்யும் காலத்தில் தீவகத்திற்கு வருகைதந்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும் இருக்கிறார்கள். இதன் காரணமாக மக்களின் வாழ்வாதாரப் பயிர்ச் செய்கை குறைவடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். 2009ஆம் ஆண்டின் பின்னர் புகையிலை, மிளகாய் சந்தையில் நுகர்வோர் எண்ணிக்கை அதிகரிக்க விவசாயிகள் புகையிலை, மிளகாய் உற்பத்தியில் அதிகளவு ஆர்வம் செலுத்தியமையால் அதிக வருமானத்தைப் பெறக்கூடியதாக இருந்தது. மரக்கறிப்பயிர் களாக கத்தரி, வெண்டி, தக்காளி, கறி மிளகாய், பூசணி, பயற்றை, புடோல் போன்றவற்றைப் பயிரிடுவார்கள். தீவகத்தில் மக்கள் செறிவு குறைவாக இருப்பதனால் நுகர்வோர் மிகக் குறைவு. இதனால் மரக்கறிகளின் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. விவசாயிகள் நட்டத்தை எதிர்கொள்வதனால் மரக்கறிப் பயிர்களில் நாட்டம் குறைவடைந்துள்ளது. வெங்காயச் செய்கையை விவசாயிகள் முற்றுமுழுதாக கைவிட்டு விட்டார்கள். காரணம் வெங்காயத்தில் ஏற்பட்ட நோய்த்தாக்கம், களைகளின் உற்பத்திப் பெருக்கம், பனிப்புழுக் களின் தாக்கம் என்பன அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தி வெங்காயப்பயிரை முழுமையாக அழித்தமையால் விவசாயிகள் நட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்துள்ளனர். தற்போது விவசாய நடவடிக்கையை ஊக்குவிப்பதற்கான பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அரசின் நிதி உதவியுடன் நீர் இறைக்கும் நவீன இயந்திரம், செயற்கை உரம், நல்லினவிதைகள், நீர்க்குழாய்கள், கிருமி நாசினி தெளிக்கும் கருவி போன்றவற்றை இலவசமாக வழங்கி ஊக்கமளிக்கப்படுகிறது. மழைநீரை நம்பி விவசாயம் செய்யப்படுவதனால் குளங்கள் புனரமைப்புச் செய்யப்படுகின்றது. தண்ணீர்த்தொட்டிகள் மழைநீரைத் தேக்கி வைப்பதற்காக ஒவ்வொரு குடும்பங்களுக்கும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. வங்கிகள் விவசாயக் கடன் வழங்கி உதவுகிறது. இவ்வாறு பல்வேறு ஊக்குவிப்புக்கள் அரசினால் மேற்கொள்ளப்படுகின்றமை பாராட்டுதற்குரியது.

2016, 2017 ஆம் ஆண்டுகளில் அரசு புகையிலை போதையை ஏற்படுத்துகின்ற பயிர் என்பதனால் புகையிலை உற்பத்தியைத் தடை செய்ய வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்துள்ளமையால் புகையிலை உற்பத்தியாளர்களின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது. அதற்கு மாற்றுப்பயிராக கற்றாளை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எதுவாக இருந்தாலும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கக் கூடிய மாற்றுப்பயிரை அறிமுகம் செய்வதோடு சந்தை வாய்ப்பையும் பெற்றுக் கொடுக்கக்கூடிய பயிரை அறிமுகம் செய்வதே பொருத்தமானது. இது யாவர்க்கும் சமர்ப்பணம்.



**தலை குனிந்து என்னை பார்**
**தலை நிமிர்ந்து உன்னை**
**நடக்க வைக்கிறேன்...!**
**- புத்தகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தண்ணீரும் கண்ணீரும்

**K.V. நவநீதன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
(பட்டதாரி பயிலுநர்)

ஐம் பூதமே
உன்னைப் பூதமென்றவன் யார்....?
நீ
ஐம் புலன்களின் வேதம்...,!

ஐம் பூதத்தில்
மூத்தவனிற்கு அடுத்தவனே
நீயின்றி
நாவறண்டு விட்டதடா...,!

தண்ணீரே!
தாகத்திற்கு அள்ளியவனிடம்
தீட்டுப் பார்த்ததால்
தட்டுப்பாடாய் போனாயோ....?
இல்லையேல்
கட்டுப்பாடற்ற பாவனையால்
காணாமல் போனாயோ...?

தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதீர்
இது முதியோர் வாக்கு
உன்னைப் பழித்ததால்
எம்மைப் பழிவாங்குகின்றாயோ?...?



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வற்றிய குளங்களில் கூட
உன்னைத் தேடி
வலம் வருகின்றன
கால் நடைகள்....,!

கால்கடுக்க காத்திருந்தும்
கால்வயிற்றைக் கூட
நிரப்பவில்லை
நிரம்பிய தண்ணீர்.....!

கடவுளே!
இறங்கி வா
தண்ணீரிற்கான - எம்
கண்ணீரைப் பார்....,!
தண்ணீரே - எம்
செந்நீர் காண் ...,!

தண்ணீர்ப் பஞ்சத்தால்!
பாலுக்கு அழும் குழந்தைகளைவிட
தண்ணீரிற்கு அழும் குழந்தைகளே
அதிகம் காண்....!

சிறுநீரகங்கள் மரித்து
சிறுநீர் நிறம் மாறி
கண்ணீர் சிந்த
தண்ணீர் இயமனானது காண்...,!

அட மானிடரே!
நிலத்தை துளையிட்டு
தண்ணீரை மலமாக்காதீர்
காலம் கடந்தால்
ஞாலத்தில் தண்ணீர் கூட
கானல் நீராகலாம்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைகளில்
# வழிகாட்டல் ஆலோசனையின் முக்கியத்துவம்

**திருமதி. மலர்விழி கனகசபை**
**உதவிக்கல்விப் பணிப்பாளர், அழகியல்,**
**தீவக வலயம்.**

ஒரு மனிதனின் வாழ்க்கையில் கல்வி கற்கும் பாடசாலை வாழ்க்கையில் இன்றியமையாததாகும். பாடசாலைகள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் மட்டுமல்லாது கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் உடல் நலம், உளநலம், பூரண ஆளுமை விருத்தி, சமூகத் தொடர்புகள், தொழில் வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்தல். பாடசாலை வளங்களை முழுமையாகப் பயன்படுத்தல் என்பவற்றில் நாம் அதிகமாக கவனம் செலுத்துவது அத்தியாவசியமான ஒன்றாகும். கல்வி ஒருவனை நல்ல மனிதப் பண்புடையவனாக்குவதுடன் நற்குடிமகனாகவும் ஆக்கி அவன் மூலம் சமூகத்தை மிக உன்னதமான நிலைக்கு கொண்டு செல்லும் வழிகாட்டல். ஆலோசனை ஆறு முக்கிய நோக்கங்களைக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கல்விசார் வழிகாட்டல்.
2. தொழில்சார் வழிகாட்டல்.
3. தனியாள் வழிகாட்டல்.
4. சமூக வழிகாட்டல்
5. பாடப்புறச் செயல்சார் வழிகாட்டல்
6. உடல், உள நலம்சார் வழிகாட்டல்.

இதனூடாக மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்காணித்து விசேட தேவையுடைய, கற்றல் குறைபாடுடைய, மீத்திறனுடைய, ஆக்கத்திறனுடைய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குப் பொருத்தமான முறையில் கற்றலை ஊக்குவிக்கும் போது அவர்கள் உயர் கல்வியைத் தொடரவும், வாழ்க்கைக்கு அடிப்படையான தொழிற்கல்வியைப் பெறவும் வாய்ப்புக்கள் அதிகமாகும். தனியாள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மன எழுச்சியைக் கற்றலில் செலுத்தி வழிகாட்டுவதன் மூலம் அவனை சமூக இசைவாக்கம் பெற ஊக்குவிக்கலாம். சமூக விழுமியங்கள், நியமங்களுக்கேற்ப முரண்பாடுகளைத் தவிர்த்து குழுச்செயற்பாடு, தலைமைத்துவத்தில் ஒன்றிணைதல், ஒத்துப்போதல் என்பவற்றை வளர்க்க முற்பட வேண்டும். பாடசாலைக் கல்வி நேரத்தைத் தவிர்த்து ஓய்வுநேரத்தை பயனுள்ள வகையில் கழிப்பதற்கு வகுப்பறைக்குப் புறம்பான நூல் நிலையம், விளையாட்டு மைதானம், கலை நிகழ்வுகளில் மனதை ஒரு நிலைப்படுத்துவதற்கு ஊக்குவிக்கலாம்.

எல்லாச் சமயங்களும் மனிதனை நல்வழிப்படுத்தும் அறநெறிக்கும், ஆன்மீகத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றன. இலங்கையிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் சமயம் ஒரு கட்டாய பாடமாக அமைந்திருப்பது அறநெறி வழிகாட்டலுக்கு ஓர் கலங்கரை விளக்காக உள்ளது. இன்று மனிதர்கள் தங்கள் மனிதத்துவத்தை தொலைத்துவிட்டு நிற்கின்றார்கள். எது மனிதத்துவம்? எது அநீதியானது எனப் பிரித்தறிய முடியாது உறவுகள் எல்லாம் வியாபார நோக்கமாக மாறி நவீன தொழிநுட்ப விஞ்ஞான உலகிற்கு இட்டுச் சென்று விட்டது. மேலும் வயதில் முதிர்ந்தவர்கள் இளையவர்களுக்கு வழிவிட்டு அவர்களை வழிப்படுத்த வழி தவறி விடுகின்றார்கள். இளையவர்களும் நவீனத்துவ மோகத்தையே கூடுதலாகக் கொண்டு செயற்படுகின்றார்கள்.

இளையவர்கள் மூத்தோரின் கருத்துக்களைச் செவிமடுக்காது இணையத்தளங்களின் வழிகாட்டலிலும், முகநூல்களின் வழிகாட்டலிலும், சமூக வலைத்தளங்களின் வழிகாட்டலிலும் தமது செயல்களைச் செய்கின்றார்கள். இதன் விளைவு மனிதத் தனிமை. இதனால் மாணவர்கள் தம் தனிமையைப் போக்க Nlue Whale விளையாட்டுப் போன்ற உயிராபத்தான விளையாட்டுக்களை நாடி உயிரையே மாய்த்துக் கொள்கின்றனர். மாணவர்களின் இப்போக்கினை மாற்றி ஆசிரியர்கள் மாணவரின் விருப்பு, வெறுப்புக்களை அறிந்து அவர்களை நல்வழிப்படுத்துவதற்கு இவ்வழிகாட்டல் ஆலோசனை முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு மாணவன் தன் இலக்கை அடைய முடியாததனால் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றான். எனவே மாணவனின் பிரச்சினையின் அடிப்படையை ஆராய்ந்து அவர்களின் இலக்குகளை ஆராய்ந்து அவர்களது இலக்கிற்கு பங்கம் விளைவிக்காத வகையில் அவர்களுக்கு ஊக்குவிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனை கூறவேண்டும். இதற்கு அத் துறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் சாலப் பொருத்தமுடையவர்கள். ஆரம்ப இடை நிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை ஒரே நோக்கமுடையதாக இருப்பினும் மாணவர்களின் முதிர்ச்சி, தேவை, நோக்கங்களுக்கேற்ப வேறுபாடு டையதாக இருக்கும். இம் மாணவர்களின் பருவ வேறுபாடுகளுக்கேற்ப மனமுதிர்ச்சி நிலைக்கேற்ப வழிகாட்டப்படும் ஆலோ சனை வேறுபாடுடையதாக இருக்கும்.

ஆரம்ப பாடசாலை மாணவர்கள் முன்பள்ளிப் பருவத்தைச் சேர்ந்தவர்கள். தரம் 1 தொடக்கம் ஐந்து வரையான மாண வர்கள் சுயாதீனமாக தீர்மானங்களை எடுக்கும் ஆற்றலையும், தாமாகவே ஆலோ சனைகளைத் தேடிச் செல்லும் ஆற்றலை யும் கொண்டிருக்க மாட்டார்கள். தமக்குள்ள உள்ளத் தேவைகளுக்கு முதியவர்கள், வீட்டுப் பெரியவர்கள் அறிவுரையைக் கேட் பதற்கு ஆயத்தமாவார்கள். பெரியவர்களின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பார்கள்.

இவர்களது உடலியற் தேவையாக சுத்தமான காற்று, போசாக்குள்ள நிறை யுணவு, நீர், போதியளவு விளையாட்டு, ஓய்வு, மருத்துவக் கவனிப்பு, பாதுகாப்பான இருப்பிடம் என்பன தாக்கம் செலுத்துவன வாகும். இவர்களது உளவியற் தேவைக ளாக நெருங்கிய குடும்ப உறவுகள் அரவ ணைப்பான அன்பான தாய், பாதுகாப்பான உணர்வை ஏற்படுத்தக்கூடிய நிலைமாறா உறவுகள் அண்ணன், தம்பி, அக்கா, தங்கை இவர்களது அடுத்த தேவை அறிக்கை உணர்வு.

ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் பல வகையான பொருட்களைத் தொட்டு உணர்ந்து, முகர்ந்து பார்த்து, ஒலிகளைக் கேட்டு, ஐம்புலன்களாலும் அவற்றை அனு பவித்துக் கொண்டு இன்பம் காண்பார்கள். இவ் அனுபவத்தை இவர்கள் விளையாட்டு மூலம் இயல்பாகவே பெறுவதால் அவர்க ளின் விளையாட்டு உணர்வைத் தடை செய்யக்கூடாது.

இப்பருவத்தினர் தாமாகவே ஒரு ஆலோசகரை அணுகமாட்டார்கள். இவர் களுக்குப் பாடசாலை செல்ல விருப்பம் இருக்க மாட்டாது. வீட்டுச்சூழல், தாய் அல் லது தகப்பன் அருகிலிருக்க வேண்டும் என விரும்புவார்கள். அப்படி இல்லையெனில் பாடசாலை செல்லும் நாட்களில் உணவில் விருப்பமின்மை, அடிக்கடி சுகயீனம் ஏற்படு தல், வகுப்பில் எப்போதும் சோர்ந்து காணப் படுதல், தனிமையை நாடுதல், வகுப்பு ஒழு ங்கு முறைகளைப் பேண, மறுத்தல். ஏனைய மாணவர்களைத் துன்புறுத்தல், வகுப்பிற்குள்ளே மலம் கழித்தல் போன்ற பிரச்சினைகளை நாம் காணக்கூடியதாக இருக்கும். இவற்றைக்கண்ட ஆசிரியர்கள் அவர்களோடு உரையாடி அவர்கள் பாடசா லைக்கு விருப்புடன் வரவழைக்க வேண் டும். பிள்ளைகளுக்கு ஏற்படும் உணர்வு நெருக்கடிகள், உளவடுக்கள் ஆகியவற்றின் பிரதிபலிப்பை அவர்களது விளையாட்டுக் கள் அவர்கள் வரையும் சித்திரங்கள், அவர் கள் கூறும் கற்பனைக் கதைகள் போன்ற வற்றை உளவியலாளர்கள், ஆசிரியர்கள், அவதானிப்பவரால் அறியலாம். அடுத்து இடைநிலைப் பாடசாலை, மாணவர்கள் பின் பிள்ளைப் பருவத்தினரையும் கட்டிள மைப் பருவத்தினரையும் சார்ந்த இவர்கள்

1) கனிஷ்ட இடைநிலை 6- 8 வகுப்பு வரை

2) சிரேஸ்ட இடை நிலை 9- 11 வகுப்பு வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) பல்கலைக்கழக புகுமுக வகுப்பு 12 - 13 வகுப்புக்கள் என வகைப்படுத்தலாம்.

இவ் இடைநிலை வகுப்பு மாணவர்கள் பெருமளவு தமது பிரச்சினைகளை அறிந்திருப்பவர். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அல்லது தமது பிரச்சினைகளை எடுத்துச் செல்வதற்கு அப்பிள்ளை நம்பிக்கையான ஒரு ஆசிரியரை நாடும். இவ்வாசிரியர் இரகசியத்தன்மை பேணுபவராகவும் - அம்மாணவனின் பிரச்சினைகளைச் செவிமடுத்து மாணவன் மனதில் நம்பிக்கையைக் கொடுத்து அவனது பிரச்சினையைத் தீர்த்து வைப்பவராகவும் இருக்க வேண்டும்.

### பிள்ளைப் பருவத்திற்குரிய சில பண்புகள்

- எண், எழுத்து வாசிப்பு போன்ற திறன்களைப் பெற்றுக் கொள்ளுதல்
- சுய எண்ணக்கரு வளர்ச்சியடைதல்
- சகபாடிகளுடன் பொருத்தப்பாடு அடைதல்.
- அறநெறி, மனச்சாட்சி. சமூக விழுமியங்கள். மனப்பாங்குகள் விருத்தியடைதல்.
- விளையாட்டுக்களில் பங்குபற்றி உடல் திறனைப் பெறுதல்.
- பெற்றோர், ஆசிரியர், முதியவருக்குக் கீழ்ப்படிதல்.

கட்டிளமைப் பருவமானது உளநெருக்கடிகளும், முரண்பாடுகளும் நிறைந்த பருவமாகும் பெரியவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து சுதந்திரம் பெற எத்தனித்தல் பாடசாலையில் மாணவருடனும், நிர்வாகத்துடனும், ஆசிரியர்களுடனும், பெற்றோர்களுடனும் முரண்பட்டு கொண்டிருப்பர். பெரியவர்களின் புத்திமதிக்கு முக்கியத்துவம் கொடுக்காது சகபாடிகள் சொல்லும் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பர். இவ்வயதினருக்கு தகுந்தமாதிரி நடவடிக்கைகளை எடுத்து அவர்களது எதிர்காலத்திற்கு, வாழ்க்கைக்குரிய பாடங்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். இதைவிட புகைத்தல், மதுபானம் அருந்துதல் போன்ற பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்வர். அவர்களைத் தடுத்து நல்லறிவு புகட்ட வேண்டும். இத்தோடு அவர்களுக்கு எதிர்பாற்கவர்ச்சி, பாலியல், சம்பந்தமான உடல், உளப் பிரச்சினைகள் ஆரம்பிக்கும். இப்படியாக மாணவர்களின் மனதினை அறிந்து அவர்களுக்குத் தகுந்தவாறு அறிவுரை சொல்லி நல்ல நண்பர்களின் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களது மனவளர்ச்சிக்கு உதவி செய்து சிறந்த ஆளுமையுள்ள மாணவர்களாக அவர்களை உருவாக்கினால் அவர்கள் வீட்டிற்கும், நாட்டிற்கும் நற்பெயரையும், அமைதியையும் ஏற்படுத்தித் தருவார்கள் என்பது திண்ணம்.




மனிதன், இறைவன், அரசியல், மூன்று பிரிவுகளையும் அலசி ஆராய்ந்து தமது தத்துவ தரிசனமாக உலகிற்கு வழங்கியவர் அரிஸ்டோட்டில். இவர் பிளாட்டோவின் மாணவர். மாவீரனாகத் திகழ்ந்த அலெக்சாண்டருக்கு பன்னிரண்டு ஆண்டுகள் நண்பராகவும், ஆசிரியராகவும் இருந்தவர் அரிஸ்டாட்டில்.

"இந்த உலகம் இறைவனால் தோற்றுவிக்கப்படவில்லை. ஆனால் இந்த உலகை இயக்குபவன் இறைவனே!" "மனிதன் தனிமனிதச் சிந்தனை கொள்ளாமல், சமூகச்சிந்தனையோடு வாழ வேண்டும்" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீள்நல்லிணக்க நடவடிக்கைகளும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் மீண்டெழுகையும் போருக்குப் பிந்திய சூழலில் தீவகத்தை மையமாகக் கொண்ட ஒரு சமூகவியல் நோக்கு

நா.கிருசாந்தினி
பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

உலகில் சமூக அமைப்பின் இயக்கம் என்பது குடும்பத்தைப் பிரதான அலகாகக் கொண்ட ஒரு நீண்ட வரலாறாக இருந்து வருகின்து. இலங்கையின் சமூகக் கட்டமைப்பில் குடும்பம் எனும் சமூக நிறுவனமானது ஆண் தலை மைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே நிலைபெற்றுள்ளது. எனினும் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக இலங்கையில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற யுத்த நிலைமைகள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் அதிகரிப்புக்கு காரணமாகியதுடன் இது பல்வேறு வகையான சமூக பொருளாதார நெருக்கடிகளையும் ஏற்படுத்தி விட்டமை குறிப்பிடத்தக்கது.

"குடும்பத் தலைமைத்துவம் என்பது குடும்பத்தின் பிரதான வருவாயைத் தேடித்தருதலும் குடும்பத்தின் பொருளாதார நடவடிக்கைகள், வெளித்தொடர்புகளை நிர்வகித்தல் ஆகும். குடும்பங்களில் ஏதாவது காரணங்களால் கணவன் இழக்கப்படும் போது பெண்கள் குடும்பத் தலைமைத்துவத்தை ஏற்க வேண்டி ஏற்படுகிறது. அதாவது சமூக அரசியல் குடும்ப சூழ்நிலைகள் எதுவெனினும் பெண்களே முன்கொண்டு செல்ல வேண்டி ஏற்படுகிறது" இவ்வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும் குடும்பங்களைப் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்கிறோம்.

ஆண் தலைமைத்துவக் குடும்பங்களே பொதுவானவையாகவும் இலட்சியத் தன்மை வாய்ந்தவையாகவும் இச் சமூகத்திலே கருதப்படுகின்றது. இவ்வாறான ஒரு பண்பாட்டுச் சூழலின் வேதனையான பின்னணியல் தோற்றம் பெற்றுள்ளவையாகவே பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. இவ்வமைப்பு மாற்றம் குடும்பத்தில் ஏற்பட்டதன் காரணமாக வாழ்வியலோடு இணைந்த பல்வேறு விடயங்களும் தாக்கத்துக்குள்ளாகத் தொடங்கின.

இத்தகைய ஓர் சூழலில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தொடர்பாகவும், அவற்றினது சமூக, பொருளாதார விடயங்கள் தொடர்பாகவும் போதிய கவனம் செலுத்துதல் அவசியமாகின்றது. ஏனெனில் சமூக அடுக்கமைவுகளினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு சமுதாய வாழ்க்கைக்குள் சவால்கள், சிக்கல்கள் என்பது தவிர்க்க முடியாத பகுதியாகின்றன. இந்த நிலைமை பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் எத்தகைய சவால்களை எதிர்கொள்ளச் செய்கின்றது என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## குடும்பம் பற்றிய ஓர் அறிமுகம்

சமூக மற்றும் பொருளாதார அளவில் மிகவும் அடிப்படையான அலகு குடும்பம். குறிப்பாக குடும்பம் என்பது திருமணத்தின் மூலம் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே நிலையான, நெருக்கமான இணைப்பினால் அவிழ்க்க முடியாதபடி பிணைக்கப்பட்டவொன்றாக இருக்கின்றது. அது சமூகத்தில் மிகச் சிறிய வரையறுக்கப்பட்ட குழுவாயிருப்பினும் கூட குடும்பம் அதன் நிறுவன மதிப்பிலும் சமூக வாழ்க்கையில் அது செலுத்தும் ஆதிக்கத்திலும், தனக்கு நிகராக, எந்த குழுவையும் நிறுவனத்தையும் பெறாது தலைதூக்கி நிற்கின்றது என்பது புலனாகும்.

## பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்

பொதுவாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களை வரையறுக்கும் போது இயற்கை அனர்த்தங்களினால் கணவன் மரணம் அடைந்தமை, விபத்தின் போது கணவன் இறந்தமை, யுத்தத்தினால் கணவனை இழத்தல், விவகாரத்து அல்லது கணவனால் கைவிடப்படல் , குடும்பத்தின் மூத்த ஆண் உறுப்பினர் குடும்பத்தை விட்டு விலகுதல், குடும்பத்தின் மூத்த ஆண் உறுப்பினர் அங்கவீனராக இருத்தல், கணவன் காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் வேறு காரணங்களினால் பெண்கள் குடும்ப தலைமைத்துவத்தை ஏற்றல் எனச் சொல்ல முடியும்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கருத்தின்படி வயது வந்த ஆண்கள் இல்லாத விவாகரத்துச் செய்யப்பட்ட பிரிந்து வாழ்கின்ற திருமணமாகாத குடிபெயர்ந்து வாழ்கின்ற நிலைமைகளினால் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தோற்றம் பெறுகின்றது.

ஆகவே பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்பது குடும்பத் தலைமைத்துவம், பொருளாதாரம், திட்டமிடல், தீர்மானம் போன்ற அனைத்துமே பெண்களால் முழுவதுமாக கட்டமைக்கப்பட்டு மேற்கொள்ளப்படுவதாக அமைகின்றது. ஆயினும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மீதான சில பிற்போக்கு சிந்தனைகள் இன்னும் சமூகங்களில் தொடர்ச்சியாக இருந்து கொண்டே இருக்கிறது.

## போருக்கு பின்னரான தீவகம்

தீவகம் கடலால் சூழப்பட்ட பிரதேசங்களாக இருப்பதினால் யுத்த இன்னல்களை அதிகம் எதிர்கொண்டதுடன் மக்கள் மீளக் குடியமர விடுவிக்கப்படாத பகுதியாகவும் சில பிரதேசங்கள் இருந்ததுடன் பல காலமாக உயர்பாதுகாப்பு வலயமாக காணப்பட்டதும் அங்குள்ள மக்களின் சமூக மற்றும் வாழ்வியலின் அபிவிருத்தியிலும் பாதுகாப்பிலும் வளர்ச்சியடையாமைக்கான காரணங்களாக உள்ளது.

போருக்கு பிந்திய இன்றைய சூழலில் பல இளம் பெண்கள் பாலியல் ரீதியான துஸ்பிரயோகங்களுக்கு உட்படுகிறார்கள். இளைஞர்கள் தமது இளமையான காலப் பகுதியை போரிலும், இடப்பெயர்வுகளிலும் கழித்துவிட்ட நிலையில் நம்பிக்கை இழந்து காணப்படுவதுடன் அவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளது.

போரின் பின் ஏற்பட்டுள்ள சமூகப் பிறழ்வு, கொலை, களவு, பாலியல் வன்முறை சிறுவர் துஸ்பிரயோகம், சமூக சீரழிவுகள் காலச்சார விழுமியங்களை கட்டுக்கோப்பாக பேணி வந்த சமூகத்தினரிடையே மாறுபட்ட எண்ணக்கருக்களை உருவாக்கியுள்ளன.

சனநாயக, நல்லாட்சி என்ற கோட்பாட்டில் உதயமாகியும் புதிய அரசின் ஆட்சி முறையில் சமூகநீதி சனநாயக செயற்பாட்டிற்கான வாய்ப்புக்கள், அபிவிருத்தி வேலை வாய்ப்பு போன்ற விடயங்களோடு அரசியல் சார் பிரச்சினைகளையும் இளைஞர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

## பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்கொள்கின்ற சமூக பொருளாதார பிரச்சினைகள் ஒரு சமூகவியல் நோக்கு

இலங்கையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை அண்மைக்காலம் முதலாக திடீரென ஓர் அதிகரிப்பைக் காட்டுகின்றது. இலங்கை சமூகத்தைப் பொதுவாக நோக்கின்ற போது பெண் என்பவள் பிறந்தது முதல் பெற்றோராலும் திருமண வாழ்வில் கணவனாலும் கணவன் இறந்த பின்னர் பிள்ளைகளாலும் கட்டுப்படுத்தப்பட்டவளாகக் காணப்படுகின்றாள். சட்டரீதியாக 18 வயதுக்குப் பின்னர் பெண் தனித்துச் சுதந்திரமாகச் செயற்படக் கூடியவளாக இருக்கின்ற போதிலும் பண்பாடு மற்றும் ஒழுக்கமுறை காரணமாக பெண்கள் நடைமுறை வாழ்வில் தனித்து எக்காரியத்தையும் செய்யத் துணிவதில்லை. திருமணமாகி இளவயதில் கணவனை இழந்ததன் பின்னர் பெண் தனித்து வாழுதல் என்பது இயலாததாகும். அவளது வாழ்க்கைக்கான பொருளாதாரத்தை மீண்டும் பெற்றோரோ அல்லது அவனது சகோதரர்களோ தான் வழங்க வேண்டி உள்ளது. ஆனால் இப்போது பெண்கள் தனித்துத் தமது குடும்ப பொறுப்பை ஏற்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

வயதடிப்படையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை நோக்கும்போது அதிகமானோர் 40 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் தங்கி வாழ்வோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக இருக்கின்ற காரணத்தால் வாழ்வாதாரம் கீழ்நோக்கிச் செல்கின்ற தன்மையைக் காணலாம். சமூக மாற்றங்கள் பல நிகழ்ந்தபோதும் சாதாரண பெண்களை விடப் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பெண்களைச் சமூகம் சற்று வேறுபடுத்தியே நோக்குகின்றது. மதம் மற்றும் கலாச்சாரக் கட்டுப்பாடுகள் இப் பெண்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாகவே உள்ளன. தமது வறுமையைப் போக்கத் தொழில் செய்யும் நிலையில் சமூகத்தின் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ளும் இப் பெண்கள் சொல்லொனாத் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள்.

தீவகம் போர், இடப்பெயர்வு மற்றும் மீள்குடியேற்றம் என்பன குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தொடர்ச்சியாக இடம்பெற்ற பிரதேசமாகவும் காணப்பட்டது. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பல தடவைகள் தொடர்ச்சியாக மக்கள் இடம்பெயர்ந்தமையால் அவர்கள் தமது பெறுமதியான மனித வளங்களை இழந்தது மாத்திரமின்றி பொருளாதார, சமூக மூலதனங்கள் முதலானவற்றையும் இழந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இவை விரக்தி , சோர்வு, தனிமை முதலான உளவியல் தாக்கங்களிற்கு இட்டுச் சென்றுள்ளது. இங்கு சற்று ஆழமாக நோக்குவோமேயானால் தங்களுடைய இளவயதில் கணவனை இழந்த, காணாமல் ஆக்கப்பட்ட மாற்றுத் திறனாளியாக்கப்பட்ட மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் அதிகமாகவும் உள்ளனர். இந்த நிலையானது திடீரென குறுகிய காலப்பகுதிக்குள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தமை சமூக பொருளாதார கலாசார மற்றும் உளவியல் ரீதியாக அந்த பெண்ணுக்கு மட்டுமல்லாமல் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் அவரைச் சார்ந்தோர் வாழும் சமூகத்துக்கும் பல்வேறுபட்ட எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான குடும்ப அமைப்புக்கள் சமூகக் கட்டமைப்பு மற்றும் கட்டுக்கோப்பான சமூகத்தால் அங்கீரிக்கப்பட்ட கலாசாரத்தின் மீது எதிர்மறையான தாக்கத்தைச் செலுத்துகின்றது. இவ்வாறு போரின் காரணமாக உருவான பெண் தலைமைத்துவக் குடும்பங்களால் அந்தத் தலைமைத்துவம் வகிக்கும் பெண்ணுக்கு மட்டும் அல்லாமல் அவளைச் சார்ந்த சமூக சூழலுக்கும் தாக்கத்தை ஏற்படுகின்றது.

பண்பாடு என்பது இன்றைய பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் மீது பாரிய செல்வாக்கினைச் செலுத்துகின்றது. பண்பாட்டு அடையாளங்களாக பெண்களைப் பேண முயலும் சமூக கட்டுப்பாடுகளினால் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தமது செயற்பாடுகளை, தேவைகளைச் சரிவர நிறைவேற்றிக்கொள்ள முடிவதில்லை. இது சமூக நடத்தையின் அனைத்து வடிவங்களிலும் தாக்கம் செலுத்தும் ஒன்றாகக் காணப்படுகிறது.

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகமாக உள்ளது என்பதனை தெரிந்து கொண்ட நாம் அதிலும் குறிப்பாக உள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.அதாவது போரால் கணவனை இழந்து விதவையாக்கப்பட்ட பெண்கள் ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ள அதேவேளை இன்றைய நாட்களில் போர், இடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்வு அகதி முகாம் வாழ்க்கை, மீள் குடியேற்றம் என்பவற்றுக்குப் பின்னர் குடும்பங்களுக்கிடையில் விரிசலும் பிளவு களும் இன்றுவரை ஏற்பட்ட வண்ணமே உள்ளன.

போர் முடிவுக்கு வந்து இன்று கிட்டத் தட்ட எட்டு ஆண்டுகளைக் கடந்தாலும் கூட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தீவகத்தில் பாரிய சவால்களை எதிர்கொள் கின்றன. போரின் வடுக்கள் அதிகரித்து வருகின்ற சமூக பொருளாதார நெருக்கடிக ளுக்கும் மற்றும் சமூகச் சிக்கல்களுக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர் நோக்கும் சவால்களுக்கும் நேர்கணியத் தொடர்பு உள்ளது என்பதை அவதானிக்க முடிகின்றது.

இன்று அபிவிருத்தி செயற்பாடுகளை இணைத்து செயற்படக்கூடிய பல திட்டங்கள் நடைமுறையில் இருந்தபோதிலும் மீள் கட்டமைப்பு, சமூகப் பாதுகாப்பு அபிவிருத்தி தொடர்பாக பல இடைவெளி பிரதேச மட்டத் தில் இருந்து வருகின்றது.

போரின் தாக்கங்களில் இருந்து மீண் டெழுந்த மக்கள் அதன் தாக்கங்களில் இருந்து விடுபடாத நிலையில் குடும்பங்கள் சமூகங்கள் மத்தியில் பிணக்குகள் தோன்று வதற்கு வாய்ப்புக்கள் உண்டு.




*உலகத்தின் முதல் தத்துவஞானி என போற்றப்படுபவர் சாக்ரடீஸ்.*
*மதவாதிகளை நோக்கி "கடவுள் என்பவர் யார்?"*
*எனக் கேள்வி கேட்ட முதல் பகுத்தறிவாளர்.*
*உலகில் எந்த மதமும் தோன்றாத காலக்கட்டத்திலேயே*
*மனித அறிவின் தோற்றம், தர்க்க சாஸ்திரம் ஆகியவற்றில்*
*திறன் பெற்று விளங்கியவர்.*

*"எனக்கு எதுவும் தெரியாது என்பது எனக்கு தெரியும்,*
*ஏனெனில் நான் ஒரு அறிவாளி"*
*என்பது சாக்ரடீஸின் புகழ்பெற்ற தத்துவம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்றல் கற்பித்தலில் அழகியல் பாடத்தின் செல்வாக்கு

**திருமதி. பிருந்தா சோமலோஜன்**
ஆசிரியர்

கல்விச் செயற்பாடுகளில் கலைகளின் பங்களிப்பு அதிக செல்வாக்கினைச் செலுத்துகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். கல்வியை இலகுவாக போதிப்பதற்கும், விளங்கிக் கொள்வதற்கும், ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் ஊக்கமும் ஆக்கமும் அளிப்பதுடன் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கும் இவ்வழகியல் பாடங்கள் உதவுகின்றன.

குருவானவர் சுயநலமற்று மாணவர்நலம் பேணுபவராக இருப்பதனால் பல உத்திகளைக் கையாண்டு மாணவரின் திறன்களை மேம்படுத்துவதற்காக தன்னை மாற்றி அமைத்துக் கொள்வதற்கு அழகியல் பாடங்கள் உறுதுணை செய்கின்றன. இதனாலேயே ஆரம்ப பிரிவுகளில் மட்டுமன்றி இடைநிலைப் பிரிவுகளிலும் அழகியல் பாடங்கள் புகுத்தப்பட்டுள்ளன.

**"சாதாரண ஆசிரியர் சொல்கிறார்,**
**நல்ல ஆசிரியர் விளக்குகிறார்**
**உயர்ந்த ஆசிரியர் செய்து காட்டுகிறார்.**
**திறமையுடைய ஆசிரியர் ஆக்கமுறச் செய்கிறார்."**

அதாவது ஒரு விடயப்பரப்பினை இலகுவாகப் புரியவைக்க வேண்டுமாயின் மாணவர்கள் எதிர்பார்த்திருக்கும் உன்னத வெளிப்பாடுகளாக அழகியல் அணுகுமுறையுடன் அவர்களின் உள்ளத்தினை வென்றெடுத்து கற்றலை இலகுபடுத்துவது ஓர் உத்தியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுப்பரீட்சையில் அனேக மாண வர்கள் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங் களில் சித்தியடையத் தவறுகிறார்கள். இப் பாடங்களை ஆற்றுகைக் கலைகளுடன் தொடர்புபடுத்தி கற்பிப்பாராயின் நிச்சயம் முன்னேற்றம் ஏற்படும் என்பது திண்ணம்.

"திணிப்பதை விடுத்து விளையாட் டின் வடிவில் குழந்தைகளது கற்றல் அமைய வேண்டும்" என்றார் பிளேட்டோ இதற்கிணங்க செயற்பட வேண்டும்.

குழுவாக ஆசிரிய மாணவர்கள் செயற்பட்டு கற்கும் போது முழுமையான புலமையைப் பெறுவதுடன் ஆடல்பாடல், நடிப்பு என்பவற்றை கருவியாகக் கொண்டு கல்வியில் ஈடுபடுவதால் ஆரோக்கியமான கற்றல் நிகழ்வினை வலுவூட்டுவதாக அமையும்.

இதனாலேயே கணித விஞ்ஞானப் போட்டி ஆங்கிலப் போட்டி, தமிழ்த்தினப் போட்டி போன்ற போட்டிகளில் பாடல், நாட கம், நடிப்பு, விவாதம் போன்ற நிகழ்வுகளை நடாத்துகின்றனர். எனவே தான் சிறந்த ஒரு ஆசிரியர் சிறந்த கலைஞராவார். மேற்கூறப் பட்ட முறைகளில் கற்றல் செயற்பாடுக ளினை நடைமுறையில் கையாளும்போது மாணவர்களுக்கு சலிப்பு ஏற்படாது. இவ்வா றான உத்திகளைக் கையாளும் ஆசிரியரா னவர் ஒவ்வொரு மாணவனின் வாழ்க்கை யிலும் மறக்க முடியாத ஆசானாக காணப் படுகின்றார்.

"இசை, நடனம் போன்ற கலைகளில் தேர்ச்சி பெற்றவனே கல்விமான்" - என பிளேட்டோ, கூறுகிறார். சிந்திக்கும் உயிரி யான மனிதனின் ஆளுமை வளர்ச்சியில் இசை, நடனம் என்பன செல்வாக்குச் செலுத் துகின்றமையை உணர முடிகின்றது.

பவ்லொவின் பாரம்பரிய கற்றல் கொள்கையானது "குழந்தை விரும்பும் ஒரு நிலையை வைத்து அக்கறை இல்லாத விட யத்தை புகுத்த வேண்டும்" என்கிறார். இதற்கு சிறந்த ஊடகமாக அழகியல் பாடங் கள் விளங்குகின்றன.

மனவெழுச்சியை அழகியல் வழி யாக நிலைமாற்றி உடலால் வெளிப்படுத் தும் போது ஆடல், நாடகம் என்பன பிறக் கின்றன. மனவெழுச்சியின் செழுமையான உடற்கோலமே ஆடல் வடிவமாகும். இவ் வாறு மனவெழுச்சி நிலைக்கேற்ப மகிழ்ச்சி கரமான கற்பித்தலை மேற்கொள்ள அழகி யல் பாடங்கள் துணை செய்கின்றன.

கற்பித்தல் என்பது "மாணவன் தனது திறமைகளையும் மனப்பான்மைகளையும் அறிவையும் விழுமியங்களையும் வளர்க்கு மாறு உதவும் பணியே" என கல்வியியலா ளர்கள் விளக்குகின்றனர். கற்பித்தலில் கற்பிக்கும் பாடத்தைவிட அது மாணவர் மனதில் பதியவைப்பதும் ஆர்வத்துடன் கற்கச் செய்வதும் முக்கியமானதாகும். இதனை இலகுவாக்கவே அழகியல் கலை கள் துணை புரிகின்றன. பகுத்தறிவு எழுச்சி யுறுவதற்கு முருகியற்கலை ஒரு நிபந்த னையாகும்" என காள்மாக்ஸ் கூறுகிறார்.

மனிதனின் கற்பனை, விருப்பு, சிந்தனை என்பன வெவ்வேறு உளவியல் உள்ளடக்கங்களிலும் பரந்த செயல்களை உடையதொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையான ஒன்றிணைந்த ஆளுமைத் தன்மையின் விருத்திக்குத் தேவையானவற்றில் அழகியல் கல்வி ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது.

கலையானது உலகியல் அறிவையும் சிந்தனை உணர்வையும் வெளிப்படுத்தும். இதனாலேயே கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை கலையுணர்வுடன் கையாளும் போது ஞாபகத்தன்மை அதிகரிப்பதுடன் பாடத்தில் அல்லது பாட அலகில் விருப்பமும், ஆர்வமும் ஏற்படும்.

ஒரு வகுப்பில் ஒத்த வயதுடைய மாணவர்கள் ஒரேவிதமான அறிவு, திறன், ஆற்றல் என்பவற்றைக் கொண்டவர்களாக இருப்பதில்லை. ஆசிரியர் தனது ஆளுமைத்திறனால் மாணவர்களுக்கு புரியும்படி செயற்படுவது இன்றியமையாதது ஆகும். பிள்ளைகளின் மனவெழுச்சி இயல்பூக்கங்கள், உளப்போக்குகள் நுண்ணறிவு என்பவற்றை அறிந்து அவர்களின் இயல்பான வளர்ச்சிக்கு வழிகாட்டுதல் சிறந்ததாகும். இதற்கு ஓர் ஊடகமாக கலைகள் திகழ்கின்றன.

வகுப்பறைகளை மாணவர்களைப் பயன்படுத்தி அழகு, இரசனை உள்ள கலைக்கூடமாக மாற்றியமைக்க வேண்டும் இவ் மாற்றியமைத்தலினூடாக கற்கின்றோம் எனும் சுமையின்றி நாளாந்தம் அவற்றைப் பார்க்கும் போது மாணவர்களுக்கு அவ்விடயங்கள் மனதில் பதிந்துவிடும்.

எனவே எந்தவொரு விடயத்தினையும் இலகுவாக்கிக்கொள்ள அழகியல் ஒருவனுக்கு துணை செய்கின்றது என்பதனை அறிந்து கொள்ளலாம்.

●

அறிவைக் கொண்டு ஆண்டவனை அறியலாம்
என்பது முடியாத செயல்
அறிவை விட நம்பிக்கை மேலானது. நம்பிக்கை உடையவன்
எளிதாக முடிக்க வல்லவன், இறைவனையும் அவன் அறிவான்.
- மகாத்மா காந்தி -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காவலூர் ஜோண்

# அநாதை

அன்றொரு நாள்
அநாதையாக்கப்பட்ட மனிதன்
மனிதம் தேடி
வீட்டிலே ஒதுங்கிய வயோதிபம்
தள்ளாடித் தரையில்
வீதிக் காவலராய்
ஊருக்கும் வாழ்க்கைக்கும்
எல்லைச் சுவராய்
அரைசாண் வயிற்றுக்கு
ஊண் தேடி காலனின் வரவிற்கு
கூப்பிடும் தொலைவில்
காவலிருக்கும் ஒரு கூட்டம்
இது ஓர் அநாதை - முதியோர்!

இன்னும் சில நாளில்
யாரோ இட்ட விதை
வித்தாகிக் கருவாகி
வீதிக் கரையிலே
முளைத்து
நீர் ஊற்றி வளர்த்துவிட
தாயின்றி வேறு
யாருமின்றி தானாக
முளைக்கும் ஒரு கூட்டம்
இது ஓர் அநாதை - சிறுவர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைய நாளில்
நடந்த கலவரத்தில்
ஓடிய ஊரில் ஒதுங்கிய மக்களில்
வெட்டிச் சரித்த மனிதங்கள்
பெட்டி போட்டு மதிப்பளிக்க
அவரவர் துன்பத்தில்
யாரை யார் பார்ப்பது
யாருக்கு மதிப்பளிப்பது
எனத் தவிக்கும் நிலையில்
அநாதரவாய் கிடந்த
இது ஒரு வகை அநாதையாய் - சடலம்!

இன்னும் பல நாளில்
ஊரின் பல மூலைகளில்
வெட்ட வெளிக் காட்டில்
பிள்ளைக்குப் பயம் சொல்ல
புதைந்தும் புதையாமலும்
உக்கிக் கொளுத்திய
சாம்பல் எச்சங்களுமாய்
எந்த உயிரினமோ
ஏதெனத் தெரியாது
விலங்கினத்தின்
எச்சம் போல் கிடக்கும்
ஒரு வகை அநாதையாய் - மனிதஎன்புகள்!

மொத்தத்தில் அநாதை என்பதே
"கவனிப்பாரற்ற"
எனும் கருத்துக் கூறும்
அகராதியின் ஓர் விளக்கம் உள்ளவரை
அநாதைகள் வெறுமனே
எச்சங்கள் மட்டும் தான்
தேவையுள்ள ஒன்றல்ல எனக் கூறும்
சமூகமும் மாறாது
அநாதைகளும் ஒழியாது - அநாதியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது மனித நேயம்

நேர்நோக்குடன் பயணிப்போம்
நேர்மையை முதன்மைப்படுத்துவோம்
நல்ல நட்புக்கு வித்திடுவோம்
நல்லுறவை வளர்ப்போம்
நேயவுணர்வை வளர்ப்போம்
நேர்த்தியான எண்ணங்களைப்
பெருகச் செய்வோம்.

நம்பிக்கையின் சட்டகங்களாய்
மிளிர்வோம்
நம்மிலே நாம் ஆறுதலடைவோம்
நம்மையும் பிறரையும்
பாதுகாப்போம்
இதயத்தில் பிறர்வாழ
இடமளித்து உதயமாகும்
நல்லுறவின் விளக்காக
முன்நோக்குப் பாதையை நோக்கி

திரு. நீக்கிலாஸ் சந்தியாப்பிள்ளை
மெலிஞ்சிமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்முகத்தோடு இனிது பேசி
என்றும் நன்றாய் அன்போடு வாழ்ந்தே
அவனியில் சொர்க்கம்
நோக்கி நகர
இதயத்துடிப்புடன்
இனிதே பேசி
மத இன பேதங்கள்
கடந்து உறவுப்
பாலம் அமைப்போம்...

இறை இல்லம் அமைப்போம்
புன்னகை பூத்திடவே
புண்ணியம் செய்வோம்
பூவுலகில் சொர்க்கமதை
எமதாக்குவோம்...

நீங்கள் நல்லவர்களாக
வாழும் பொழுது
மற்றவர்களும்
உங்களைத் தேடி வருவர்
இது மனித நேயம்...!

மற்றவர்களின் விமர்சனங்களைச் சகித்துக்
கொள்வதுதான் பொதுச் சேவையில் ஈடுபடுபவருக்கு
வைக்கப்படும் உண்மையான பரிசோதனை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் தரும் மது

**செபஸ்ரியாம்பிள்ளை மேவிஸ் ஜின்சியா**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம்,**
**ஊர்காவற்றுறை.**

மதுவில் மனம் கழித்திருக்க
மானம் காற்றில் பறந்திருக்க
மாந்தருனை வெறுத்தொதுக்க
மரணவாசல் திறந்திருக்க
மனைவியை விதவையாக்க
பிள்ளையை அநாதையாக்க
நல்லவை மறந்து போக
நாய்களுடன் தூங்க வைக்கும்
மது நமக்கு வேண்டாம் நண்பா

உயர்கல்வி பாழாய்போக
உள்ளங்கள் உடைந்து போக
உயிருனைபிரிந்து போக
உன்னை நீ உணர் தோழா
உண்ணாமல் உறங்காமல்
ஊருராய் திரிய வைக்கும்
உறவெல்லாம் உனைவெறுக்க
உள்ளமது நோகவைக்கும்
உயிர்கொல்லி மதுவேண்டாம் தோழா

பாசத்தில் தாய்மைக்கே
பயமின்றி பரீட்சை வைப்பாய்
பாதகன்போல் பாரினிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பிழந்து புகழிழந்து
பார்போற்றும் குணமிழப்பாய்
படைத்தவன் மேல் பக்தியின்றி
பரதேசியாய் அலைந்திடுவாய்
மதிமயக்கும் மது வேண்டாம் மானிடா

உழைப்பையும் மதிப்பையும்
ஊரினில் சீர்குலைக்கும்
ஊதியத்தை சுரண்டி - உன்னை
தெருப்பிச்சை எடுக்க வைக்கும்
மாந்தர் மத்தியிலே
மடையனாய் நிற்க வைக்கும்
மறத்தமிழர் மேன்மை நீங்கி
மாவீரம் கெட்டு நிற்கும்
மது வேண்டாம் சகோதரா

அரசுக்கு வருவாய் பெருகும்
அரிசிக்கும் காசின்றி போகும்
அறம் தானம் மறந்து போகும்
அன்பதும் சிதைந்து போகும்
விடையில்லா வினாக்கள்
பற்பல கேட்பாய்
விடிந்ததும் வீதியில் விசரன் போல்
தனியாய் நிற்பாய்
தீது தரும் போதை வேண்டாம் அப்பா

மழலை மனம்மாறி இங்கு
மந்திமனம் தொங்கி நிற்கும்
மனம்மாறா உன்னைப் பார்த்து
மலம்தின்னி காக்கை சிரிக்கும்
மதுவுக்கு அடிமை என்றால்
மணம்புரியாதீர் மடையர்களே
திசைமாறித்திரியும் உம்மை
திருத்த மாதர் பிறக்கவில்லை...
மதுவேண்டாம் மணாளனே
வசந்த நிலை மாறி உந்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு பறிபோகவைக்கும்
வந்தசுகம் விலையாகி
வாசலோடு போக வைக்கும்
உடல் சிதைத்து நரம்புருவி
உயிரதனை பறித்து நிற்கும்
அரைக்காலில் முழும் தெரிய
ஆடையினை அவிழ வைக்கும்
அசிங்கம் தரும் மது வேண்டாம் அண்ணா

தீயோர் சேர்க்கை சேரவைக்கும்
இகழ்வோர் குழுவில் இணையவைக்கும்
கொடுத்த வாக்கை மறக்க வைக்கும்
கேடியாகி திரிய வைக்கும்
அச்சம் மடம் நாணம் கெட்டு
பெண்ணின் மேன்மை களைய வைக்கும்
நெருங்கி வரும் சொந்தமெல்லாம்
நெருஞ்சி முள்போல் உணரவைக்கும்....
மதுவேண்டாம் தம்பி.

குடிக்கும்குடி உன்னைக்கொல்லும்
குடிக்காமலே எனையும் கொல்லும்
குழந்தையின்றி குடும்பமின்றி
குடிகாரனாய் திரியவைக்கும்
தீயதை தொட வைக்கும்
தீயினில் விழவைக்கும்
திருந்தி நீ வருகையிலே
திசை எட்டும் கை தட்டும்
குடிகெடுக்கும் குடி வேண்டாம் ஆடவரே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டில் இடம்பெற்ற யுத்தம் மற்றும் அனர்த்தங்களால் தீவக மக்கள் மனங்களில் ஏற்பட்ட உளசமூக தாக்கங்கள்

## ஒரு அவதானப்பார்வை

**செல்வி. நிதனாஞ்சலி சுப்பிரமணியம்**
**உளவளத்துணை உதவியாளர்,**
**பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.**

அன்றாட வாழ்வில் மனிதன் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து வருகிறான். இந்தப் பிரச்சினைகளை தகர்த்துச் செல்வோர் சிலர், இடையூறுகளை கண்டு மனமுடைந்து கொள்பவர்கள் சிலர். இவற்றினை எதிர் கொண்டு வாழ்க்கையை நிறைவாக வாழ்வதெப்படி? என்பதுதான் ஒவ்வொரு வரதும் மனதில் எழுகின்ற வினாவாகும். இவ்வாறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கும் திறனில் அளவு மாறுபடுகிறது. இத்திறன் குறைவாக காணப்படும் போது அவன் அப்பிரச்சினையிலிருந்து விடுபட முடியாத நிலை ஏற்படுகிறது. இந்நிலையில் அவனிற்கான வழிகாட்டல்கள் அவசியமாகிறது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வசித்து வரும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றமையை அவதானிக்க முடிகிறது. மக்களுக்கான சிறந்த உளவளத்துணையை வழங்க வேண்டிய தேவையுள்ளது. இப் பிரதேசம் 1996 காலப்பகுதிகளில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு இடப்பெயர்வுகளையும், போரின் தாக்க இழப்புக்களையும் சந்தித்துள்ளது டன் அதிலிருந்து மீளமுடியாத நிலையில் அதன் தொடர்ச்சியாக 2000, 2006 மற்றும் 2009 ஆண்டுகளில் இடம்பெற்ற இடப்பெயர்வுகள் மீள்குடியேற்றங்கள் சமூக பொருளாதார பிரச்சினைகளோடு பல உளப் பிரச்சினைகளையும் மக்கள் சந்தித்துள்ள னர். இம்மக்கள் அதிலிருந்து மீளமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருப்பதோடு அதற் கான வழிகாட்டல்களும் இன்றி காணப்படு கின்றமையால் இவர்களுக்கான வழிகாட் டல்கள் அவசியமாகக் காணப்படுகிறது.

உளநலத்தை பாதிக்கும் காரணிகள் எண்ணிலடங்காதவை. நாட்டில் இடம் பெற்ற யுத்தம் மற்றும் அனர்த்தங்களால் பல அசாதாரண நிலைகள் உருவாகியுள் ளன. அல்லது உருவாக்கப்பட்டுள்ளன. இதன் விளைவுகளாக மக்கள் உள நெருக்கடி, இழிவிரக்கம், மதுபாவனைக்கு அடிமை, தற்கொலைகள், குடும்ப பிரச்சி னைகள், கல்வி கற்பதில் ஏற்படும் உள்ள பிரச்சினைகள் போன்றவற்றைக் குறிப்பிட லாம். இப்பிரச்சினைகளில் இருந்து ஒவ் வொருவரும் மீண்டுவர உளவளத்துணை யின் தேவை அவசியமாவதால், உளவளத் துணையாளர்களது தேவையும், உளவளத் துணையின் அவசியமும் மக்களிடையே உணர்த்தப்பட வேண்டும். உளவளத் துணை என்பதற்கு எமது சமூகங்களில், மனநோயாளர்களுக்கான மருத்துவம் வழங்கல் என்ற சிந்தனைகள் இருந்த போதிலும் விழிப்புணர்வுகள் மூலம் தற்போது உளவளத்துணையின் முக்கியத் துவம் தொடர்பாக மக்கள் தெளிவுபெற்று வருகின்றனர்.

இவ்வகையில் இன்று இவற்றுக்கு களம் அமைத்துக்கொடுத்து உளவளத் துணையின் அவசியம் பற்றி மக்களிடையே உணரச்செய்யப்பட வேண்டும். இந்த வகையில் தேர்ச்சி பெற்ற தொழில்வாண் மையான உளவளத்துணையினை வழங் குவதற்கு தொழில்வாண்மை உளவளத் துணையாளர்களுக்கான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினை அபிவிருத்தி செய்ய வேண்டும். மேலும் நாளாந்தம் பல்வேறு பிரச்சினைகளோடு பல்வேறு தேவைகளுக்கு பிரதேச செயலகங்களுக்கு வரும் மக்களில் அவர்களது பிரச்சினை களை இனங்கண்டுகொள்ளக்கூடியதாக இருப்பதனால் அவர்களில் உளநல மருத்து வரின் ஆலோசனை தேவைப்படும் சேவை நாடிகளை எமது பிரதேச வைத்தியசாலை உளநல மருத்துவரிடம் சிபார்சு செய்யப் படுவதோடு சட்டம் மற்றும் இதர சேவை களைப் பெற்றுக்கொடுப்பதற்காக பாரப்படுத் தப்படுகின்றனர்.

மேலும் தற்போது நாட்டில் இடம் பெற்ற அனர்த்தங்களால் சொத்துக்களை இழந்து பொருளாதார கஸ்டங்களை எதிர் கொண்டு மிகுந்த சவால்களுக்கு மத்தியில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். சொத்திழப் புக்களை ஓரளவு ஏற்றுக்கொண்டு அவற் றினை மீளவும் பெற்றும், பெறுவதற்கும் முயற்சி செய்து வாழ்ந்து வருகின்றமையை யும் காணக் கூடியதாக இருக்கிறது. எனி னும் இழந்த உறவுகளை பெற்றுக்கொள்ள முடியாமலும், அந்த இழப்புக்களை ஏற்றுக் கொள்ள முடியாமலும் தங்கள் மனதளவில் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின் றனர். தமது மனதில் உள்ள கஸ்டங்களை வெளிப்படுத்த தெரியாத அல்லது முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் வாழ்ந்து வருகின்றனர். சிலர் மற்றவர்களுக்காக தமது மனத் துன்பங்களை தமக்குள்ளே வைத்திருக்கின்றனர். இவர்களுக்கான வெளிப்படுத்துகைகளை முறையாக செயற்படுத்தி அவர்களது கஸ்டங்களில் இருந்து அவர்களை வெளிக் கொண்டு வரவேண்டும். அவர்களது இழப்புக்களை ஈடுசெய்வது கடினம் என்றாலும் ஆற்றுப்படுத்தல் மூலம் அவர்களுக்கு வாழ்க்கையின் முக்கியத்துவம் தொடர்பாக கூறி அவர்களை நம்பி வாழும் அவர்களது சந்ததிகள் அவர்களை இழக்கவிடாமல் பார்த்து கொள்ளலாம். இயன்றவரை இழப்பு ஏற்பட்ட நபர்களின் உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்க வேண்டும். இதற்கு அவர்கள் கூறவரும் விடயங்களை உன்னிப்பாக செவிமடுப்பது முதல் அம்சம் ஆகும். அவர்கள் கவலைகளை வெளிப்படுத்தக் கூடியவாறான நிகழ்வுகள் அல்லது சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவ்வாறு செயற்படுவதே உளவள சமூகநல மேம்பாட்டின் வெற்றியாகும்.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு வாழ்வாதாரத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது. சிலர் பொருளாதார ரீதியாக சற்று எழுச்சி பெறுகின்றனர் எனினும் மனதளவில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்வது சவாலான விடயம் ஆகும். மனதளவில் இழப்புக்களை சந்தித்த சிலர் பொருளாதார ரீதியாக செய்யப்படும் உதவிகளை ஏற்க மறுக்கின்றனர். மேலும் யுத்தம் மற்றும் அனர்த்தங்களால் உறவுகள் காணமல் போதல் மூலம் ஏற்பட்ட இழப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கும் போது இறப்பினை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்களை பெற்றுக்கொள்வதனை ஏற்க முடியாத நிலையில் உள்ளனர். உதவித்திட்டங்களைப் பெறுவதற்காக ஆவணங்களை பெற்றுக்கொள்கின்றனர். சிலர் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளினால் மறுமணம் புரிந்து பிள்ளைகளுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்காக மறுமணத்தை உறுதிப்படுத்துவதற்காக அவசரமாக இறப்பினை உறுதிப் படுத்தும் ஆவணங்களை பெற்றுக்கொள்கின்றனர். இது தற்கால அசாதாரண நிலைகளை சீர்செய்ய ஏற்றுக்கொண்டாலும் தனது கணவர் அல்லது மனைவி இறந்துவிட்டார் என்று மிகவும் மனவருத்தங்களோடு தெரிவித்தே ஆவணங்களை பெற்றுக்கொள்வதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மேலும் சிலர் தமது உறவுகள் மீளவும் வருவார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர். யுத்தம் மற்றும் அனர்த்தங்களால் பாதிக்கப் பட்ட தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியாமல், தாம் உறவுகளை இழந்துள்ளமையால் தான், தாம் கஸ்டப்படுகிறோம் என்றும் இழந்த உறவுகள் இருந்திருந்தால் தமக்கு இப்படி கஸ்டங்கள் ஏற்பட்டிருக்காது என்றும் இடைவெளி அதிகரிப்பதனை உணர்கின்றனர்.

அடுத்து யுத்தம் மற்றும் அனர்த்தங்களில் உறவுகள் அழிந்து செல்வதை நேரடியாக பார்த்த மக்கள் அதிர்ச்சியில் இருக்கின்றனர். சிலர் தமக்குள்ளே புதைத்தமையால் அதன் வெளிப்பாடாக மனநோயாளர்களாக வெளிப்படுகின்றனர். மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றனர். மேலும் தம்மையே பாதுகாத்து தமது வாழ்க்கையை முன்னோக்கி நடத்த முடியாத முதியவர்கள் பிள்ளைகளை யுத் தம் மற்றும் அனர்த்தங்களால் இழந்து அவர்களது பிள்ளைகளை ஆதரித்து வளர்க் கின்றனர். உதவித்திட்டங்களைப் பெற்று தங்களால் முடியுமானவரை சிறந்த கல் வியை வழங்கி அவர்களுக்கான சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முயல்கின்ற னர். தமக்கு இறைவனால் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் என தமது மனங்களை தேற்றி இழந்த பிள்ளைகளுக்காக தமக் குள்ளே அழுதுகொண்டு வாழ்ந்து வருவ தனை அவதானிக்க முடிகிறது. அந்த முது மையானவர்களிடம் பிரதான நோக்கமாக, காணப்படுவது, தாம் கவலையடையும் போது தாம் கூறும் சம்பவங்களை அருகிரு ந்து கேட்பதே ஆகும்.

நாளாந்தம் பல்வேறு விதமான பிரச் சினைகளுடன் பிரதேச செயலகங்களுக்கு வருகை தந்து தமது பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றனர். அவர்களுக்கான உளவளத்துணை வழங்கப்பட்டு இயலு மானவரை அவர்கள் தமது வாழ்க்கையை சிறப்பாக நடாத்திச்செல்ல வழிப்படுத்தப்படு கின்றனர். மேலும் யுத்தம் மற்றும் அனர்த் தங்களால் இழப்புக்களை எதிர்கொண்ட மக்களுக்கான சிறந்த சேவையினை வழங்கி சிறப்பாக அவர்கள் வாழ வழிப்படுத் தப்படுவதுடன் இழப்புக்களை முடியுமான வரை ஈடுசெய்யவேண்டும் என்பதுடன் சிறந்த சேவையினை வழங்கவேண்டும்.




பத்தொன்பதாம் நூற்றாண்டின் இந்தியாவின் தலைசிறந்த சமயத் தலைவராக திகழ்ந்தவர் விவேகானந்தர். இவரின் கருத்துக்கள் இளைஞர்களிடையே மாபெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. இவர் இந்தியாவிலும் மேலைநாடுகளிலும் அத்வைத வேதாந்த தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட பல சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

"நீங்கள் யாருக்கும் உதவி செய்ய முடியாது. சேவை மட்டுமே செய்ய முடியும்" என்பது விவேகானந்தரின் புகழ் பெற்ற கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நாளையும் நலமுடன் நாம் வாழ

மருத்துவர் பரா நந்தகுமார்
சுகாதார வைத்திய அதிகாரி,
ஊர்காவற்றுறை.

உடல், உள சமூக ஆன்மீக நன்னிலையுடன் ஒருவர் காணப்படுதலே சுகநலம் (HEALTH) என்பதற்கு வரைவிலக்கணமாகக் கொள்ளமுடியும் என உலக சுகாதார நிறுவனம் (WHO) குறிப்பிடுகின்றது. இவ் வரைவிலக்கணம் முன்னர் கருதப்பட்ட நோயற்ற நிலை என வெறுமனே அடையாளப்படுத்தப் படுகின்ற தன்மையே சுகநலம் என வரையறுப்பதைக் காட்டிலும் மேம்படுத்தப் பட்ட சிந்தனை ஆகும்.

இந்த வரைவிலக்கணத்தினை ஆழமாக சிந்திப்போமேயானால் நம்மில் எத்தனை பேர் உண்மையான சுகநலத்துடன் வாழ்கின்றோம் என்பது கேள்விக்குறியாகும். நாம் அனைவரும் சிறந்த சுகவாழ்வு நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் ஊடாக எம் உடல், உள, சமூக, ஆன்மீக நன்னிலையை சிறந்த முறையில் பேணி சுகதேகியாக எம்மை வைத்திருப்பதுடன் குடும்பத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் சமூகத்திற்கும் சிறந்த பங்களிப்பை வழங்க முடியும். இதனை சற்று ஆழமாக பார்ப்போம்.

எமது ஆரோக்கியத்திலே உண்ணும் உணவிற்கு பெரும் பங்கு உண்டு. சாதாரணமாக நாம் உள்ளெடுக்கும் உணவில் அனைத்துக் கூறுகளும் அடங்கியிருந்தாலும் அதனை சரியான அளவில் சரியான நேரத்தில் நாம் உள்ளெடுப்பதும் இல்லை. உதாரணமாக மாப்பொருளை மிக அதிகளவிலும் கனியுப்புக்கள், விற்றமின்கள், புரதம் என்பவற்றை தேவையை விட மிகக் குறைவாகவும் உள்ளெடுக்கின்ற நிலை எமது சமூகத்திலே காணப்படுகின்றது.

அதனைவிட தேவையற்ற கொழுப்புணவுகளை சுவைக்காகவும் வசதிக்காகவும் உண்ணும் போக்கு அதிகரித்து வருகின்றது. துரித உணவுகள் (Fast foods) மக்களிடையே தற்காலத்தில் பிரபலமாகியுள்ளன. அந்த உணவுகள் உடலுக்கு மிகுந்த கேட்டினை விளைவிக்கின்றன. இவற்றில் கொழுப்பு, உப்பு, சீனி என்பன தேவையை காட்டிலும் மிக அதிகமாகவும் அதனைவிட உடலுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயன பதார்த்தங்களும் அடங்கியுள்ளன.

உண்ணக்கூடாது என பெரிய பட்டியலே சொல்லப்படுகின்றபோது எவற்றை உண்ணலாம் என்கின்ற கேள்வி மனதில் எழுகின்றது அல்லவா? அதற்கு எம் முன்னோர்கள் சரியான வழியைக் காட்டி இருக்கின்றார்கள். அதனை நவீன மருத்துவ விஞ்ஞானமும் ஆரோக்கியமான உணவு முறைகளுக்கான பரிந்துரையில் அங்கீகரித்து நிற்கின்றது.

ஆரோக்கியமான நிலைக்கு ஒருவர் தினமும் 500g (0.5kg) பழவகைகள், மரக்கறிகளை உள்ளெடுத்தல் இன்றியமையாத தேவைப்பாடாகும் என இலங்கை சுகாதாரத் திணைக்களம் பரிந்துரைக்கின்றது. இதன்மூலம் பிற்காலத்தில் அல்லது நாற்பதுகளில் ஏற்படக்கூடிய தொற்றாநோய்களில் இருந்து விடுபடுவதற்கான வாய்ப்பு பன்மடங்கு அதிகரிக்கும் என ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. நாளாந்தம் உணவில் இலைவகைகளை உள்ளெடுத்தல், அங்கங்களின் நுண்ணிய தொழிற்பாட்டிற்கும், சிறார்கள், பெண்கள் இரத்த சோகையை இல்லாமல் செய்வதற்கும் அத்தியாவசியமானது. குறிப்பாக எமது பிரதேசங்களில் இலகுவாகக் கிடைக்ககூடிய முருங்கை இலை, இரும்புசத்துக் குறைபாட்டினை நிவர்த்தி செய்ய சிறந்த நிவாரணியாகக் காணப்படுவதோடு பல நோய்களில் இருந்து எம்மை பாதுகாக்கின்றது. அன்னையர்கள் பிட்டு அவிக்கும் போது தேங்காய்ப்பூ போன்று முருங்கையிலையை இட்டு அவிக்கும் நடைமுறையை கொண்டு வருதல் முழுகுடும்பத்திற்கும் நன்மை பயக்கும்.

சிறுதானியங்களான பயறு, உழுந்து, குரக்கன், கௌப்பி, கடலை என்பவற்றினை காலை, மாலை ஆகாரங்களிலே அதிகளவில் சேர்த்து கோதுமை மா பண்டங்களிற்கு இயன்றளவு விடை கொடுத்தல் நன்று. பனம் பொருட்கள் நம் ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டிய மிகப்பெரிய கொடை ஆகும். ஒடியல், களி, பிட்டு, கூழ் போன்ற உணவுகள் நம்மிடம் தற்போது அருகிவரும் பாரம்பரிய உணவு பழக்கங்கள் புத்துயிர் பெறவேண்டியது நாளையும் நலமுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ இன்றியமையாத தேவையாகும். காளான் உணவுகளும் புரதம் மிகுந்த ஆரோக்கிய உணவுகளாகும். சிறிய மீன்கள் உள்ளிட்ட கடல் உணவுகளும் புரதத் தேவைக்கு முக்கியமானதாக காணப்படுவதோடு ஆரோக்கியத்திலும் பங்குவகிக்கின்றது. ஆனால் இறைச்சி வகைகளை அதிகளவில் உள்ளெடுத்தல் உடல் ஆரோக்கியத்திற்கு உகந்தது அல்ல. அதிலும் குறிப்பாக இன்று மக்களிடையே பிரபலமாகியுள்ள புறொயிலர் கோழி இறைச்சி, இதற்கு பயன்படுத்தப்படும் மருந்துகள், ஓமோன்கள் என உடலுக்கு மிகுந்த தீங்கை விளைவிக்கின்றது என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

திண்ம உணவுகளைப் போன்று நாம் உள்ளெடுக்கும் திரவ உணவுகளான பானங்கள் தொடர்பாக மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். மிகுந்த வெப்ப வலயத்தில் வாழும் நாம் மிக அதிகளவில் நீர் ஆகாரங்களை உள்ளெடுத்தல் அவசியமானது குறிப்பாக பழச்சாறுகளை அதிகளவில் பருக வேண்டும் இலைகஞ்சி, கூழ் என்பன மிகச் சிறந்த திரவ உணவுகள் ஆகும். பால், தயிர், மோர் போன்ற பாற்பொருட்களும் ஆரோக்கியத்திற்கு சிறந்தவையே. எம் முன்னோரின் மிகச்சிறந்த கண்டுபிடிப்பான பழஞ்சோற்று தண்ணீரை கண்டு உலகமே வியக்கின்றது. அதில் அத்தனை சிறப்பான ஊட்டசத்துக்களும் சுகவாழ்வுக்கான அம்சங்களும் அடங்கி இருக்கின்றன.

இதே நேரம் மென்பானங்களை அவற்றினால் வரும் ஆரோக்கிய கேட்டினை உணர்ந்து தவிர்ப்பது நலமானது தேனீர், கோப்பி போன்றவற்றையும் இயன்றளவு குறைத்துகொள்ள வேண்டும். குறைந்தபட்சம் உணவிற்கு அண்மையாக எடுத்தலை தவிர்ப்பதோடு சீனியின் அளவை மிகவும் குறைக்கவோ அல்லது அதற்கு பதி லாக பனங்கட்டியை பாவிக் கவோ முன்வர வேண்டும். எந்தவொரு மது வகையையும் பாவிக்காமல் விடுவதோடு எமது குழந்தைகளுக்கு மது போதையற்ற சூழலை வழங்க முன்வர வேண்டும்.

அடுத்து திண்ம, திரவ உணவுப் பழக்கம் போன்று எமது உடலின் ஆரோக்கியத்தில் முக்கியமான விடயம் உடற்பயிற்சி ஆகும். தினமும் முப்பது நிமிடம் உடற்பயிற்சிகளில் ஈடுபடுவோருக்கு தொற்றா நோய்களான சலரோகம், உயர்குருதி அழுத்தம் (பிரசர்), இதய நோய்கள் வருவதற்கான வாய்ப்புக்கள் குறைவானதாக காணப்படுகின்றது என்பது சுகாதார திணைக்களத்தின் மற்றுமோர் பரிந்துரையாகும்.

நடைபயிற்சி, நீந்துதல், யோகாசனம் செய்தல், விளையாட்டுக்களில் ஈடுபடுதல், சைக்கிள் ஓடுதல், தோட்டம் செய்தல் என்பன மிகச்சிறந்த உடற்பயிற்சிகளாகும்.

மேற்கூறப்பட்டவை சுகநலத்தில் எல்லா நிலையிலும் பங்களித்தாலும் உடல் நன்னிலையிலேயே கூடுதலான பங்களிப்பினை செய்கின்றது. ஆகவே உள, சமூக, ஆன்மீக நன்நிலை என்னும் சுகநலத்தின் ஏனைய கூறுகளுக்கும் எமது செயற்பாடுகள் அதிகம் தேவைப்படுகின்றன. மிகவும் வேகமாக இயங்குகின்ற உலகில் இதனை சிந்திப்பதற்கு கூட பலர் நேரமற்று இருக்கின்றார்கள், இறுதியில் நோய்வாய்படும் போதே தங்களின் அறியாமையை எண்ணி வருந்துகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திற்கு ஆரோக்கியத்தை வழ ங்க வேண்டியது எமது மற்றுமோர் தலை யாய கடமை ஆகும். தியானம், ஆலய வழி பாடு, பிடித்த நல்ல காரியங்களில் ஈடுபடல், இயற்கை எழில் கொஞ்சும் இடங்களிற்கு சென்று வருதல் எமது சூழலை பசுமையாக பேணல் மன நெருக்கீடுகளை வெற்றிகர மாக கையாளும் வழிமுறைகளை எமக்கு நாமே வகுத்துக்கொள்ளல், அறம் சார்ந்த வாழ்க்கை முறை, புகை, போதைப்பொருள் பாவனை அறவே இல்லாது இருத்தல் என் பவை உள ஆரோக்கியத்திற்கான சிறந்த மார்க்கங்களாகும்.

மனிதன் பல சந்தர்ப்பங்களில் சமூக விலங்கு என்பதை மறந்து விடுகின்றான். சமூக நன்னிலைக்கு ஊருடன் கூடி வாழ் ந்து அதன் மேம்பாட்டில் உழைத்தலும் சக மனிதர்களோடு நல்லுறவைப் பேணலும் இன்றியமையாத தேவைப்பாடாகும். ஆன் மீக நன்னிலையில் வெறுமனே வழிபாடு மட்டுமின்றி உள்ளார்ந்தமாக எம்மை நாம் புரிந்து கொள்ளலும் மற்ற உயிரினங்களை துன்பப்படுத்தாமல் வாழுதலும் பிறர்நலன் காக்கும் நற்கருமங்களைச் செய்ய எம்மில் எழும் ஆழமான உந்துதலும் பங்களிப்பைச் செய்கின்றன.

மேற்காணும் சுகவாழ்வுச் சிந்தனை கள் ஓர் தாயின் கருவறையிலிருந்தே உதய மாக வேண்டும் குடும்பத்தின் சகல பரிணா மங்களிலும் எதிரொலிக்க வேண்டும்.

குறிப்பாக ஓர் வீட்டில் இயற்கை வழி சுகவாழ்வுத் தோட்டம் ஒன்றில் அனைத்து அங்கத்தவர்களும் ஈடுபடுவார்களேயா னால் மருந்தற்ற ஆரோக்கியமான மரக்கறி, பழவகை, இலைக்கறிகள் கிடைப்பது மட்டு மன்றி சிறந்த உடற்பயிற்சியும் கிடைக்கும். உள்ளத்திற்கு புத்துணர்வு கிடைக்கும் ரம்மி யமான பசுஞ்சூழலும், சிறந்த பொழுதுபோக் கும், டெங்கு போன்ற தொற்றுநோய்களை தவிர்க்கக்கூடிய கழிவு முகாமைத்துவமும் பக்க விளைவாகக் கிடைத்து எம்வாழ்வை இனிமையாக்கும்.

ஆதலினால் அன்பானவர்களே நாளையும் நலமுடன் நாம் நோய்களி லிருந்து விடுபட்டு வாழ சிறந்த சுகவாழ்வு சிந்தனைகளை நம்முடன் உள்வாங்கி நடைமுறைப் படுத்துவோம்.



**35 வயதுக்கு மேற்பட்ட சகலரும் எம்மை சல ரோகம், உயர்குருதி அழுத்தம் (பிரசர்) கொலஸ்ரோல், சில புற்றுநோய்களிற்கான ஆரம்ப கட்ட சோதனைகளிற்கும் எமது உயரத்திற்கு ஏற்ப நிறை உள்ளதா என்பதையும் அருகிலுள்ள வைத்தியசாலைகளிலோ சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலோ சோதித்து அறிவோம்.**

**மீண்டும் உணவே மருந்து என்கின்ற சித்த மருத்துவ தத்துவத்தை மறவாது இருப்போம். இயற்கையை நேசிக்கும் மனித நேயமிக்க அறச்செயல்களால் எம்மையும் எம்மை சூழவுள்ளவற்றையும் அழகாக்கி நாளையும் நலமுடன் வாழ்வோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் சக்தியே கூட்டுறவின் பலம்

**திரு.தி.சுந்தரலிங்கம்,**
தலைவர், யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை,
தலைவர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.

> **"சமூகநீதி வழங்கி, தொழிற்பிரச்சினைகளை மாற்றியமைத்து எல்லா நலன்களும் பெற வழிவகுப்பது கூட்டுறவு"**

என ஜான் ஸ்டுவர்ட்மில் அவர்கள் வரைவிலக்கணப்படுத்தியுள்ளார். இக் கூட்டுறவு அமைப்பானது முதலாளித்துவத்திலிருந்தும் சமூகவுடமையி லிருந்தும் வேறுபட்டது. இவ்விரு கோட்பாடுகளுக்கும் நடுவழியாக அது அமைந் திருக்கின்றது. இவை இரண்டிலுமிருந்தும் வேறுபட்ட, கூட்டுறவுக்கே உரித் தான தனிக்கோட்பாடுகள் உண்டு. அதற்கென அமைந்த அறநெறிகளும் உண்டு. சமூக கல்வி சார்ந்த நோக்கங்களும் உண்டு. திட்டவட்டமான வணி கக் கொள்கைகள் உண்டு. அறஞ்சார்ந்த வியாபாரத் திறனையும், சீர்திருத்திய உளப் பாங்கையும் இணைக்கமுயலும் புனித நோக்கே கூட்டுறவு எனலாம்.

தன்னலமற்ற உயர் இலட்சியவாதிகளின் சிந்தனைகளைப் பின்பற்றி 1844 ஆம் ஆண்டில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கமாக இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் இன்று உலக இயக்கமாக மாறியுள்ளது. இதன் வளர்ச்சியின் சின்னமாக 1895ம் ஆண்டு அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனம் உருவாகியது. இந்நிறுவனத்தால் 1937ம் ஆண்டு முதன்முதலாக கூட்டுறவுக் கொள்கைகள் பிரகடனப்படுத்தப்பட்டது. காலத்தின் மாற்றங்களுக்கு உட்பட்டு இக் கூட்டுறவுக் கொள்கைகள் திருத்தம் செய்யப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1966ம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. மீண்டும் உலகின் வேகமான மாற்றங்களின் பொருட்டு கூட்டுறவுக் கொள்கைகளும் திருத்தங்கள் செய்யப்பட்டு 1995ம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கைகளே இன்றும் நடைமுறையிலுள்ளது.

உலக இயக்கமான கூட்டுறவு இயக்கம் 1906 ஆம் ஆண்டு இலங்கையில் கடனுதவு சங்கமாக அறிமுகமாகியது. 1912ம் ஆண்டு முதலாவது கடனுதவு சங்கம் சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல சங்கங்கள் தோற்றம் பெற்றன. 1927 ஆம் ஆண்டளவில் இலங்கையில் நுகர்வோர் கூட்டுறவுச்சங்கம் அறிமுகமாகியது. 1942ம் ஆண்டு இரண்டாவது உலக மகாயுத்தத்தை தொடர்ந்து ஏற்பட்ட நுகர்ச்சி பொருள் தட்டுப்பாடு காரணமாக பங்கீடு செய்யும் நோக்கில் பண்டகசாலை சங்கங்கள் வேகமாக தோற்றம் பெற்றது. தொடர்ந்து விளைபொருள் உற்பத்தி விற்பனை சங்கங்கள் வளர்ச்சி பெற்றன. 1958 ஆம் ஆண்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தொடர்ந்து இலங்கை கூட்டுறவு இயக்க வளர்ச்சியில் யாழ் மாவட்டம் தனக்கென தனியான இடத்தை பெற்றுக்கொண்டது. பல்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள், சமாசங்கள், கூட்டுறவுச் சபை என்பன வளர்ச்சியடைந்தது.

யாழ் மாவட்ட கூட்டுறவு வளர்ச்சியில் தீவகப்பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியும் சிறப்பானதாக அமைந்திருந்தது. தீவகத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த பண்டகசாலைச் சங்கங்கள் இணைக்கப்பட்டு தீவுப்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கமாக உருவாக்கப்பட்டு இதன் தலைமைப் பணிமனை ஊர்காவற்றுறையில் அமைக்கப்பட்டது. தொடர்ந்து கூட்டுறவுச் சங்க அமைப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அமைய அவை பிரிக்கப்பட்டும் மீண்டும் இணைக்கப்பட்டும் செயற்பட்டன. இறுதியாக 1977-03-21ம் திகதி பிரிக்கப்பட்டு ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு என செயல்பட தொடங்கியது.

தீவகச் சங்கங்கள் யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்த நிலையில் தீவகத்தில் இருக்கின்ற நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு மக்களுக்கான நுகர்ச்சித் தேவையை நிறைவேற்றுவதற்காக தீவக பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஒன்று உருவானது. அதன்பின்பு மக்கள் 1996 ஆம் ஆண்டு மீளகுடியேறிய நிலையில் ஏற்கனவே இங்கு இருந்த சங்கங்களை இயங்க அனுமதி வழங்கியதால் தீவக சங்கம் என செயல்பட்ட சங்கத்தை அனலைதீவு சங்கமாக செயல்பட அனுமதித்தார்கள்.

காலத்திற்கு காலம் ஏற்பட்ட இடர்கள், போராட்டங்களின் போது நாட்டில் உருவான உணவுத் தட்டுப்பாட்டை சீர்செய்யும் நோக்காக பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் அரசாங்கத்தின் பொருட்களை பங்கீடு செய்யும் நிறுவனமாக பணியாற்றி வந்தன. குறிப்பாக கடந்த முப்பது ஆண்டுகால போர்ச் சூழலில் எமது பிரதேசத்தில் பட்டினிச்சாவு என்பது ஏற்படாமல் மக்களை பாதுகாத்ததில் சங்கங்களின் பணி இன்றியமையாததாக இருந்தது.

கூப்பன் காலம் தொடக்கம் நீண்டகாலமாக ப.நோ.கூ.சங்கங்கள் அரசாங்கத்தின் நிவாரண விநியோக முகவராக பயணித்ததன் காரணமாக மக்கள் மத்தியில் ப.நோ.கூ.சங்கம் என்றால் கூப்பன் கடைதான் என்ற மனப்பதிவானது இன்று வரை மாற்றமுடியாத ஒன்றாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிரதேசத்திலுள்ள மிகப்பெரிய சமூக நிறுவனமாக ப.நோ.கூ.சங்கங்கள் அமைந்துள்ளன. இச்சங்கங்கள் தமது தொழிற்பரப்பிலுள்ள அங்கத்தவர்களால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனமாகும். இங்கு மக்கள் சக்தியே மிகப்பெரிய பலம். இது மக்களால் பெரிதும் உணரப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்று எமது மாவட்டம் மட்டுமன்றி இலங்கை முழுவதுமாக நோக்குவோமானால் ப.நோ.கூ.சங்கங்கள் பல வினைத்திறனாக செயல்பட முடியாத நிலையில் உள்ளன. போதிய மனித வளம், நிதிவளம் இன்றி தொடர்ச்சியாக நட்டமடைந்து வரும் நிலை காணப்படுகிறது. இவற்றுள் சிறப்பாக இயங்கும் சங்கங்களின் வரிசையில் ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கமும் ஒன்று என்பதை குறிப்பிடுவதில், அதன் நீண்ட கால தலைவர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது சங்கம் மென்மேலும் வளர்ச்சியடைந்து எமது பிரதேச சமூக, பொருளாதார, கலாச்சார மேம்பாட்டிற்கு பணியாற்ற வல்ல நிறுவனமாக உயரவேண்டுமாயின் எமது மக்களின் ஆதரவே பெரிதும் வேண்டப்படுகிறது.

ஊர்காவற்றுறை பிரதேசத்தை பொறுத்தவரை எமது பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் மட்டுமன்றி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் எனப் பல்வேறு வகையான கூட்டுறவு நிறுவனங்கள் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றன.

எமது கூட்டுறவு நிறுவனங்கள் பல கூட்டுறவாளர்கள் பிரதிபலன் கருதாது சேவைசெய்து வளர்த்த நிறுவனங்களாகும். இந்நிறுவனங்கள் கொண்டுள்ள காணி, கட்டடம், நிதி போன்ற அனைத்து சொத்துக்களும் எமது பிரதேச உடமைகளாகும்.

எமது பிரதேச மக்கள் கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தவராக இணைந்து காலத்திற்கு காலம் நிர்வாகத்தில் பங்கெடுத்து சேவை வழங்கி கூட்டுறவை வளர்க்க முன்வர வேண்டும். மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்ற கூட்டுறவு நிறுவனங்களை தமது நிறுவனமாகக் கருதி உரிமையுடன் சங்கத்தை நாடி வர வேண்டும்.

நுகர்ச்சி சேவை, கிராமிய வங்கி சேவை உற்பத்தி தொடர்பான சேவைகள், உள்ளூர் வள மேம்பாடு, விவசாய அபிவிருத்தி, கடல்வள மேம்பாடு, பனை தென்னை வள பயன்பாடு என எல்லா சேவைகளையும் விரிவுபடுத்த மக்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்திற்கு சொந்தமான சின்ன மூளாய் வைத்தியசாலை எமது மக்களுக்கு சிறந்த சுகாதார சேவை வழங்கி வந்தது. இது தற்போது முற்றாக செயலிழந்துள்ளது. இவ்வாறு தொழிற்படாத பகுதிகளை தொழிற்பட செய்யவும், புதிய முயற்சிகளை உருவாக்கவும் கூட்டுறவை பயன்படுத்தி எமது கிராமிய பொருளாதாரத்தை வளர்க்கவும் மக்கள் தங்கள் பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி நிறைவு செய்கின்றேன்.

**வாழ்க கூட்டுறவு! வளர்க அதன் பணி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாட்டு மோகமும் சட்டரீதியற்ற செயற்பாடுகளும்


**V.R.C. ஜோண்சன்**
கிராம அலுவலர்


**இன்றைய காலத்தில் வெளிநாட்டு மோகம் என்பது அவரவர் வாழ்க்கையுடன் ஊறிப்போன ஒன்றாகும். இவ் வெளிநாட்டு பிரயாணங்களும், குடியேற்றங்களும் எமது நாட்டிற்கும், குறிப்பாக எமது தமிழ் சமூகத்தினரிற்கும் பெரிதும் நன்மைகளினை ஈட்டித் தருவதாக இருந்த போதிலும் அதற்கு அப்பால் எமது நாட்டிற்கும் இங்கு வாழ் எம் மக்களிற்கும் பல்வேறு பாதிப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது.**

எமது நாடு ஒரு அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக இருப்பினும் கல்வி அறிவைப் பொறுத்த வரையில் மிகவும் உயர்நிலையில் இருப்பது மகிழ்ச்சி தரும் ஒன்றாகும். எமது கல்வியாளர்களின் திறமை பல்வேறு நாடுகளில் அந் நாட்டின் சக்தியாக வெளிப்படுகின்றது. இது எமது நாட்டிற்கு அந்நியச் செலா வணியைப் பெற்றுத் தருவதில் முக்கிய பங்குவகித்தாலும் எமது நாட்டின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும் காரணியாகவும் காணப்படுகின்றது. இவ்வாறு வெளிநாடு எனக் கூறி பெரும்பாலானவர்கள் ஐரோப்பிய நாடுகளிற்கே செல்கின்றனர். இவ்வாறு ஐரோப்பிய நாடுகளிற்கு செல்வதற்கு மூல காரணங் களாக உழைப்பிற்கான ஊதியம் எமது நாட்டிலும் பார்க்க அந்நாடுகளில் அதிகமாகக் காணப்படுவதுடன், ஐரோப்பிய நாட்டில் கிடைக்கும் சுதந்திரம், வெளிநாடு எனக் கூறும் கௌரவம், அந்நாடுகளில் கிடைக்கும் சலுகைகள் மற்றும் எமது நாட்டின் போர்த்தாக்கம் எனப் பல்வேறு காரணங்களைக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலங்களில் வருமானம் பெறும் காரணத்தினை வெளிப்படையாகக் கூறி அங்கு சென்றவர்கள் அங்கு கிடைத்த சுய இலாபங்களினால் குடும்பத்தினரையும் தம்முடன் அழைத்து தமது கல்வி அறிவைக் காரணமாக்கி அந்நாட்டுப் பிரஜாவுரிமை பெற்று நிரந்தரமாக குடியேறினர். இவ்வாறு குடியேற்றங்களின் சொகுசான வாழ்க்கை முறையும், சரளமான ஆங்கிலப் பேச்சும் ஏனையவர்களின் மனநிலைகளிலும் அவ்வாறு தாமும் வாழ முடியுமா? என்னும் ஏக்கங்களை ஏற்படுத்தியது பலருக்கு அவர வரின் அறிவார்ந்த ஆற்றல் இன்மை முட்டுக்கட்டையானது.

இவ்வாறிருக்க எமது நாட்டின் போரும், ஐரோப்பிய நாடுகளில் அவர்க ளிற்கு அடைக்கலமும் வாய்ப்பாக மாறி பல குடும்பங்கள் வெளிநாடுகளில் குடியேறின. இதில் உண்மையான பாதிப்பில் குடியேறிய வர்கள் சிலர். பலர் தம்மை பாதிப்படைந்தவ ராகப் பொய்யாகக் காட்டி, அனுதாபங்க ளைப் பெற்று அந்நாட்டு நிரந்தர வாசிகளா னவர்கள். இவ்வாறானவர்கள் அந்நாடு களில் சட்டரீதியற்ற முறைகளிலும், சுற்றுலா விசாக்களிலும் சென்று அடைக்கலம் கோரிக் குடியேறியவர்கள். இவர்களைப் பொறுத்தவரையில் எமது நாடு வன்முறை யான நாடு. இங்கு தம்மால் வாழ முடியாது எனப் பொய்யான காரணங்களைக் காட்டிக் குடியேறியவர்கள். உண்மையான பாதிப் புற்ற பல தமிழர்களின் எதிர்காலக் குடியேற் றங்களிற்கு பங்கம் விளைவித்தவர்கள். பிறந்த தாய் நாட்டைப் பழி கூறி குடியேறும் இவர்கள் தமது தாயை மதிக்கத் தெரியாத வர்கள்.

இவ்வாறு அதிகரித்த வெளிநாட்டு மோகம் காரணமாக கள்ள விசாக்களில் சென்ற இவர்கள் ஒரு தருணத்தில் மிகவும் ஆபத்தான பயணங்களிலும் சென்று ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைந்தார் கள். வேறு நபர்களின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தியும், சட்ட ரீதியற்ற கடல் வழிப் பாதையிலும் சென்றடைந்த இவர்கள் பல இலட்சம் பணம் செலவழித்தே இவ்வாறு சென்றடைகின்றனர். இது 10 தொடக்கம் 50 இலட்சங்கள் வரை செலவிடப்படுவதாக கூறப்படுகிறது. எனினும் பலரால் உரிய நாடுகளினைச் சென்றடைய முடிவதே யில்லை. காரணம் விமான நிலையங்களி லும், நடுக்கடலிலும் பிடிபட்டு சிறை அனுப விப்பதும், முகவர்களிற்கு வழங்கப்பட்ட பல இலட்சங்கள் இழக்கப்படுவதுமென பல் வேறு துயரங்களை அனுபவித்து வருகின் றனர். இன்னும் பலர் பாதி வழியிலேயே உயிரையும் விடுகின்றனர். இவ்வாறு பல கஸ்ரங்களுடன் வெளிநாட்டு மோகம் தேவைதானா? இவர்கள் தமது வாழ்க்கை யின் அர்த்தம் தெரியாது வாழ நினைக்கி றார்கள். இன்று வீதியால் ஒரு அவசியமான தேவையின்றி அதிவேகத்தில் வாகனம் செலுத்துபவர்களும், இவர்களும் ஒரே வர்க் கத்தினர். காரணம் இவர்களின் பயணத் தின் முடிவு நிரந்தரமற்றது. இவர்களின் பயணம் விபத்து நிறைந்தது. தம்மால் இலக்கை அடைவது ஆபத்துக்களும் நம் பிக்கையற்றதும் எனத் தெரிந்தும் அதனை நோக்கிச் செல்லும் முட்டாள்கள்.

இது எமது நாட்டுக்கு அந்நியச் செலா வணியைத் தருவதனால் அரசும் சில தவறு களிற்கு சட்டங்களின் இறுக்கங்களினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளர்த்தி இருப்பது போல் தோன்றுகிறது. சில தவறுகளினை கண்டும் காணாமலும் விடுவது போலவும் எண்ணத் தோன்று கிறது. இன்னும் எமது நாட்டில் வாழ முடி யாது என்று சென்ற பலர் வேறுநாட்டுப் பிரஜாவுரிமை பெற்றபின் அந்நாட்டு விடு முறையில் சுற்றுலாப்பயணி போல எம் நாட்டிற்கு மீளவும் வந்து செல்கிறார்கள். எமது நாட்டினருக்கே உரித்தான தேசிய அடையாள அட்டையினை இரட்டைப் பிரஜா வுரிமை பெறாது எமது நாட்டிற்குள் பயன் படுத்துகிறார்கள். எமது நாடுகளில் இருந்து வெளியேறிய இவர்கள் எம் நாட்டிற்காகவும், எம் நாட்டு மக்களின் விடிவிற்காகவும் போராடுவதாக கூறுகிறார்கள். அவர்கள் ஏன் வேறு நாட்டுப் பிரஜாவுரிமையுடன் போராட வேண்டும்? இந்நாட்டுப் பிரஜாவுரி மையுடன் போராடலாம் தானே. விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இவர்கள் போராட்டம் இருப்பின் ஏன் அந்நாட்டு நிரந் தர வாசிகளாக மாறுகிறார்கள்? மீளநாட்டிற் குத் திரும்பும் எண்ணம் ஏன் இவர்களிற்கு இல்லை? வளர்ச்சி அடைந்த நாடுகள் வளர் முக நாடுகளிற்கு ஆயுதங்களை வழங்கி அவர்களை போராடத் தூண்டி அந் நாட் டினை வளரவிடாது முடக்கும் எண்ணம் போன்று இவர்களும் சில கிளர்ச்சியைத் தூண்டி தமது தஞ்சங்களை உறுதிப்படுத் திக் கொள்கிறார்கள். ஏன் இது எம் பல தலை வர்களிற்கு தெரிவதில்லையா?

இவர்களை தடுக்க முடியாதா? சட்டங் களை இறுக்கமாகப் பின்பற்றி சட்டரீதியற்ற வெளிநாட்டுப் பிரயாணங்களை தடுக்க முடியாதா? வேறு நாடுகளில் இருந்து எமது மக்களையும், வளங்களினையும், சொத் துக்களையும் பயன்படுத்தும் நிலையை மாற்ற முடியாதா?

க்ரீஸில் கி.மு 348-ம் ஆண்டுகளில் வாழ்ந்த தத்துவஞானி. பிளாட்டோவின் தத்துவங்கள்தான் 2400 ஆண்டுகளாக உலகத்தை ஆண்டு வருகிறது. சாக்ரடீஸின் மாணவரான பிளோட்டோ மேற்கத்திய அறிவியல், வாழ்வு மற்றும் கணித தத்துவத்தில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியவர். கண்மூடித்தனமான மத நம்பிக்கைகளை உடைத்ததில் பிளோட்டோவின் தத்துவங்களுக்கு பெரும் பங்கு உண்டு.

"உள்ளடக்கத்துடன் வாழ்வதே மிகப்பெரிய செல்வம். நல்லவர்களுக்கு சட்டங்கள் தேவையில்லை, ஏனெனில் அவர்கள் பொறுப்புடன் வாழ்வார்கள். கெட்டவர்கள் தங்களுக்கே உரிய சட்டத்தை உருவாக்கிக்கொள்கிறார்கள்"
என்பது பிளாட்டோவின் புகழ் பெற்ற தத்துவம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலையின் ஆரம்பமும் தற்காலமும்

**திருமதி. ச.பரமேஸ்வரன்**
**யா/கரம்பொன் சிறிய பு.ம.ம.வி.**
**கரம்பொன்**

ஆரம்பகால மனிதன் தனது செயற்பாடுகளை சைகைகள் மூலம் வெளிக்காட்டினான். துன்பத்தின் போது ஓலமிட்டும் மகிழ்ச்சியில் ஆரவாரித்தும் பயத்தின் போது கூக்குரலிட்டும் தமது மொழியை வெளிப்படுத்தியதன் பயனாக சிந்துவெளி நாகரிக காலத்தில் "நிஸரி" என்ற ஸ்வரம் சாமகானத்தில் ஒலிக்கப் பட்டது.

திருஞானசம்பந்தர் மூன்று வயதில் "தோடுடைய செவியன்" என்ற தேவாரம் பாடியமையும் சம்பந்தருக்கு இறைவன் பொற்றாளம் வழங்கியமை யும் பண், இராகம், தாளம் இருந்தமைக்கு ஆதாரமாக உள்ளது. இராவணன் சாமகானம் பாடி இறைவனை மகிழ்வித்தமைக்கு இலக்கிய ஆதாரங்கள் உள்ளன.

சங்க காலத்திலிருந்த உலகியல் சார்ந்த இசை பல்லவராட்சிக் காலத்தில் பக்தி இசையாக மறுமலர்ச்சி கண்டது. நாயன்மார்கள் இசையை தெய்வ வழிபாட்டுடன் இறுகப்பிணைத்துள்ளனர். கலைவளம் பெற்று விளங்கிய பல்லவர் காலத்தில் இசைமட்டுமன்றிச் சிற்பம், நடனம், ஓவியம் முதலிய நுண்கலைகளும் உயர்நிலை அடைந்தமைக்கு பல ஆதாரங்கள் உள்ளன. பல்லவர்கள் பெருங்கோயில்களில் தருக்க மண்டபம், நடன மண்டபம் முதலியனவற்றை அமைத்தமை சமயக்கல்வி, சாஸ்த்திரக்கல்வி, இசை, நடனம் முதலியன வளர்வதற்குகாரணமாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீத மும்மூர்த்திகளான தியாக ராஜ ஸ்வாமிகள், சியாமாசாஸ்திரிகள், முத்துஸ்வாமி தீட்ஷிதர் ஆகியோர் வாழ்ந்த காலத்தில் குருகுலவாச முறை வழக்கத்தில் இருந்தது. இக் காலத்தில் சங்கீத வித்தை தழைத்தோங்கவும் தஞ்சாவூர் ஓர் இசைப் பீடமாகத் திகழவும் இவர்கள் காரணமாக இருந்தார்கள்.

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலமோகம், மேலைத்தேய பண்பாட்டு மோகம் முக்கியத் துவம் பெற்ற காலத்தில் கர்நாடக இசை மத்திய வகுப்பினர்களிடமோ அல்லது பாடசாலைக் கலைத்திட்டத்திலோ குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறாது, சாதாரண மக்களாலேயே ஆதரிக்கப்பட்டு வந்தது எனினும் 1931 ஆம் ஆண்டு வடஇலங்கை சங்கீத சபை இசை வளர்ச்சியில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் பாடசாலைக் கலைத்திட்டத்தில் இசை ஓர் பாடமாக சேர்க்கப்பட்டது. அதிலும் குறிப்பாக 1978ம் ஆண்டு அழகியற்கல்வியில் சங்கீதம் ஒரு கட்டாய பாடமாகச் சேர்க்கப்பட்டது. பாடசாலைக் கலைத்திட்டத்தில் சங்கீத பாடத்திற்கமைவாக கலைத்திட்டங்களை தயாரிப்பதிலும், ஆசிரிய கைநூல், மேலதிக வாசிப்புநூல், அறிவுரைப்பு வழிகாட்டி போன்றவற்றைத் தயாரித்து வெளியிடுவதிலும் தேசிய கல்வி நிறுவகத்தின் அழகியற் பிரிவு பெரும்பங்காற்றி வருகிறது.

தற்போது இசைக்கலையானது பாடசாலைகளில் மட்டுமன்றி பல்கலைக்கழகத்திலும் சிறப்பு பட்டத்திற்குரிய உயர் அந்தஸ்தினைப் பெற்றுள்ளது. யாழ்.பல்கலைக் கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பிரிவில் சங்கீத டிப்ளோமா, இசைக்கலை மாணி போன்ற கற்கை நெறிகள் நடைபெறுகின்றன. கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள மட்டக்களப்பு விபுலானந்த இசை, நடனக் கல்லூரியிலும் இசைக் கற்கை நெறிகள் நடைபெறுகின்றது. இவ்வாறே இசையானது சிறப்பு பாடமாகவும், பொதுப்பாடமாகவும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் கற்பிக்கப்பட்டு வருவதோடு ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

வடஇலங்கை சங்கீத சபையோடு யாழ் இரசிக ரஞ்சனாசபா, அகில இலங்கை இசை ஆசிரியர் சங்கம், இசைப்பேரவை, இசைக்கலைஞர் சம்மேளனம், சங்கீத வித்துவசபை, அண்ணாமலை தமிழிசை மன்றம், அளவெட்டி இசைக்கலை மன்றம், முத்தமிழ் மன்றம், இலங்கை சங்கீத சபை, யாழ் இளங்கலைஞர் மன்றம், திருகோணமலை தட்சணாகான சபா, கண்டி நுண் கலை மன்றம், மட்டக்களப்பு சங்கீத சபை கொழும்பு, சைவமங்கையர் கழக இசைப் பிரிவு போன்றவை இலங்கையின் இசை வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன.

இவ்வாறான மன்றங்கள் சபாக்கள், இசைவகுப்புக்கள், இசைப்பரீட்சைகள், இசைப்போட்டிகள், இசைவிழாக்கள் ஆகிய வற்றை நடாத்தி இசை வளர்ச்சிக்கு உதவுகின்றன.

வெகுசனத் தொடர்பு சாதனங்களான வானொலி தொலைக்காட்சி, பத்திரிகை, சஞ்சிகை போன்றவை, இசை நிகழ்ச்சிகள் கட்டுரை, விமர்சனங்களை ஒலி, ஒளி பரப்பியும், பிரசுரித்தும் இசை வளர்ச்சியில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

தற்காலத்தில் நம் நாட்டு கலைஞர்கள் பலர் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் இசைப் பணியாற்றி வருமளவிற்கு இலங்கை இசை வளர்ச்சியடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளி உலகம் காணாத வேட்டுவ இனம்...

A. J. ஞானேந்திரன்

இவர்களை "அவா" இனத்தவர்கள் என்றுதான் அழைக்கிறார்கள். இந்த இனத்தவர்கள் தங்கள் தலைகளில் கழுகுகளின் சிறகுகளை அணிந்திருப்பது வழமை. தங்களை இனங்கண்டு கொள்ளும் அடையாளம் இதுதான் என்கி றார்கள் "அவா" இனத்தவர்கள் நம்மைச் சுற்றியிருக்கும் "அவா நிறைந்த" மனிதர்களைப் போலல்லாது, அடர்ந்த அமேசன் காட்டுப் பிராந்தியத்தில் தாமுண்டு தம் வேலையுண்டு என்று வாழ்பவர்கள்!. சமீப காலங்களில் மரங்களைக் களவில் தறிக்க இங்கு மொய்க்கும் பேராசைக்காரர்களால், இவர்கள் உலகம் பெரிய தாக்கத்தைக் கண்டுவருகின்றது. தங்க வேட்டை, போதைமருந்துக் கடத்தல், மரம் அறுத்தல் என்று வேகமாகப் பணம் சம்பாதிக் கும் வழிகளில் இறங்கத் தலைப்பட்டிருக்கும் இந்தக் கும்பல், இவர்களது வாழ்வாதாரத்தை சிதைத்து, இந்த இனத்தை அடியோடு வேரறுக்கக் கிளம் பியிருக்கின்றது.

தென்அமெரிக்கா நாடான பிரேசிலின் மேற்குப்புற எல்லையிலுள்ள பேருநாட்டை ஒட்டியுள்ள மழைக்காடுதான் இந்த இனத்தவர் வதியும் இடம். பிறமனிதர்கள் கால்படாத பிராந்தியம் இது. வெளி உலகத்துடன் தொடர்பு இல்லாத 50 தொடக்கம் 100 பேர் வரையிலானவர்கள் இருப்பதாக அறியப் படுகின்றது. இத்தொகை சற்று அதிகமாகவும் இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவர்களை போல இன்னொரு தென் அமெரிக்க நாடான பரகுவேயின் சக்கோ என்ற காட்டுப் பிராந்தியத்தில் வாழ்கின்ற ஒரு குறிப்பிட்ட இனத்தவர்களும், வெளி உலகை அறியாதவர்கள். இந்திய மகா சமுத்திரத்தில் உள்ள அந்தமான் தீவில் வதிகின்ற இன்னொரு குறிப்பிட்ட இனத் தவரும், இந்தோனேஷியாவின் நியூகினி தீவின் மேற்குப்பிராந்தியத்தில் சிறுதொகை யாகக் காணப்படும் ஒரு குறிப்பிட்ட இனத்த வரும், மனிதகுலத்துடன் இதுவரையில் எந்தத் தொடர்பும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் எங்கள் பொரு ளாதாரச் சூறாவளியில் இன்னமும் அடிபட் டுப் போகாமல் எஞ்சியிருப்பவர்கள் இன் றைய நிலையில், முன்பு 600 ஆக இருந்த வர்களில் சுமாராக 100 பேர் வரையில் இந்த அவா இனத்தவர்கள் காடுகளில் வாழ்ந்து வருகிறார்கள் என்பது ஆய்வாளர்கள் கணிப்பு. அப்படியானால் இந்த மிகுதி 500 பேரும் எங்கே போனார்கள் என்ற கேள்வி எழுகிறதல்லவா? சமீப தசாப்த காலங்களில், பாதுகாக்கப்பட்ட பிராந்தியங்களிலுள்ள சில குக்கிராமங்களில் இவர்கள் நவீனத்துவ வாழ்க்கை முறைகளோடு தொடர்புடைய வர்களாக வாழ்கிறார்கள் என்று சொல்லப் படுகின்றது. 4800 சதுர மைல் விஸ்தீர ணம் கொண்ட நிலப்பரப்பு சட்டரீதியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

நான்கு ஒதுக்கப்பட்ட நிலப்பரப்புகள் இவர்களுக்காக இருக்கின்ற போதிலும், வெளிஉலகோடு தொடர்பில்லாத 60 தொடக்கம் 80 வரையிலான இந்த அவா இனத்தவர்கள் அராரிபொயா என்ற பிராந்தி யத்திலேயே வாழ்வதாகக் கண்டறிந்திருக் கிறார்கள். வில்லும் அம்பும்தான் இவர் களது வேட்டை ஆயுதங்கள். இன்னமும் தம் உணவுக்காக காட்டுத் தேனைத் தேடி அலைகிறார்கள். பபாசு என்று சொல்லப் படும் கொட்டைகளை உணவுக்காகச் சேக ரிக்கும் பழக்கம் இருக்கின்றது. காட்டின் செல்வத்தையும், இங்குள்ள நீரூற்றுகளை யும் நம்பியதாகவே இவர்கள் வாழ்வு அமைந்திருக்கின்றது. காட்டுக்கு வெளியே வந்து கிராமங்களில் வாழுகின்ற எந்த வொரு அவா இனத்தவரும் இவர்களைச் சுற்றி வாழவில்லை. அப்படி இருந்திருந் தால் கிராம வாழ்க்கை தொடங்கியிருப்பவர் களை இவர்களுடன் தொடர்புகொள்ள வைத்து, பல விபரங்களை அறிந்துகொள் ளும் வாய்ப்பு உருவாகி இருக்கும்.

இந்த அவா இனத்தவர்கள் அடிமன தில் எப்பொழுதும் ஒட்டிக் கொண்டிருக்கும் நினைவு, வேட்டை என்பதுதான். என் பிள் ளைகளுக்குப் பசியெடுத்தால், நான் அடர்ந்த காட்டுக்குள் உட்புகுந்து, உணவைத் தேடி யாக வேண்டும் என்கிறார் ஒரு அவா இனத் தவர். பெண்கள் தம் கணவன்மாரை, கை நிறைய உணவோடு, காட்டிலிருந்து திரும்ப வேண்டுமென்றே ஆசைப்படுகிறார்கள். ஆண்களும் அவர்களின் ஆசையை நிறை வேற்றி வைக்கிறார்கள். இரண்டு மீற்றர் (6 அடி) நீளமான வில்தான் எதையும் செய்து வைக்கின்றது. காட்டு மிருகங்கள் உசா ராகு முன்னர், காட்டு மரங்களை ஊடறுக் கும் அம்புகள் இரையை வீழ்த்தி விடுகின் றன.

கிராமங்களில் வாழ்பவர்கள் கதை சற்று வித்தியாசமாக இருக்கின்றது. களவில் மரங்களைத் தறித்து வீழ்த்த வருபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை தாம் வீழ்த்தி, அவர்களது நவீன துப்பாக்கிகளை பறிமுதல் செய்து விடுகிறார்கள். மெல்ல மெல்ல சுடப் பழகி, துப்பாக்கிகளைக் கையாள்வதில் நல்ல பயிற்சி பெற்றவர்களாக மாறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருந்தும் சுடுவதற்கு ரவை இல்லாத நிலையில். தங்கள் வேட்டை ஆயுதமாகப் பயன்படுத்த, வில்லும் அம்புகளும் இவர்களிடம் தயார் நிலையில் இருக்கின்றன.

காட்டு வாழ் மனிதர்கள் என்றால், அங்கு வாழ்கின்ற எதையும் உண்பார்கள் என்று நாம் நினைத்தால் அது தவறு. இவர்கள் உணவிலும் விதிவிலக்காக சில இன மிருகங்கள் பறவைகள் இருக்கின்றன. ஒரு வௌவாலைச் சாப்பிட்டால் ஒரே தலை வேதனையாக இருக்கும் என்கிறார்கள். ஹம்மிங் பட்சியின் மாமிசம் துர்வாடை கொண்டதாம். என்பதோடு, அது மிகச் சிறிய பறவையென்று இவர்கள் ஒதுக்குகிறார்கள். சிலவற்றை விரும்பித் தேடினாலும் அவை பருவகாலத்திற்குரியவை என்ற நிலையில் தேடற்கரியதாகி விடுகின்றன.

தமது உள்ளங்கைகளைப் போல, ஒவ்வொரு அவா இனத்தவருக்கும் காட்டின் ஒவ்வொரு பகுதி பற்றிய விபரங்களும் நன்றாகத் தெரியும். எங்கே பள்ளத்தாக்கு. எங்கே சிற்றாறு ஓடுகின்றது எந்தப் பாதை எங்கே கொண்டு செல்லும் என்பதெல்லாம் இவர்களுக்கு நன்றாகத் தெரிந்த சங்கதிகள். எங்கே சுவையான நல்ல காட்டுத் தேன் கிடைக்கும், எந்த மரத்தில் பழுத்த பழங்கள் கிடைக்கும், எந்த மிருகம் வேட்டைக்குத் தயார் என்ற விபரங்களை இவர்கள் சேகரித்துக் கொள்கிறார்கள்.

காடுகளிலிருந்து குக்கிராமங்களுக்கு சென்று விட்ட நூற்றுக்கணக்கான அவா இனத்தவர்களை ஒத்தவர்கள், குவாஜா ஜாரா என்ற பெயரில் அழைக்கப்படுகிறார்கள். சுமாராக இவர்களில் 5300 பேர் வரையில் இருக்கலாம் என்று ஒரு கணிப்பீடு நடத்தி இருக்கிறார்கள். இவர்கள் கிராமத்தில் அணிகின்ற உடைகளைக் களைந்து விட்டு, காடுகளுக்குள் தங்கள் இனத்தவர்களைத் தேடி அலைவதுண்டு. கிராமத்து உடைகளுடன் சென்றால் தங்களை இனங் கண்டுகொள்ள மாட்டார்கள் என்ற பயம் இவர்களுக்கு! தங்கள் வில்லம்புகளுடன் இரவு வேளைகளில்தான் இப்படி இவர்கள் காட்டைச் சுற்றிப் பார்க்க புறப்படுவதுண்டு. இவர்களைக் கண்டு களவில் மரம் அறுப்போர் மிரண்டு விடுவதில்லை. அடையாள இலக்கத் தகடு இல்லாத வாகனங்களில் காடுகளில் புகுந்து. பொலிஸ் ரோந்து இல்லாத பகுதிகளில் மரங்களை அறுத்து, இரகசியமாக இயங்கும், மரமறுக்கும் ஆலைகளில், வெட்டிய மரங்களைக் கொண்டு சென்று சேர்ப்பித்து விடுகிறார்கள்.

அவா இனத்தவர்களை அழிய விடாமல் பாதுகாக்க இவர்கள் பெரிய அளவில் போராடி வருகிறார்கள் என்பது ஒரு குறிப்பிடத்தக்க அம்சம். .இந்த வருடத் தேர்தலில் இதற்காகப் போராட, இவர்களில் ஒரு பெண் களத்தில் குதிக்க இருக்கிறார். இந்த அவா இனத்தவருக்காக மாத்திரமல்ல. பிரேசிலின் காடுகளில் காணப்படும் 300 வரையிலான காட்டுவாசி இனத்தவருக்காக இவர்கள் குரல் கொடுக்கிறார்கள்.

எங்குதான் "எட்டப்பர்கள்" இல்லை? தமது இனத்தவர்களில் சிலர், களவில் மரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுப்பவர்களுக்கு, தம்மைக் காட்டிக் கொடுக்க பின்வாங்குவதில்லை என்பது இவர்கள் கவலையாக இருக்கின்றது.

70களின் பிற்பகுதியிலும், எண்பது களிலும், நிர்மாணிக்கப்பட்ட, காட்டினூ டான ரயில் பாதைகள், இந்த அவா இனத் தவர் வாழ்க்கையைக் கூறுபோட்டுவிட்டன. பரந்து விரிந்த இவர்கள் வதிவிடங்கள், இரண்டாகத் துண்டாடப்பட்டு விட்டன. புதிதாகப் பலர் குடியேற வந்தார்கள். புதிய தொழிற்சாலைகள் முளைவிட்டன. இவர் களைச் சுற்றி ஒரு புது நகரம் உருவாக ஆரம்பித்தது. பரம்பரை பரம்பரையாக தாம் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்த நிலப்பரப்பில் பலவற்றை கைவிடும் நிலை இவர்களைத் தேடி வந்தது. நாம் சந்தித்த முதல் எதிரி முள் வேலிகள்தான் என்று விசனத்தோடு கூறு கிறார் ஒரு அவா இனத்தவர்!

தமக்குத் தேவையான மாமிசத்தைப் பெற, குரங்குகளையும் இவர்கள் வேட்டை யாடிக் கொல்கிறார்கள். சில சமயங்களில் தாய்க் குரங்கு கொல்லப்பட்டு, குட்டியொ ன்று அனாதரவாக விடப்பட்டு விட்டால், அதை எடுத்து வந்து செல்லப் பிராணிகளாக வளர்ப்பது இவர்கள் வழமை. தோளில் தூக்கி வைத்துக் கொண்டு தாம் போகும் இடமெல்லாம் குட்டியைக் கொண்டு செல்வ துண்டு.

"துப்பாக்கி வேட்டுக்கள் எம்மைப் பெரிதும் பயமுறுத்துகின்றன" என்கிறான் ஒரு இளைஞன். இவன் பேசுவதை, பிரேசி லின் பேச்சு மொழியான போர்த்துக்கல் மொழியில், மொழிபெயர்த்துச் சொல்கிறார் கள். வெளியார்கள் பெரிய நாய்களுடன் காட்டுக்குள் அத்துமீறி நுழைகிறார்கள். ஒரு தடவை இப்படி வந்தபோது, என் அப்பப்பா, ஒரு பெரிய நாயினால் கடித்துக் குதறப்பட்டு உயிரிழந்தார் என்று கவலையோடு சொல் கிறான் இந்த இளைஞன். இப்படியான சமயங்களில் நாம் நாலாபக்கமும் சிதறி ஓடி போய் விடுவோம். வடக்கு, தெற்கு என்று பலர் திசைமாறிப் போய்விட்டார்கள் என்பது இவன் கதை!

களவில் மரம் தறிப்பவர்கள் காடு களை எரிக்கிறார்கள். மரங்களை வெட்டிச் சாய்க்கிறார்கள். இன்னொரு பக்கம் சுரங் கப் பணிகள். இவர்களுக்கு அன்றாட உண வளிக்கும் ஆமைகள், குரங்குகள் என்று எல்லாமே சிதறி ஓடுகின்றன. கொல்லப்படு கின்றன. மரத்தில் காய்த்துக் குலுங்கும் கனிகள் நெருப்பில் வெந்து சாம்பலா கின்றன.

இந்த இலட்சணத்தில் இவர்கள் இனம் எப்படி உயிர்தப்பப் போகின்றது? இவர்கள் வாழ்க்கையே கேள்விக்குறிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவின் உள்ளத்தில் இருந்து ......

வரலாற்றுப் புகழ் பெற்ற ஊர்காவற்றுறை பிரதேசமானது வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தையும், கடலும் கடல்சார்ந்த நெய்தல் நிலத்தையும் ஒருங்கே கொண்ட வளம் கொழிக்கும் பிரதேசமாகும். இங்கு வாழும் மக்கள் தமது வாழ்வாதாரத் தொழிலாக விவசாயத்தையும், மீன்பிடித்தொழிலையும் மேற்கொண்டுள்ளனர். தங்களின் பாரம்பரிய தொழிலை நவீன தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன் நின்றுவிடாது தங்களின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை வளர்ப்பதிலும் பெரும்பங்காற்றுகின்றனர். அவர்களின் ஆற்றல்கள், அனுபவங்களை வெளிப்படுத்துவதற்கு தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகமும், பிரதேச கலாசார பேரவையும் இணைந்து வருடாந்தம் வெளியிடும் "அலைமொழி" சஞ்சிகையானது களம் அமைத்துக் கொடுத்துள்ளதுடன் பிரதேசத்தின் வரலாற்றுப் பாரம்பரியங்களை ஆவணப் படுத்தும் நூலாகவும் அமைந்துள்ளது.

மேலும் இம் மலரை ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள் எமது பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும், அனலைதீவு, எழுவைதீவு, போன்ற தீவுகளின் வரலாறுகள், ஆலய வரலாறுகள், பிரதேசம் சார்ந்த கவிதைகள் அழகியல் சார்ந்த கட்டுரைகள் ஆவணப்படங்கள் என்பன அணி செய்கின்றன.

"அலைமொழி" சிறப்புற வெளியிடுவதற்கு ஆசிச்செய்திகளைத் தந்துதவிய மதகுருமார்களுக்கும், வாழ்த்துச் செய்திகளை வழங்கி உதவியவர்களுக்கும், ஆக்கங்களைத் தந்துதவிய கலைஞர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்களுக்கும் மனப்பூர்வமான நன்றிகள். இம் மலரை வெளியிடுவதற்கு நிதியினை ஒதுக்கீடு செய்த வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இம் மலரினை வெளியிடுவதற்கு அனுசரணையை வழங்கிய கிருபா லேணர்ஸ் உரிமையாளருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக. உரிய காலத்தில் இம் மலரை வெளியீடு செய்ய உதவிய எவகிறீன் அச்சக உரிமையாளருக்கும், ஏனைய பணியாளர்களுக்கும் நன்றி தெரிவிக்க கடமைப் பட்டுள்ளோம்.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் பெருமையை எடுத்தியம்பும் "அலைமொழி - 04" இனை வெளியிடுவதில் பிரதேச கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் பேருவகை அடைவதுடன் தொடர்ந்தும் இம் மலர் மென்மேலும் சிறப்பாக வெளிவர எல்லாம் வல்ல இறைவனின் பாதக்கமலத்தைப் பணிந்து நிற்கின்றது.

**மலர்க்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபா லேணர்ஸ்

# KIRUBAA LEARNERS

கிருபா லேணர்ஸ்

DS.589 அரச அங்கிகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சி பாடசாலை

## இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## 021 222 4353, 021 492 3200, 071 4546 960



கல்விச்சேவைக்காக
ஜனாதிபதியால் வழங்கப்பட்ட விருது.

## ★★★ கல்விச்சேவையுடன் ஒன்றிய நிறுவனம் ★★★

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி.
- இரவு நேர வாகனப்பயிற்சி.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப்பயிற்சி.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

### யாழ்ப்பாணம்

- சுன்னாகம். 021 224 2022
- பருத்தித்துறை. 021 492 3201
- கச்சேரி. 021 222 6699
- ஆவரங்கால். 021 222 6688
- தெல்லிப்பளை. 021 224 3737
- சாவகச்சேரி. 021 227 0700
- நெல்லியடி. 021 300 6550

### கிளிநொச்சி

- கிளிநொச்சி. 021 228 5505
- பூநகரி. 021 320 1818
- விசுவமடு. 021 320 1515
- முழங்காவில். 021 300 6544

### மன்னார்

- மன்னார். 023 225 1656

### வவுனியா

- வவுனியா. 024 222 7777

புதிய கிளைகள் : சித்தங்கேணி 021 225 2500 | திருநெல்வேலி 021 221 4488

யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா

வட மாகாணத்தின் முதல்தர சாரதிப் பயிற்சி பாடசாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









எவகிறீன் அச்சகம்
693,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org